KALAIKESARI

# கலைக்கேசரி

CULTURE · HERITAGE · TRADITION · EVENTS · FASHION · INTERVIEWS · ENTERTAINMENT

VOLUME : 10 ISSUE : 02 Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 181 / News / 2019

## கோவில்குளத்தில் நாகரின் பண்பாட்டுச் சின்னங்கள்

## திருகோணமலையின் நான்கு தேசங்கள்



| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 100.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 125.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 6.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS..............CHF 10.00 | EUROPE..EU€ 7.00 |

ISSN 2012-6824
9772012682008

www.kalaikesari.com / April 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




17 APR 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Contents





## அட்டைப்படம்

தமிழ், சிங்களப் புதுவருட காலத்தின்போது பல்வேறு விதமான வீரஞ்செறிந்த மரபு விளையாட்டுக்கள் இடம்பெறுவது வழமையாக உள்ளது. இங்கே நாம் காண்பது மாட்டு வண்டி சவாரிக் காட்சியாகும். ஒன்றன்பின் ஒன்றாக மாட்டுவண்டிகள் வேகமாகப் பாய்ந்துவர வீதிமருங்கில் மக்கள் குழுமிநின்று ஆரவாரித்து தமது மகிழ்ச்சியைத் தெரிவித்து மகிழ்வார்கள்!
யாழ். கருகம்பனை சீராவலை சவாரித்திடலில் அண்மையில் நடைபெற்ற மாட்டு வண்டி சவாரி.






42 தீவகப் பற்றில் சைவமும் பௌத்தமும்

46 இந்து பண்பாட்டில் தேர்

53 திருமதி. அக்னஸ் இராசம்மா மரியாம்பிள்ளை







கோவில்குளத்தில் நாகரின் பண்பாட்டு சின்னங்கள் 06

திருகோணமலையின் நான்கு தேசங்கள் 10

நாகம் + நாகபந்தம் 15

சமூக நோக்குடைய எழுத்து, சமூக மாற்றத்துக்கான எழுத்து ஆகியவற்றுடன் உறவாடிய எஸ். அகஸ்தியர் 20

சேறுவில பௌத்த பள்ளி 24

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் தேசியப்பாடசாலை களுவாஞ்சிக்குடி 27

ஆடும் நடராஜர் திருவுருவம் பிரதிபலிக்கும் அபிநயங்கள் 32

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மாள் திருக்கோவில் 37

56 காலத்தை கடந்து நிற்கும் சமணர் கல்லோவியங்கள்!

66 திருச்செந்தூர் முருகன் ஆலயம்

80 Divine Path



**PUBLISHER**
Express Newspapers (Cey) (Pvt) Ltd.
185, Grandpass Road, Colombo 14,
Sri Lanka.
T.P. : +94 11 7322732
Fax : +94 11 2327827
kalaikesari@expressnewspapers.lk
www.kalaikesari.com

**EDITOR**
Annalaksmy Rajadurai
luxmi.rajadurai@yahoo.com

**CONTRIBUTORS**
Prof. S. Pathmanathan
Prof. Saba Jayarasa
E. Pakkiyarajan
Aruna Selladurai
Prof. Kanagasabapathi Nageswaran
Dr. T.Jeevaraj
Mrs. Pathma Somakanthan
Dr. Vivian Sathiyaseelan
Dr. Shanmugasarma Jeyaprakash
Dr. A. Sathiskumar

**PHOTOS**
M. Newton
K. Nishyanthan
J. Sujeewakumar
S. Mayurapriyan

**LAYOUT**
M.Sritharakumar
P.S.Diroshini

**ADVERTISING & SUBSCRIPTIONS**
V.Shivakumar - 071 6845751
shivan@encl.lk

**CIRCULATION**
T.Ravi - 077 7751021



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ISSN 2012 – 6824



# ஆசிரியர் பக்கம்

Editor's Note

வணக்கம் கலைக்கேசரி வாசகர்களே!

To our esteemed readers,

**April, 2019**

அனைவருக்கும் எமது இனிய தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துக்கள்!

உலகின் இனங்கள் யாவும் தத்தம் சமய, கலாசார நம்பிக்கைகளின் அடிப்படையில் வெவ்வேறு தினங்களில் புத்தாண்டைக் கொண்டாடி மகிழ்வது காலங்காலமாக நடைபெறும் ஒரு மரபாக உள்ளது. நமது நாட்டினைப் பொறுத்தவரை தமிழ்ப்புத்தாண்டு தினமே எமது சிங்களச் சகோதரர்களின் புத்தாண்டு தினமாக கொண்டாடப்படுவதும் தெரிந்ததே.

ஓர் இனத்தின் தொன்மையை அதன் மொழி, மதம் மற்றும் கலாசாரப் பாரம்பரியங்களே எடுத்துக்காட்டும். இவ்விடத்தில் இலங்கையில் எமது இனத்தின் தொன்மை குறித்து சிந்தனை தோன்றுவதும் இயல்பானது. நமது நாட்டினைப் பொறுத்தவரை தமிழினத்தின் இருப்புக் குறித்து பல்வேறு அகழ்வாராய்ச்சிகள் எமது ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

இந்த ஆய்வுகள் மூலம் தமிழர் தம் தொன்மை குறித்த அகழ்வாராய்வுச் சான்றுகளும் முன்வைக்கப்பட்டு மக்கள் தம் கவனத்தைக் கவர்ந்துள்ளன. அந்தவகையில், வரலாற்று அறிஞர்களின் ஆய்வுக்கட்டுரைகள் பலவற்றை கலைக்கேசரியும் பிரசுரித்து வந்துள்ளதை அறிவீர்கள். இது காலத்தின் தேவையாகும்.

இந்த வகையில், தமிழ் நாட்டில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த அகழ்வாராய்வுகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை அறிவோம். சங்க காலத்துக்கும் முற்பட்ட தமிழிலக்கியச் சான்றுகளுக்கும் முற்பட்ட தமிழின தொன்மை குறித்த சான்றுகளை வெளிப்படுத்தி ஆச்சரியமான தகவல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. சிந்துவெளி நாகரிகத்திக்குச் சமமான வைகைக்கரை நகர நாகரிகம் தமிழ்நாட்டில் இருந்துள்ளது என்ற தகவலும் வெளியிடப்பட்டு இருக்கிறது. இந்த வகையில் கீழடி ஆய்வு மிகவும் குறிப்பிடத்தக்கது எனத் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்த கட்டுரை ஒன்றினை கலைக்கேசரியும் பிரசுரித்துள்ளது. பழம் பெருமை மகிழ்ச்சிக்குரியது. அவை வெளிப்படுத்தும் ஆதாரங்கள் இளைய சமுதாயத்தினருக்கு புதிய தொன்மையையும், நம்பிக்கையையும் தரும் என்றே கூறலாம் அல்லவா!

நன்றி. வணக்கம்.

அன்புடன்
அன்னலட்சுமி இராஜதுரை

Wish you all a very happy Tamil New Year!

People of various ethnic groups of the world celebrate their New Year on different days, according to their religious and cultural beliefs. As far as our country is concerned, we all know that our Sinhalese brethren celebrate New Year on the same day in April as Tamils also do.

Language, religion and cultural traditions show the heritage of an ethnic community. Giving a little thought to our heritage is natural at this juncture. In this sphere, various archaeological excavations were made in the Tamil areas regarding this, by learned historians and so many archaeological evidences for the antiquity of Tamil in these areas were also brought to light . Various articles were also written in Kalaikesari regarding this by our historians.

And it is also relevant to note here some archaeological evidences especially from Keelady excavations in the Madurai district, said to have given substantial proof to the antiquity of Tamil race beyond the Sangam Literature age and sangam age.

And it is said that valid proofs surfaced of the existence of an urban civilization in the Vaikai river region in par with Indus Valley civilization. Kalaikesari has also carried an article about this in the 2019 January issue.


Glory of the past always gives a sense of pride. These findings will definitely give youngsters a sort of vigour and confidence. Is in it?

Please read and enjoy.

Thank you.

Annalakshmy Rajadurai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோவில்குளத்தில் நாகரின் பண்பாட்டுச் சின்னங்கள்

■

**கலாநிதி சி.பத்மநாதன்,**
தகைசார் பேராசிரியர், வரலாற்றுத்துறை,
பேராதனைப்பல்கலைக்கழகம்.

கடந்த பத்து வருடங்களில் இலங்கை வரலாறு தொடர்பான மிகவும் சிறப்பான தொல்பொருட் சின்னங்கள் கிடைத்துள்ளன. அவை பூர்வ குடி களில் ஒரு சாராரான நாகர் பற்றியவை, பல திறத் தவை. அவற்றுட் சில வழிபாட்டுச் சின்னங்கள்; நாக வழிபாடு, சைவம், பௌத்தம் என்பன பற்றியவை. வேறு சில செக்கு, உரல், அம்மி, ஆட்டுக்கல் முதலியவை. அவை உணவுப் பண்டங்களைத் தயாரிக்கும் சாதனங்கள், அவை பொதுவாகக் கருங்கல்லிற் குடையப்பட்டவை.

கல்லிருக்கைகள், குகைகள், தூண்கள், தூண் தாங்கு கற்கள், சுவர்க் கற்கள், தூபிகளின் நுனிப் பகுதிகள் போன்றவை இன்னொரு வகையானவை. உலோக வார்ப்பிலான விளக்குகள், வழிபாட்டுச் சின்னங்கள் என்பன வேறொரு விதமானவை. பொதுவாக எல்லாவற்றிலும் தமிழ்ச் சொற்கள் எழுதப்பட்டிருக்கும். ஆதியான தமிழ் எழுத்து க்களான தமிழ்ப் பிராமி வரி வடிவங்களில் அவை எழுதப்பட்டிருக்கும். பெயர்கள் எழுதிய பொருட் கள் அனைத்தும் ஆதி வரலாற்றுக் காலத்துக்கு (கி.மு.250-கி.பி.360) உரியவை.

இவ்வாறான அரும்பொருட்கள் கிழக்கிலங்கை யில், குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அடையாளங் காணப்பட்டன. அவற்றின் கண்டு பிடிப்புகள் அங்குள்ள ஆர்வலர்களின் வரலாற்றுச் சிறப்பு மிக்க சாதனையாகும். இவற்றின் பிரதி பலனாக வடக்கிலே வன்னியிலும், யாழ்ப்பாணத் திலும் இவ்வகையான எண்ணிறந்த சின்னங்கள் உள்ளமையினைக் கண்டறிய முடிந்தது. புத்தளம், கற்பிட்டி போன்ற பிரதேசங்களிலும் இவ்விதமான பண்பாட்டுச் சின்னங்கள் காணப்படுகின்றன. அநுராதபுரம், பொலன்னறுவை, இசுறுமுனியா, யாப்பகூவ முதலானவற்றிலும் சிற்பங்களில் தமிழ்ப் பிராமி வடிவங்களிற் பெயர்கள் எழுதப்பட்டுள் ளமை இதுவரை பலரும் புரிந்து கொள்ளாத அதிசயமாகும்.

தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் ஆதிகால இலங்கை வரலாற்றைப் பொறுத்தவரையில் புரிந்து ணர்வில் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தி விட்டன. இலங்கையின் உற்பத்தி முறை வளர்ச்சி யிலும், பண்பாட்டு வளர்ச்சியிலும் நாகர் ஏற்படுத் திய செல்வாக்கினை இப்பொழுது உறுதியாகவும் அறிவியல் அடிப்படையிலும் விளக்க முடிகின்றது. இலங்கையிலே தமிழ் மொழியின் வரலாறும் அம்மொழியினைப் பேசும் சமூகத்தின் வரலாறும் கி.மு.300 ஆம் ஆண்டுக்கும் முற்பட்ட காலம் முதலானவை என்பதும் இப்பொழுது தெளிவாகி யுள்ளது. ஆதிகால இலங்கையின் பண்பாடுகளும் வழிபாட்டு நெறிகளும் பன்முகமானவை என்பதும் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் மூலம் வெளிப் படையாகின்றன.

ஆதியில் நாக வழிபாட்டு நெறியைப் பின்பற்றிய நாகர் காலப்போக்கிலே சைவ சமயம், பௌத்தம் என்பனவற்றையும் பின்பற்றினார்கள். அதனால் கலப்புகள் ஏற்படலாயின. நாகலிங்க உருவங்களும், ஐந்தலை நாக படத்தின் கீழ் கடவுட் படிமம் அமைந்த சிற்பங்களும், நாக வடிவம் கலந்த பௌத்த படிமங்களும் அதற்கான உதாரணங் களாகும். நாகர் சமூகத்தின் வழமைகளை, சமய உறவுகளைப் பற்றிய நவீன காலச் சிந்தனைகளின் அடிப்படையிலே புரிந்து கொள்ளவியலாது. அவர்களால் வேறுபாடின்றி எல்லாச் சமய சம்பிரதாயங்களையும் பின்பற்ற முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கோவில்குளம் என்னும் மட்டக்களப்பு மண் முனைப் பகுதியிலே, ஏரிக்கரையில் அமைந்துள்ள ஓரிடம், முற்காலத்திலே கோயிலும் குளமும் அமைந்திருந்த காரணத்தினால் அதன் பெயர் தோன்றியிருக்க வேண்டும். இப்பொழுது, அங்கு தொல்பொருள்திணைக்களத்தினர்அகழ்வாய்வு செய்கின்றனர். நாகர் பயன்படுத்திய பொருட்களின் எச்சங்கள் கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. அகழ்வாய்வு பற்றிய அறிக்கைவெளி வருமிடத்து அவற்றைப் பற்றி அறிந்துகொள்ள முடியும்.

இங்கு விளக்கப்படும் பொருட்களுக்கும், இப்பொழுது நடைபெறும் ஆய்வுகளுக்கும் எதுவிதமான தொடர்புகளும் இல்லை. அவை நெடுங்காலத்திற்கு முன்பு தலத்திலே கிடைத்த பொழுது ஆர்வலர்களாற் பாதுகாக்கப் பெற்றவை. இக்கட்டுரை பல வருடங்களுக்கு முன்பு யாரோ எமக்கு அனுப்பிய புகைப்படங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவை. அவை இங்குதான் முதன்முதலாக வெளியிடப்படுகின்றன.

எல்லாமாக ஐந்து வகையான சின்னங்கள் உள்ளன. அவற்றில் முதல் மூன்றும் வழிபாட்டுச் சின்னங்கள்: (1)நாகக்கல், (2) சிவலிங்கம், (3)புத்தர் படிமம், அவை எல்லாவற்றிலும் மணிணாகன் என்னும் பெயர் காணப்படுகின்றது. மணிணாகன் என்பது நாகரின் கடவுட் பெயர். நாகர் ஆதியில் நாகத்தை தெய்வீக ஆற்றலுடையதென்று கருதி வழிபட்டனர். கற்கள், தூண்கள் பிரமாண்டமான அளவுடையபாறைக் கற்கள் போன்றவற்றில் மணிணாகன் என்ற பெயர் வெட்டப்பட்டுள்ளது. ஈரலக்குளம் வேரத்தில் நாகர் வழிபாட்டுச் சின்னமாகப் பயன்படுத்திய நிறைகுடம் போன்ற சிற்றுருவக்கல்லில் நுண்ணிய வடிவத்தில் மணிணாகன் என்னும் பெயர் எழுதப்பட்டுள்ளது. ஆனால் கதிரவெளியிலே, தெருவோர மாகவுள்ள, நீள்வட்டவடிவமான பிரமாண்டமான பாறைக் கல்லின் சிலவிடங்களில் மணிணாகன் என்ற பெயரை உழி கொண்டு வெட்டியுள்ளனர்.

காலப்போக்கில் ஐந்தலை நாக வடிவத்தைக் கல்லிற் செதுக்கி, அதனை வழிபாட்டுச் சின்னமாகக் கொண்டனர். அதில் வழமையாக மணிணாகன் என்ற பெயர் வெட்டப்பட்டிருக்கும். அவ்வாறான வடிவங்களை ... கருதி வயல்களிலும் குளக்கட்டுகளிலும் கோயிற் புறச் சுவர்களிலும் வைத்தனர். அவற்றில் அநுராதபுரத்து ஜேதவனாராம சேதியத்தின் ஐந்தலைநாக வடிவமே உருவில் மிகப் பெரியது. கூட்டம் பொக்குன என்னும் இணையேரியின் அருகிலும் அபையகிரி விகாரை வளாகத்திலும் இவ்வாறான பெருஞ் சிற்பங்கள் காணப்படுகின்றன. இலங்கையில் இந்து சமயம், பௌத்தம் என்பன தொடர்பான கட்டுமானங்களில் நாக சிற்பங்கள் பொதுவான அம்சமாகிவிட்டன.

மட்டக்களப்பில் நாகபடுவான், குசலான்மலை, களுவாஞ்சிக் குடி போன்ற இடங்களில் ஐந்தலை நாக சிற்பங்கள் காணப் படுகின்றன. அவற்றிலே களுவாஞ்சிக் குடி கண்ணகி அம்மன் கோயிலின் சுற்றுப் பிரகாரத்திலுள்ள சிற்பமே மிகப் பெரியதும் பழைமையானதுமாகும். கல்லின் சிதைவின் காரணமாக எழுத்துகள் தெளிவற்று விட்டன. அது கி.மு.300 வருடங்களுக்கும் முற்பட்டதாகலாம். கோவில் குளத்திற் கிடைத்துள்ள நாகக்கல் மிகவும் புராதனமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐந்து தலைகளின் முகங்களும் எழுத்துகளும் மிகவும் சிதைவடைந்த நிலையிற் காணப்படுகின்றன. அது நாகரின் மிகப் பழைமையான குடியிருப்பொன்றின் அடையாளமாகும்.

அங்கு கிடைத்த இரண்டாவது சமய சின்னம் பெயர் பொறித்தலிங்க வடிவம். முன்பு குறிப்பிட்டவாறு அதிலும் மணிணாகன் என்ற பெயர் பொறிக்கப் பட்டுள்ளது. அண்மைக் காலத்தில் ஐந்தலைநாக வடிவம் ஒன்றை அதன் மேலே பொருத்தியுள்ளனர். லிங்கம் உலோக வார்ப்பானது. அதுவும் இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முற்பட்டது. கிழக்கிலங்கையில் இதுவரை கிடைத்துள்ள லிங்கவடிவங்களில் இது மட்டுமே உலோக வார்ப்பானது. மற்றவை எல்லாம் கல்லிற் செதுக்கிய வடிவங்கள்.

மூன்றாவது படிமம் புத்தர் படிமம். அதுவும் உலோக வார்ப்பானது. முன்னையவற்றிலும் காலத்தாற் பிற்பட்டது. அது கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு உரியதென்று கருதலாம். எமது உப கண்டத்தில் கி.பி. முதலாம் நூற்றாண்டிலேதான் பௌத்த படிமங்கள் முதன்முதலாக உருவாக்கப்பட்டன. எனவே, இலங்கையில் இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டபுத்தர் படிமங்கள் இருந்தன என்றுகருத இடமில்லை.

இங்குள்ள புத்தர் படிமம் பத்மாசனக் கோலமானது, அதன் தலைப்பாகத்தில் ஐந்தலைநாக வடிவம் அமைந்திருப்பது அதன் சிறப்பம்சமாகும். படிமத்தின் இரு பக்கங்களிலும் பாம்பு வடிவத்தின் பகுதிகள் அமைந்திருப்பது வேறெங்கும் காணப்படாத ஒரு சிறப்பம்சம். கோவில்குளத்தில் ஆதி காலத்தில் வாழ்ந்த நாகரிடையே பௌத்த சமயச் செல்வாக்கு ஏற்பட்டிருந்தமைக்கு இப்படிமம் உறுதியான ஆதாரமாகும்.

வாசகம் பொறித்த வட்டக்கல் வேறுவிதமான ஒரு சின்னம். அது வழிபாட்டுச் சின்னமன்று. அது அரச முத்திரையின் அச்சு வடிவத்தின் மாதிரி வடிவமாகும். இக்கருத்து உறுதியாகுமிடத்துக் கோவில்குளம் ஆதிகாலத்தில் நாகரான வேளிரின் அதிகாரமையம் என்று கொள்ள நேரிடும். அதில் எழுதப்பட்ட வாசகம் அதற்கு ஆதாரமாகின்றது. வேள்ணாகன் மகன் வேள் கண்ணன், வேள் கண்ணன் மகன் வேள்ணாகன் என்ற வசனங்கள் அதிலே காணப்படுகின்றன. எழுத்துக்கள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்குரிய தமிழ்ப் பிராமிவரி வடிவங்கள்.

மட்டக்களப்பு தேசத்தின் பல இடங்களிற் கிடைத்த கல்வெட்டுக்களின் மூலம் ஏறக்குறைய இருபதுவேள் புலங்களைப் பற்றி அறிய முடிகின்றது. கோவில்குளத்தை மையமாகக் கொண்டு நாகரின் வேள்புலம் அமைந்திருந்ததென்று இப்பொழுது கருத முடிகின்றது. இப்பொழுது நடை பெறுகின்ற அகழ்வாய்வின் மூலம் நாக அரசர் வெளியிட்ட நாணயங்கள் கிடைக்குமிடத்து இக்கருத்தினை எவராலும் நிராகரிக்க முடியாது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலே, கிழக்கிலங்கையில் மஹியங்கனை முதலாக அநுராதபுர அரசின் எல்லை வரையான பகுதியில் 31 தமிழ் அரசர்கள் அரசு புரிந்தமை பற்றி மகாவம்சம் குறிப்பிடும். இக்குறிப்பு ஸீஹளவத்துப்பகரண என்ற நூலிலும் காணப்படுகின்றது. இக்குறிப்புகளை அண்மைக்காலத்தில் அடையாளங் கண்டதமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. நாகர் குலத்துவேளிரைப் பாளி, மொழியிலுள்ள நூல்கள் தமிழ் அரசரென்று அடையாளப் படுத்துகின்றமை குறிப்பிடற்குரியது.

உலோகவார்ப்பான சிறிய மணியொன்றும், மலர்மொட்டு வடிவங்களும் ஐந்தாவது வகைக்குரிய பொருட்களாகும். அவை வழிபாடு தொடர்பான சின்னங்கள். அவை ஏனையவற்றைக் காட்டிலும் காலத்தாற் பிற்பட்டவைபோலத் தெரிகின்றன.

கோவில் குளத்திற் கிடைத்துள்ள பண்பாட்டுச் சின்னங்கள் நாகரைப் பற்றியவை. அவை நாகரின் வேள்புலம் ஒன்றைப் பற்றியவை. அவை அங்கு நாகவழிபாடு, சைவம், பௌத்தம் என்பன செல்வாக்குப் பெற்றிருந்தமைக்கான அடையாளங்களாகும். அவற்றிலே, தமிழ் மொழிச் சொற்கள் தமிழ்ப் பிராமி வடிவங்களில் எழுதப்பட்டுள்ளமை இன்னுமொரு பிரதான அம்சமாகும். அகழ்வாய்வுகளின் மூலம் நாக அரசர் வாழ்ந்த கட்டடங்களின் அடையாளங்கள், ஆதி வரலாற்றுக் காலத்திற்குரிய கரும்-செம் மட்பாண்டங்கள், உரோமாபுரித் தொடர்புடைய றுலெற் மட்கலங்கள் என்பவற்றின் பகுதிகள் முதலான பொருட்கள் கிடைக்கும் என்பதை எதிர்பார்க்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிக 'விகாரி' புத்தாண்டு!

தமிழ்ச் சித்திரை மாதத்தில் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு தினமாகக் கொண்டாடுவது மரபாக உள்ளது. இத்தினமே சிங்கள மக்களதும் புத்தாண்டு தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. தேசிய விடுமுறை தினமான இந்நாளை மக்கள் மிக ஆவலுடன் வரவேற்றுக் கொண்டாடு கிறார்கள். விகாரி புதிய தமிழ்ப் புத்தாண்டின் பெயராகும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை புத்தாண்டுப் பிறப்பன்று அதிகாலை எழுந்து, மருத்துநீரை (ஆலயங்களில் பெறப்படும்) தலையில் வைத்து ஸ்நானம் செய்து, புத்தாடை அணிந்து, தத்தம் வச திக்கேற்ப அலங்கரிக்கப்பட்ட இல்லத்தில் விளக்கேற்றி இறைவழிபாடு செய்வதும், பின் குடும்பத்தவர்களாக ஆலயம் சென்று சுவாமி தரிச னம் செய்வதும், இல்லத்தில் பொங்கல் மற்றும் தின் பண்டங்களைச் செய்து, விசேட விருந்து தயார் செய்து, குடும்பத்தவர், உறவினருடன் சேர்ந்து அருந்தி மகிழ்வதும் மரபான ஒன்றாகும்.

புத்தாண்டின் பிறப்பை ஒட்டி ஒருவருக்கொரு வர் வாழ்த்துத் தெரிவித்து மகிழ்வதும், பஞ்சாங் கத்தில் குறிப்பிடப்படும் விசேட நேரத்தில் பெரியவர்கள், குழந்தைகள் மற்றும் பிள்ளைகள், உறவினர்களுக்கு கைவிசேஷம் அளித்து தமது அன்பை வெளிப்படுத்துவதும் மற்றுமொரு பண்பாடாகும். ஆலயங்களில் காலைவேளை விசேட திருவிழாக்கள் நடைபெறும்.



தமிழ்ப் புத்தாண்டையொட்டி மரபு ரீதியாக கிராமங்களில் இடம்பெறும் மற்றுமொரு விசேஷமாக அமைவது நாள்வேலை அல்லது ஆயுத பூசை என அழைக்கப்பெறும் வருடத்தின் முதல்நாள் கைவினையாளர்களால் அல்லது தொழிலாளர்களால் மேற்கொள்ளப்படும் ஒரு கருமமாகும். தெய்வப் படங்களை வைத்து அதன் முன் தாங்கள் தொழிலுக்கு உபயோகிக்கும் உபகரணங்கள் அல்லது கருவிகள், ஆயுதங்களை வைத்து பூசை வழிபாடு செய்து சுப ஆரம்பமாக சிறிது வேலையும் செய்து வைப்பது மரபாகும். நல்ல நேரத்தில் தமது குலத்தொழிலை மேற்கொள்வது என்பது இதன் அர்த்தமாகும். இக்கருமம் தத்தம் வீட்டிலோ அல்லது தொழில் தளத்திலோ மேற்கொள்ளப்படும் ஒன்றாகும்.

புத்தாண்டினையொட்டி தமது நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் வீட்டுக்கு பரிசுப் பொருட்களுடன் சென்று உறவாடுவது முக்கிய மானதொரு பண்பாடாகவும் அமைகிறது.

அத்துடன் இளைஞர்கள் விளையாட்டுக்கள் பலவற்றில் உற்சாகமாக ஈடுபடுவதனை எங்கும் காணலாம். ஓட்டப்போட்டி, மாட்டுச்சவாரி, சைக்கிள் ஓட்டப்போட்டி, கயிறு இழுத்தல் போட்டி, விசேடமாக தமிழ் இளைஞர்களிடையே போர்த் தேங்காய் அடிக்கும் விளையாட்டு போன்றவை இடம்பெற்று மக்கள் மகிழ்ச்சியாய் புத்தாண்டினைக் கொண்டாடுவர். ஆடல், பாடல் நிகழ்ச்சிகளும் ஆங்காங்கு உற்சாகமாக நடை பெறும்.

அவ்விதமே சிங்கள மக்களும் தமது பௌத்த கலாசாரத்திற்கேற்பவும் சிங்கள மரபு, கலாசாரத் திற்கேற்பவும் புத்தாடை அணிந்து கடவுள் வணக்கம், பெரியோரைப் பணிந்து ஆசிர்வாதம் பெறுதல், விருந்துபசாரம் அளித்து மகிழ்தல், புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபட்டு மகிழ்தல், ஆடை அலங்காரப் போட்டி ஆகியவற்றில் ஈடுபட்டு கொண்டாடி மகிழ்வர்.

**பொங்கும் மங்களம் எங்கும் தங்குக! பொலிக புத்தாண்டு! என வாழ்த்துவோம்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையின் நான்கு தேசங்கள்

Dr. த.ஜீவராஜ் (MBBS, MCGP)



தேசம், நாடு தொடர்பாக பல்வேறுபட்ட விவாதங்கள் பரவலாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலத்தில் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தேசம் எனும் கோட்பாடு என்றென்றும் நிரந்தரமாக இருந்தது இல்லை. அது காலத்துக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக்கொண்டே வந்திருக்கிறது. இத்தகைய சூழலில் அரசியல், புவியியல், பண்பாட்டியல் சார்பாக நாடு, தேசம் என்பனவற்றை நாம் இன்று பிரித்தறிய முயன்று வருகிறோம்.

தேசம் என்பது பெரும்பாலும் ஒரே மொழிமரபு, இனக்குழு, குடிவழக்கு போன்ற ஒன்றித்த இனக் குழுக்கள் வாழும் பகுதிகளைக் குறிக்கிறது. அத்தோடு தொடர்ந்து வரும் வரலாறு, பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற பூமி போன்ற கூறுகளையும் இது உள்ளடக்கியதாக இருக்கிறது.

வடமொழிச் சொல்லான தேஷம் என்பதன் தமிழ் வடிவம் தேஎம் ஆகும். அதன் திரிபடைந்த வடிவமே இன்று நாம் பயன்படுத்தும் தேசம். வட சொல்லைத் தமிழில் எழுதும்போது வடசொல்லிற்கே உரிய எழுத்தை நீக்கி விட்டு அவ்விடத்தில் இருமொழிக்கும் பொதுவான எழுத்தைச் சேர்த்து வழங்கவேண்டும் என்பது தொல்காப்பிய எச்சவியல் விதியினால் அறியப்படுகிறது. 'வட சொற் கிளவி வடவெழுத் தொரீஇ-எழுத் தொடு புணர்ந்த சொல்லாகும்மே' என்கிறது தொல்காப்பியம். தேஷம் என்ற வடசொல்லில் உள்ள ஷ வடவெழுத்தாகும். இதை நீக்கி விட்டு அதற்கு மாற்றாக இரு மொழிக்கும் பொதுவான உயிரெழுத்தான எகரத்தைச் சேர்த்து தேஎம் என்றெழுத வேண்டுமென்கிறார் தொல் காப்பிய நூற்பாவிற்கு உரை விளக்கம் எழுதிய சேனாவரையர்.


சங்க இலக்கியங்களில் தேஎம் என்ற சொல்லின் பயன்பாடு தொடர்பில் விரிவாக ஆராய்ந்த புலவர் சு. முருகேசன் அவர்கள் 'தேசம்' வடசொல்லே" என்ற தனது ஆய்வுக் கட்டுரையில் தேஎம் என்னும் சொல் பத்துப்பாட்டில், பதினைந்திடங்களிலும், எட்டுத் தொகையில், நாற்பத்திநான்கிடங்களிலும், பதினெண்கீழ்க்கணக்கில் மூன்றிடங்களிலுமாக அறுபத்தியிரண்டிடங்களில் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் குறிப்பிடுகிறார். இவற்றில் முப்பதிடங்களில் திசை, திக்கு, வழி, இடம் என்று இடப்பொருளில் வருவதையும். மூன்றிடங்களில் தேயம் என்று இடையினயகரம் பெற்று அழிவு, கலக்கம் என்னும் பொருளில் வருவதையும் பதிவுசெய்கிறார்.

அத்துடன் சங்க இலக்கியங்களில் தேஎம் என்னும் சொல் நாடு என்னும் பொருளில் முப்பத்தியிரண்டு இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவற்றில் ஆறிடங்களில் தன்னாட்சி செல்லாத வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.






திருகோணமலையைப் பொறுத்தமட்டில் அது நான்கு வன்னிப் பிரிவுகளாக நிர்வாக ரீதியில் இயங்கி வந்ததினை ஐரோப்பியரின் ஆவணங்கள் மூலம் அறியமுடிகிறது. இந்நான்கு வன்னிப் பிரிவுகளும் திருக்கோணேச்சரத்துடன் தொடர்பு டையவை. திருக்கோணேச்சரம் திருகோணமலைப் பிராந்தியத்தின் நிலவுடைமை மீது கொண்டிருந்த அதிகாரத்தினைப் பிரதிபலிப்பவை.

பல, அகன்ற இடத்தையுடைய, பணிந்த வருள்ள தேசமென்று வருகிறது. ஒன்பது இடங்களில் பகைவர் தேசமென்றும், ஆறிடங்களில் முன்பின் அறியாத தேசமென்றும், பதினைந்திடங்களில் மொழி வேறாகிய தேசமென்றும், ஓரிடத்தில் வடுகர் தேசமென்றும் வருகிறதென்று புலவர் சு. முருகேசன் அவர்கள் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு சங்க இலக்கியங்களில் தேஎம் என்று வழங்கிவந்த சொல் பின்னர் திரிபடைந்து இன்று நாம் பயன்படுத்தும் தேசம் என்றானது. இன்றைய நிலையில் தேசம் என்பது தமக்கே உரிய புவியியற் பரிமாணங்களைக் கொண்டது. எல்லைகள் குறித்து அடையாளங் காணக்கூடிய நிலப்பகுதிகளைத் தன்னகத்தே கொண்டவை. இவை தனித்துவமான வரலாற்று அனுபவங்களால் உருவான சமுதாய அமைப்பினைப் பிரதிபலிப்பவை. மொழி வழியாக வும், சமூக வழமைகள், பண்பாட்டு அம்சங்கள் என்பவற்றின் வழியாகவும் உருவாகிய பொதுமை யினை உணர்ச்சி பூர்வமாகப் பிரதி பலிப்பது தேசம் என்றழைக்கப் படுகிறது. தமிழரின் அரசியல் நோக்கில் அமைந்த சிந்தனை வளர்ச்சியின் ஒரு பிரதான கட்டமென பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் தேசம் தொடர்பில் தனது கருத்துக்களைப் பதிவு செய்வது இங்கு கூர்ந்து கவனிக்கத்தக்கது.

திருகோணமலையைப் பொறுத்தமட்டில் அது நான்கு வன்னிப் பிரிவுகளாக நிர்வாக ரீதியில் இயங்கி வந்ததினை ஐரோப்பியரின் ஆவணங்கள் மூலம் அறியமுடிகிறது. இந்நான்கு வன்னிப் பிரிவுகளும் திருக்கோணேச்சரத்துடன் தொடர்பு டையவை. திருக்கோணேச்சரம் திருகோணமலைப் பிராந்தியத்தின் நிலவுடைமை மீது கொண்டிருந்த அதிகாரத்தினைப் பிரதிபலிப்பவை. இந்நான்கு பிரிவுகளும் பற்றுக்கள், தேசங்கள் என அழைக்கப் பட்டு வந்தன. அவையாவன திருகோணமலைப் பற்று (தேசம்), கட்டுக்குளப் பற்று (தேசம்), கொட்டியாரப் பற்று (தேசம்), தம்பலகாமப் பற்று (தேசம்) என்பனவாகும். இங்கு குறிப்பிடப்படும் சுயாட்சி நிறைந்த இந்நான்கு வன்னிப் பிரிவுகளை யும் ஐரோப்பியரின் ஆவணங்கள் 'இராட்சியங்கள்' என்றே வரையறுக்கின்றன என்பது குறிப்பிடத் தக்கது. இவற்றினை நான்கு வன்னிமைகள் ஆட்சி செய்தனர். இந்நான்கு தேசத்தினதும் அதிகார மையமாக திருக்கோணேச்சரம் இருந்தது.

திருகோணமலைத் தமிழர்களிடையே தேசம் என்ற சொல் வழங்கப்பட்டது தொடர்பில் நமக்குக் கிடைக்கும் முதல் ஆவணம் வெருகல் 'ஸ்ரீ சித்திர வேலாயுதர்காதல்' எனும் நூல். தம்பலகாமத்தினைச் சேர்ந்த ஐ. வீரக்கோன் முதலியார் என்பவரால் பதினேழாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் வெரு கலில் அமைந்திருக்கும் சித்திரவேலாயுதர் சுவாமி மீது பாடப்பட்ட இந்நூல் கொட்டியாரப்பற்று 'இருமரபுந்துய்ய இளஞ்சிங்கம்' எனும் வன்னிபத் தின் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டிருக்கிறது.

**"துன்னு மிருமரபுந் துய்யவிளஞ் சிங்கமெனும்**
**வன்னிமை பொற் பாதம் வணங்கையினீ சொல்லாதை**
**வன்னிமை தேசத்தார் மகாநாடு தான் கூடி**
**மின்னுமெழில் மண்டபத்தில் வீற்றிருக்கும் வேளையிலே"**

எனும் பாடல் வரிகள் தேசத்தார் மகாநாடு பற்றிக் குறிப்பிடுகிறது.

இந்நூல் அரங்கேற்றம் ஒரு பெருவிழாவினை ஒத்த வைபவமாக இருந்தது. இது வெருகல் சித்திரவேலாயுதர் ஆலய மண்டபத்தில் தேசத்தோர் சபையோராக இருக்க அரங்கேறியது. இங்கு தேசத் தோர் என விளிக்கப்படுவது கொட்டியாரப் பற்று தேசத்தவரை எனக்கருதப்படுகிறது. இங்கு குறிப்பிட வேண்டிய முக்கிய அம்சம் தேசத்தவரால் கூட்டப்பட்ட இக்கூட்டம் மகாநாடு என்று அழைக்கப்பட்டிருக்கிறது. இது வன்னிபத்தின் தலைமையில் நடைபெற்றதையும் இப்பாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கிறது. 17ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் திருகோணமலைப் பிராந்தியங்களை தேசம் எனக் குறிப்பிடும் சமூக வழக்கினையே இந்நூல் ஆவணப்படுத்தியிருக்கிறது.

மட்டக்களப்பு தேசம், முக்குவதேசம், யாழ்ப்பாண தேசம் எனும் சொற்றொடர்கள் இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளில் முற்காலங்களில் வழங்கி வந்ததினை பண்டைய நூல்களிலும், ஆவணங்கள் மூலமாகவும் அறியமுடிகிறது. இவற்றுடன் கிழக்கிலங்கையின் பல ஆலயங்கள் தேசத்துக்கோயில் என இன்றும் வழங்கி வருவதனைக் காணக் கூடியதாக உள்ளது. வெருகல் சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயம், திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் போன்றன தற்போதும் அப்பிரதேச மக்களால் தேசத்துக் கோயிலாக கொண்டாடப்படுவதனை இன்றும் காணலாம்.

தம்பசிட்டி, வியாபாரிமூலையில் கிடைக்கப் பெற்ற ஒல்லாந்து அரச முத்திரையுடன் கூடிய தோம்புகளின் அடிப்படையில் (திருக்கோணேச்சரம் போர்த்துக்கீசரினால் முற்றுக அழிக்கப்பட்டதன் பின்னர்) தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம் திருகோணமலைப் பற்று, கட்டுக்குளப் பற்று, கொட்டியாரப் பற்று, தம்பலகாமப் பற்று ஆகிய நான்கு பிரதேசத்தினைச் சேர்ந்த 33 ஊரவர்கள் கொண்டாடி மகிழும் கோயிலாக இருந்ததினை அறியக்கூடியதாக இருக்கிறது. எனவே இவ்வாலயம் பழைமையில் தேசத்துக் கோயிலாகப் போற்றப்பட்டிருக்கும் என்பதனைப் புரிந்து கொள்ள முடியும். எனினும் காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்களால் தேசத்துக் கோயில் என்ற வழமை தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்தில் இன்று வழக்கொழிந்து போயிருக்கிறது.


மிக அண்மைக்காலத்தில் நீண்ட தேடலின் பின்னர் கிடைக்கப்பெற்ற மூன்று ஆவணங்கள் தேசம் தொடர்பிலான மிக முக்கிய ஆவணப் படுத்தலாக அமைகின்றன. அவை தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்துடன் தொடர்புடையவை. அவ்வாலயத்தில் தொன்று தொட்டு நடைபெற்று வரும் வழமைகளைப் பிரதிபலிப் பவை. ஆதிகோணநாயகர் ஆலயம் பழைமையில் தேசத்துக் கோயிலாக விளங்கிவந்ததை ஞாபகமூட்டுபவை.


முதலாவது ஆவணம் 1928 ஆம் ஆண்டு தை மாதம் எழுதப்பட்டது. தம்பலகாமம் ஆதி கோணநாயகர் ஆலயத்தில் பரம்பரை பரம்பரையாக தொண்டு செய்யும் தொழும்பாளர்களுள் ஒருவர், தான் செய்துவந்த தொழும்பினை தனது மகனுக்கு பாரம் கொடுப்பது பற்றி தேசத்தவருக்கும் மற்றும் ஆலயத்துடன் தொடர்புடையோருக்கும் அறியத் தரும் கடிதம் இது. அதனைக் கீழே காணலாம்.


**1928 ஆம் ஆண்டு தை மாதம் எழுதப்பட்டது.**

**சிவமயம்.**

**திருகோணமலையைச் சேர்ந்த தம்பலகமப்பற்றில் தம்பலகமம் கோயிற் குடியிருப்பில் சைவசமய பிரபல்யமாய் விளங்கும் கோணை நாதேஸ்வர சுவாமி கோயிலுக்கு தேவராசாவென்னும்**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளக்கோட்டு மகாராசா, கயவாகு மகாராசாவால் எழுதி கல்வெட்டு என வழங்கி வரும் சாசனத்தை 1831 ஆம் ஆ[ஆண்டு] கார்த்திகை மீ[மாதம்] 26 ஆம் தேதி கெசற்றில் பிரசித்தப்படுத்தியிருக்கிறது. அக்கல்வெட்டுச் சாசனத்தில் சொல்லிய பிரகாரமே இருபாகை முதன்மை குருக்கள், தானத்தார், வரிப்பற்றார் என்றும் தொழும்புகாரரும் மற்றும் தொழும்புகாரரும் இதில் சொல்லிய தானத்தார் என்னும் தொழும்பை கோணாமலை வேலுப் பிள்ளை என்பவர் 30 முப்பது வருடகாலமாக பார்த்து எனது தகப்பனார் மரணிக்கு முன்னமே வேலுப்பிள்ளை வயிரமுத்து ஆகிய நானும் 27 இருபத்தேழு வருடம் பார்த்து எனது மகன் கோபாலுப்பிள்ளை என்பவரை 1928 ம் ஆ[ஆண்டு] தை மீ[மாதம்] துவக்கமாக பார்த்து அதிலுள்ள சுதந்திரங்களையும், அதிலுள்ள வருமானங்களையும் ஏற்றுக்கொள்ளும் பொருட்டு சம்மதித்து ஒப்புவித்துப் போட்டேன் நான் என்பதை நிலமை, தலமை, தேசத்தவர்களுக்கும் மற்றுமுள்ள கொட்டியாபுரம்பற்று, கட்டுக்குளப்பற்றுக்கும், அரசாங்கத்தார் அவர்களுக்கும் அறியத்தருகிறேன்.

இ. [இவ்வண்ணம்]
தம்பலகமம்
கள்ளிமேடு - காரியப்பர்
வேலுப்பிள்ளை வயிரமுத்து
சாட்சி - வே.கதிரவேலு , க.கோணாமலை

கோயில் தொழும்பாளர்களின் உரிமை, கடமை என்பன விபரமாக கோணேசர் கல்வெட்டு எனும் நூலில் பதிவு செய்யப்பட்டு இருப்பதையும், அதனை அங்கீகரித்து 1831.11.26 ஆம் திகதி அரச வர்த்தமானி ஒன்று வெளியிடப்பட்டிருப்பதையும் குறிப்பிடும் வேலுப்பிள்ளை வைரமுத்து அவர்கள் 27 ஆண்டுகளாக தானத்தார் என்ற தொழும்பினை செய்து வந்திருக்கிறார். அவரது மகன் கோபாலுப் பிள்ளை என்பவரை 1928 ஆம் ஆண்டு முதல் அத்தொழும்பை செய்யும் பணிக்கு நியமிக்கும் அதேவேளை, தானத்தாருக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளையும், வருமானங்களையும் அவருக்கே ஒப்புவித்து அதனை தேசத்தவருக்கு இக்கடிதம் மூலம் அறிவிக்கிறார்.

இங்கு தேசத்தவர் என்று தம்பலகாமப்பற்றைச் சேர்ந்தவர்களையே வயிரமுத்து அவர்கள் குறிப்பிடு வதைக் காணமுடிகிறது. அத்துடன் கொட்டியாபுரம் பற்று, கட்டுக்குளப்பற்று என்பனவற்றை பெயர் குறிப்பிடுவதன் மூலம் அவற்றை வெவ்வேறான தேசங்கள் என்பதையே அவர் குறிப்பால் உணர்த்து கிறார் என்று கொள்ள வேண்டி இருக்கிறது.



இரண்டாவது ஆவணம் கந்தளாயில் உள்ள பிள்ளையார் ஆலய சிவராத்திரி விழா ஒழுங்குகள் தொடர்பானது. 11.02.1934 ஆண்டு தம்பலகாமம் ஆதி கோணநாயகர் ஆலயத்திடம் மேளக் கச்சேரிக் கான ஒழுங்குகள் தொடர்பில் உதவி கேட்பதாக அமைகிறது. இக்கடிதம் சிவராத்திரியினை முன்னிட்டு கந்தளாய் பிள்ளையார் ஆலயத்தில் அபிசேகம் செய்வதற்கு தேசத்தவர் விரும்பி இருப்பதினைத் தெரிவிக்கிறது. இது சாதாரண மக்களின் பாவனையில் இயல்பாக இப்பிரதேச மக்களினை தேசத்தவர் என குறிப்பிடும் வழக்கம் நிலவிவந்ததினை ஆதாரப்படுத்துகிறது. அக்கடிதம் கீழ்வருமாறு அமைந்திருக்கிறது.

11.2.34 திரு.தம்பலகமம் ஆதியாகிய கோநேஸ்வர சுவாமிக்குரிய கந்தளாய் பிள்ளையார் கோவிலுக்கு சிவன்ராத்திரி அவிசேகம் தேசத்தவர்கள் செய்ய விரும்பியிருப்பதால் காரியப்பர், வயிராவியார் அவர்கட்கு தாள்மையுடன் அறியத்தருவது எங்களுக்கு ஒரு கூட்டுமேளம் [12ல்] திங்கள் கிளமை அனுப்பி வைக்கும்படி தயவாய் கேட்டுக் கொள்கிறோம்.

கோயில் மனேச்சர் பொ.நடராசா -
பொ. சரவணப்பெருமாளுக்காக
ஊரவர்களுக்காக. மா.இராசையா

இக்கடிதம் மூலம் தேசத்தவர் என்ற ஆவணமாக்க லுக்கு அப்பால் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம் கந்தளாய்ப் பிள்ளையார் ஆலயம் மீது கொண்டிருந்த உரிமை, கந்தளாய்ப் பிள்ளையார் ஆலயத் திருவிழா நடைமுறைகள் போன்றவை தொடர்பிலும் அறிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசம் பற்றிய மூன்றாவது ஆவணம் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்துடன் தொடர்புடைய மகாசபைக் கூட்டம் பற்றியது. இது ஒரு முறைப்பாட்டுக் கடிதம்.

For administrative purposes, the District had been divided into four Chief Headmen's or D.R.O.'s divisions at the time of the census—Koddiyar Pattu, Tampalakam Pattu, Kaddukulam Pattu, and Trincomalee Town Division. The population of these Divisions in 1946 and 1931 is shown in the following Table :—

TABLE 58—POPULATION OF TRINCOMALEE DISTRICT, BY CHIEF HEADMEN'S OR D. R. O's DIVISIONS, 1946 AND 1931

| Division | Persons 1946 | Persons 1931 | Numerical Increase 1931-1946 | Per Cent. Increase 1931-1946 |
|---|---|---|---|---|
| Koddiyar Pattu | 13,637 | 10,855 | 2,782 | 25-6 |
| Tampalakam Pattu | 16,374 | 10,931 | 5,443 | 49-8 |
| Kaddukulam Pattu | 6,312 | 4,302 | 2,010 | 46-7 |
| Trincomalee Town Division* | 39,603 | 11,404 | 28,199 | 247-3 |

* Includes Trincomalee Urban Council in 1946 and Trincomaloe Local Board in 1931.

*Census of ceylon 1946 - Department of Census and Statistics-Sri Lanka Page -116*

தேசம் பற்றிய மூன்றாவது ஆவணம் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்துடன் தொடர்புடைய மகாசபைக் கூட்டம் பற்றியது. இது ஒரு முறைப்பாட்டுக் கடிதம். இது திருகோணமலைப் பிராந்தியத்தில் இருந்த நான்கு தேசங்களை தெளிவாக ஆதாரப்படுத்துகிறது.

**மகாமேன்மை தங்கிய திரு.டிஸ்திரிக்கோட்டு நீதிபதி அவர்களுக்குத் தாண்மையாய் திரு. தம்பலகமம் கோணநாயகர் கோயில் பராபரிப்புக் காரரான ஏரம்பு கணபதிப்பிள்ளை ஆகியன நான் தரும் மண்டாட்டப் புட்டீசமாவது.**

**ஐயாவே திரு.தம்பலகமம் கோணைநாயகர் கோயில் காரியங்களைக் குறித்து கூட்டங் கூட வேண்டிய காலங்களில் புராதன ஒழுங்கின்படி திரு.தம்பலகமம், திருக்கோணமலை, திரு கொடியாபுரப்பற்று. திரு கட்டுக்குளப்பகுதி ஆகிய இந்நான்கு தேசத்தில் உள்ள கோயில் உருமையாளராகிய நிலமை, தலைமை, தொளும்புகாறர், தேசத்தவர்களால் மகா சபை கூடி கூட்டம் நடப்பிப்பது வளக்கம்.**

**இதற்கு மாறாய்த் தம்பலகமத்தவர் சிலர் மாத்திரமே கூடி 1934ஆம் ஆண்டு பங்குனி மாதம் 19ஆந் திகதி கூடிய கூட்டம் கோயில் புராதன ஏற்பாடுகளுக்குப் பொருத்தமாய் நடைபெறவில்லை என்பதைப் பற்றி தகுந்த சாட்சிகளைக் கொண்டும், சாதனங்களைக் கொண்டும், வாய்மூலமாயும் அத்தாட்சி செய்யக்கூடும்.**

**இதை நீதிபதியவர்களின் தயவான கவனத்துக்கு அறியத்தருகின்றேன்.**

**3270ம் - 3271ம் இலக்கம் கொண்ட இரு உறுதி சாதனங்களாலும்**

**1169 இலக்க டிஸ்ரிக் கோட்டு தீர்ப்பினாலும் இன்னும் வேறு**

**இலங்கைத் தேசாதிபதியால் கிடைக்கப்பட்ட சேட்டுபிக்கற் கொப்பி இத்துடன் இணைக்கப் பட்டிருக்கிறது.**

என்று முடிகிறது இக்கடிதம். இதுவொரு முழுமை பெறாத முறைப்பாட்டுக் கடிதம் என்பதனை வாசிக்கும்போதே நாம் புரிந்து கொள்ள முடியும். இக்கடிதம் பலமுறை திருத்தப்பட்டு பின்னர் ஆங்கிலம் அல்லது தமிழ் மொழியில் நீதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் என்பதை ஊகிக்கலாம்.

முறைப்பாட்டுக்காரரான ஏரம்புகணபதிப்பிள்ளை தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலய பராமரிப்புக் காரர். ஆலயத்தின் புராதன நடைமுறைகள் தொடர்பில் நன்கறிந்தவர். அவை தொடர்பான பல ஆலய ஆவணங்கள், உறுதிகள் , அரச ஆவணங்கள் என்பவற்றைத் தனது சேகரிப்பில் வைத்திருந்தவர். எனவேதான் தனது குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக மேற்படி ஆவணங்களை ஆலய புராதன நடைமுறை களை உறுதிப்படுத்தும் பொருட்டு பிற்குறிப்பாக குறிப்பிட்டுள்ளார்.

இக்கடிதத்தின் முக்கிய பகுதி தேசத்தவர் இணைந்து மகாசபை கூடுவது தொடர்பானது. இவ்வாலயத்தில் தொன்றுதொட்டு பின்பற்றப்பட்டு வந்த நடைமுறைக்கு அமைவாக ஆலயம் தொடர்பான முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு திருகோணமலைப் பிராந்தியத்தில் இருந்த நான்கு தேசத்தவர்கள் மகாசபை கூடுவதை இக்கடிதம் ஆவணப்படுத்துகிறது. அத்துடன் இவ்வாலயம் இந்நான்கு தேசத்தையும் சேர்ந்த நிலைமை, தலைமை, தொழும்பாளர், தேசத்தவர் (பொது மக்கள்) அனைவருக்கும் உரித்துடையது என்பதை யும் இது ஆதாரப்படுத்துகிறது.

இங்கு குறிப்பிடப்படும் தேசத்தவர், மகாசபை என்ற சொற்கள் நம்மை 17ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஸ்ரீ சித்திர வேலாயுதர் காதல் நூற்பாவுடன் தொடர்புபடுத்துகிறது. தேசம், தேச த்தவர் என்ற சிந்தனை இப்பிராந்திய மக்களிடையே நீண்டகாலமாக நிலைபெற்றிருந்ததையே இவ்வாவ ணங்கள் உறுதிப்படுத்துகின்றன.

மேற்கூறிய ஆதாரங்கள் அனைத்தும் பழைமையில் திருகோணமலைப் பிராந்தியம் திருகோணமலைப் பற்று, கட்டுக்குளப் பற்று, கொட்டியாரப் பற்று, தம்பலகாமப் பற்று என்று நான்கு தேசங்களாக வழங்கி வந்ததினை ஆதாரப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகம் + நாக பந்தம்
## வரலாற்றுத் தேடல்

■

அருணா செல்லத்துரை

உலக நாடுகளில் வாழும் ஊர்வனவற்றுள் பாம்புகள் முக்கியமானவையாகும். "பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்" என்று தமிழில் பழமொழியுண்டு. பல பெயர்களைக் கொண்ட பாம்புகள் இருக்கின்றன. எமது பிரதேசத்தில் விஷம் குறைந்த பாம்புகளாக சாரைப்பாம்பு கொம்பேறி மூக்கன், கோடாலிப் பாம்பு, பச்சிலைப் பாம்பு, நீர்ப் பாம்பு, வயற் கோவியன், வெங் கிணாந்தி, போன்றவையும் விஷம் கூடியவையாக வல்வாசரணம் புடையன், முத்திரைப் புடையன், கரு-நாகம், வெள்ளை-நாகம், செட்டி-நாகம், போன்ற பெயர்களில் பலவகைகள் இருக்கின்றன.

இவற்றுள் நாகபாம்புகள் அதிக விஷத்தை கொண்டவை என்றும், அவை கடித்தால் உயிர் பிழைக்க முடியாது என்ற நம்பிக்கையும் பரவலாக இருக்கின்றது. இதேநேரம் நாகபாம்பை "நல்ல பாம்பு" என்று அழைக்கும் பாரம்பரியமும் இருக் கின்றது.



குரவிலில் சிதைந்த நிலையில் புராதன நாகபந்த சிலை.

நாகங்களின் தலைவனை "நாக-ராசா" என்று அழைப்பதாகக் கூறப்படுகிறது. மனிதர்களுக்கும் நாகராசா, நாகராணி என்ற பெயர்கள் வைக்கப் பட்டுள்ளன. சைவ சமயம் சம்பந்தப்பட்ட புராணங் களிலும், வழிபாடுகளிலும் நாகங்கள் பற்றிய பல விபரங்கள் காணப்படுகின்றன. அவை சமய ரீதியான நீண்ட ஆய்வுக்குரியவையாகும்.

### நாக + பந்தம் :

நாகம் என்ற சொல் ஒரு இன பாம்பைக் குறிக்கும். குடும்ப உறவை பந்தம் என்று சொல்வதுண்டு. அதே போல நாகங்கள் இனப்பெருக்க உறவு ஏற்படுத்துவதை நாக+பந்தம் என்று அழைத்துள் ளார்கள்.

சில பாம்புகள் தமது பந்த நிலையை நாட்கண க்காக தொடரும் என்று பெரியவர்கள் கூறக் கேட்டி ருக்கின்றேன். சகல பாம்புகளின் பெயர்களுடன் "பந்தம்" என்ற பதம் பயன்படுத்தப்படுவதில்லை. உதாரணமாக சாரைபந்தம் அல்லது புடையன்பந்தம் என்றழைப்பதில்லை. சைவசமயத்தின் முழுமுதற் கடவுளான சிவனுடைய கழுத்தைச் சுற்றியிருக்கும் உயிரினம் என்பதாலும் அல்லது நாகபாம்பு மீது கொண்ட பயத்தின் காரணமாகவும் அவற்றின் குடும்ப உறவை மட்டும் நாகபந்தம் என்று அழைக்கும் பாரம்பரியம் தொடங்கியிருக்கலாம்.

பாம்பினங்கள் இனப்பெருக்கத்திற்காக தமது பந்தத்தை நடத்தும் நிலை மிகவும் அதிசயமானதாக இருக்கும். சில பாம்புகள் பந்தத்தில் ஈடுபடும்போது ஒன்றையொன்று சுற்றிக் கொண்டு நிலத்தில் படுத் திருந்து உருளும். சிலவேளை நீண்ட நேரம் படுத்த நிலையிலேயே இருக்கும்.

நல்ல பாம்புகள் என்றழைக்கப்படும் ஒருதலை நாகபாம்புகள், பந்தத்தில் ஈடுபடும் போது நிலத்தி லிருந்து எழும்பி தமது வால்களில் தங்கி உயர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்பது வித்தியாசமாக இருக்கும். நானும் இதைக் கண்டிருக்கிறேன். இந்த நிலையில் இருக்கும் பாம்புகளை இடையூறு செய்யக்கூடாது என்ற நம்பிக்கையும் அடங்காப்பற்று-வன்னிப் பிரதேசத்தில் உண்டு. அப்படி ஏதாவது இடையூறு செய்தால் அதனை ஞாபகம் வைத்து காத்திருந்து தேடிவந்து பழிவாங்கும் என்று முன்னோர்கள் கூறக் கேட்டிருக்கின்றேன்.

இலங்கையில் பரவலாக நாகவழிபாடுகள் இடம் பெற்று வருகின்றன. சிவபெருமானின் கழுத்தில் இருக்கும் ஒரு தலை நாகத்தை வழிபடுவதற்காக ஒருதலை நாகசிலையை வைத்து வழிபடும் பாரம்பரியம் சைவசமய வழிபாட்டு முறையில் இருக்கின்றது. இதனை நாகதம்பிரான் வழிபாடு என்று அழைப்பதுண்டு.

நாகங்களுடைய பந்தநிலையை வழிபடும் பாரம்பரியம் புராதன காலம் தொடக்கம் இருந்துள்ளது. பல புராதன கட்டடங்களில் நாகபந்த நிலையை வெளிப்படுத்தும் சிலைகள் படிக்கட்டு ஆரம்பமாகும் இடத்தில் காவல் தெய்வங்களாக வைக்கப் பட்டுள்ளதை காணக்கூடியதாக இருக்கின்றது.

### நாக பந்த சிலைகள் :

அடங்காப்பற்று வன்னிப்பிரதேசத்தில் நாக வழிபாடு பல வடிவங்களில் இருந்துள்ளன. இதற்கு அடையாளமாக பலவித வடிவங்களில் கருங்கற்களில் பொளியப்பட்ட நாக + பந்த சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் குரவில் பிரதேச வயல் வெளியில் பாலை மரத்தின்கீழ் பல புராதன சின்னங்களின் சிதைபாடுகள் வெளியில் எடுத்து வைக்கப்பட்டுள்ளன. குரக்கன் வயல் என்பது மருவி குரவில் என்று வந்ததாக முதியவர்கள் தெரிவித்துள்ளனர். அங்கு நிலத்தில் புதைந்திருந்த நாகபந்த சிலையொன்று கண்டெடுக்கப்பட்டு வெளியில் வைக்கப்பட்டுள்ளது. இந்த நாகபந்த சிலையில் எழும்பிய நிலையில் உள்ள நாகங்களுக்கு இடையில் மூன்று இடைவெளிகள் இருக்கின்றன. அந்த இடைவெளிகளில் இருக்கும் பொளிவுகளை அடையாளம் காண முடியாத அளவிற்கு சேத மடைந்துள்ளன.

அண்மையில் செட்டிகுளம் பிரதேசத்தில் உள்ள புராதன கிராமங்களில் ஒன்றான பெரியபுளியாலங் குளம் கிராமத்திற்குச் சென்றிருந்தேன். இந்தக் கிராமத்தைச்சுற்றி பல சிறிய குளங்கள் இருக்கின்றன. இந்தக் கிராமத்திற்கு சற்றுத் தூரத்தில் புராதன ஐந்து தலை நாகசிலைகள் அமைந்திருக்கும் சின்னத்தம்பனை, மதகுவைச்சகுளம் போன்ற இடங்கள் இருக்கின்றன.

இடப்பெயர்வுக்குப் பின்னர் பெரியபுளியாலங் குளம் கிராமத்தில் இருந்த பிள்ளையார் ஆலயம் திருத்தப்பட்டுள்ளது. பிரதேசத்தில் காணப்பட்ட மூன்று வகையான நாகபந்த சிலைகள் இந்த ஆலயத்தில் ஒன்றாக சேர்த்து வைக்கப்பட்டுள்ளதைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. நாகபந்த சிலைப் பொளிவுகளின் வளர்ச்சிப் படிமுறைகளைக் காட்டுபவையாக இவை இருக்கின்றன.



மூன்று தாமரைப் பூக்கள் பொளியப் பட்ட நாகபந்தம்.



இரண்டு பூக்களும் இலிங்கமும் பொளியப்பட்ட நாகபந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலிங்கம்
மட்டும் உள்ள
நாகபந்தம்

ஐந்து தலை நாக வழிபாடு நாகர்களுக்குரியது என்பது ஆய்வுகளின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. பஞ்சகர்மாக்கள் என்றழைக்கப்படும் நாகர்களில் 'ஓவியர்' என்ற பிரிவினர் இருந்துள்ளனர். இவர்கள் கடவுள் வடிவங்களை ஓவியமாக வரைவதிலும், 'சிற்பி' என்ற பிரிவினர் சிலைகளை வடிப்பதிலும் திறமையுடையவர்கள் என்று வரலாறுகளில் குறிக்கப்பட்டுள்ளது.

இவற்றுள் முதலாவது நாகபந்த சிலை குரவிலில் காணப்படும் புராதன சிலையை ஒத்ததாக இருக்கிறது. ஆனால் இந்த நாகபந்த பொளிவில் நாகங்களின் இடையிடையே உள்ள மூன்று இடைவெளிகளிலும் தாமரைப் பூக்கள் அல்லது சூரிய ஒளிக்கதிர்கள் போன்ற வடிவங்கள் பொளியப்பட்டுள்ளமை தெளிவாகத் தெரிகிறது.

மற்றுமொரு வடிவில் உள்ள நாகபந்த சிலை ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்த நாகபந்த சிலையில் மூன்று இடைவெளிகள் உள்ளன. இரண்டு இடைவெளிகளில் பூக்கள் பொளியப்பட்டுள்ளன. நாகங்களின் தலைகள் இணைக்கப்பட்டுள்ள மேல்பகுதியின் கீழுள்ள இடைவெளியில் ஆவுடையாருடன் கூடிய இலிங்கம் பொளியப் பட்டுள்ளது.

காலத்திற்குக் காலம் சிற்ப வேலைப்பாடுகள் வளர்ச்சியும் மாற்றங்களும் கண்டுள்ளன. இந்த வளர்ச்சியைக் காட்டும் மற்றுமொரு நாகபந்த சிலை ஆலயத்தில் வணக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ளது. இந்த நாகபந்த சிலையில் இரண்டு பாம்புகளும் ஒன்றோடு ஒன்று இணைந்திருப்பது மிகவும் தத்ரூபமாக அமைந்துள்ளது. பாம்புகளின் நடுப்பகுதிகளில் இருந்த வட்ட வடிவ இடைவெளிகளுக்குள் எதுவும் பொளியப்படவில்லை. பாம்புகளின் பிணைப்பு மட்டும் பொளியப்பட்டுள்ளது. தலைகளுக்குக் கீழேயுள்ள இடைவெளியில் பொளியப்பட்டுள்ள ஆவுடையாருடன் கூடிய இலிங்கம் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது.

மா-தோட்டம் பகுதியில் அரசாட்சி செய்த இயக்கர்குல இராவண மகாராசா சைவசமய இலிங்க வழிபாட்டில் சிறந்தவர். இவர் காலத்தில் சைவசமயத்தின் இலிங்க வழிபாட்டிற்கும், திருநீற்றுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு

தலங்களில் ஒன்றான கேதீச்சர ஆலயம் போற்றப் பட்டு வந்துள்ளமை திருமுறைகளிலும் பாடப்பட்டுள்ளன. மா-தோட்டம் பகுதியை அடுத்திருக்கும் பகுதிகளில் பெரியபுளியாலங்குளம் கிராமமும் ஒன்றாகும். அங்கு இலிங்க வழிபாடு நாகபந்த வடிவில் இடம்பெற்றமைக்கு மேற்காட்டிய தொல்லியல் சின்னங்கள் சான்றாக அமைகின்றன.

ஐந்துதலை நாக வழிபாடு நாகர்களுக்குரியது என்பது ஆய்வுகளின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. பஞ்சகர்மாக்கள் என்றழைக்கப்படும் நாகர்களில் 'ஓவியர்' என்ற பிரிவினர் இருந்துள்ளனர். இவர்கள் கடவுள் வடிவங்களை ஓவியமாக வரைவதிலும், 'சிற்பி' என்ற பிரிவினர் சிலைகளை வடிப்பதிலும் திறமையுடையவர்கள் என்று வரலாறுகளில் குறிக்கப்பட்டுள்ளது.

நாகர்களுக்குள் இருந்த இந்தப் பிரிவினரை, "கடவுள் வடிவ உருவாக்க காரணகர்த்தாக்கள்" (Architect of Gods) என்று, செ.இராசநாயகம் முதலியார் புராதன யாழ்ப்பாணம் (Ancient Jaffna -1926) என்ற ஆங்கில வரலாற்று நூலில் குறிப்பிட்டுள்ளார். புராண வரலாறுகளுக்கு ஏற்றவாறு கடவுள் வடிவங்களை வரைந்து, பின்னர் சிலைகளைப் பொளிந்துள்ளார்கள் என்பது குறிப்புகளில் இருந்து தெளிவாகிறது. தமது வழிபாட்டைத் தவிர்ந்த ஏனைய சமூகங்களின் வழிபாடுகளுக்கான சிலைகளையும் நாகர்களே உருவாக்கியுள்ளமை அண்மைக்கால ஆய்வுகளில் வெளிவந்துள்ளன.

நாகர்களின் வழிபாட்டில் ஐந்துதலை நாகசிலைகள் முக்கியமானவை. அணைக்கட்டுகளிலும் குளக்கட்டுகளிலும் நாகர்கள் ஐந்துதலை நாக சிலைகளை காவல் தெய்வங்களாக அமைத்திருந்தனர். முக்கியமான விடயம் என்ன வெனில் ஐந்து தலைகளைக் கொண்ட நாகங்கள் பூலோகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாகராசவாவிக் கட்டில் ஐந்து தலை நாகம்



மதகுவைச்ச குளம் ஐந்து தலை நாகம்



சின்னத் தம்பனை ஐந்துதலை நாகம்.



பாவற்குளம் நிமிர்ந்த நிலையில் ஐந்துதலை நாகம்.

இருந்தனவா? என்ற கேள்வியை நம்பிக்கை காரண மாக யாரும் கேட்பதில்லை. இதனால்தான் ஆங்கில ஆய்வாளர் பார்க்கர் அவர்கள் ஐந்துதலை நாகங் களைப் பற்றி ஆய்வு செய்வதைத் தவிர்த்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புராதன காலத்தில் நாக-ராசா வாவி என்ற பெயரில் குளம் கட்டப்பட் டிருந்தது. தற்போது தண்ணிமுறிப்புக் குளம் என அழைக்கப்படுகிறது. அந்த வாவியின் கட்டில் அமைக்கப்பட்டுள்ள நாகசிலை படுக்கை நிலையில் இருந்தவாறு ஐந்து தலையையும் நிமிர்த்திப் பார்ப் பது போன்று தனிக்கல்லில் பொளியப்பட்டுள்ளது.

சின்னத்தம்பனை குளக்கட்டில் இருந்த ஐந்து தலை நாகசிலை எடுத்துச் செல்லப்பட்டு கிராமத்தி லுள்ளஆலயத்தில்பிரதிஷ்டைசெய்யப்பட்டுள்ளது. இலிங்க வழிபாட்டின் நாகபந்த சிலைகள் வைக்கப் பட்டுள்ள பெரியபுளியாலங்குளம் கிராமத்திற்கு மிகவும் அண்மையில் சின்னத்தம்பனை கிராமம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

சின்னத்தம்பனைக்கு மேற்கே மதகுவைச்சகுளம் இருக்கின்றது. இதன் புராதன பெயர் ஆ[illegible]குளமா தாகும். பெரியபுளியாலங்குளம் கிராமத்தின் தெற்கே உள்ள மதகுவைச்சகுளத்தின் கட்டில் ஐந்துதலை நாகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடுகள் இடம்பெற்றுள்ளன.

இந்த ஐந்துதலை நாகங்கள் அனைத்தும் படுக்கை நிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் நிமிர்ந்த நிலையில் எழுந்து ஐந்துதலையை விரித்து பார்ப்பது போலவும் சிலைகள் பொளியப்பட்டுள் ளன. பாவற்குளம்கட்டில் உள்ள நாகசிலை வாலைச் சுருட்டிக் கொண்டிருந்தாலும் நிமிர்ந்து பார்ப்பது போல பொளியப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டானுக்கு வடக்கில் ஒரு பகுதியிலிருந்த மண்மேட்டிற்கும் மறுபக்கத்திலிருந்த தட்டய மலைக்கும் ஊடாகப் பாய்ந்த பேராற்றை மறித்து மண் மலைக் குளம் (முத்தையன் கட்டு) கட்டப்பட்டுள்ளது. இந்தக் குளத்தின் ஒரு பக்கத்திலிருக்கும் தட்டயமலைக் கிராமத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஐந்து தலை நாகசிலை, வாலைச்சுருட்டி உடலை நிமிர்த்திப் பார்ப்பது வித்தியாசமாக இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தட்டயமலை
ஐந்துதலை
நாகம்

பட்டுள்ளது. இயக்கர், நாகர்கள் அங்கிருந்து வெளியேறி மேற்குமூலை, கிழக்குமூலைப் பிரதேச ங்களில் குடியேறிய பகுதிகள் அடங்காப்பற்று எனப் பெயர் பெற்றுள்ளது.

பிற்காலத்தில் மாந்தைப் பகுதியிலிருந்த அநேக மான நாக குலத்தவர்கள் பௌத்த சமயத்தை தழுவி யுள்ளமை வரலாறுகளில் குறிக்கப்பட்டுள்ளது. சைவம், வைஷ்ணவம் உட்பட வேறு சமயங்களை உள்வாங்கி இந்து சமயம் உருவாக்கப்பட்டுள்ளமை யினால் வழிபாட்டு முறைகளிலும் அநேக மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

புராதன காலத்தில் சைவ சமய இலிங்க வழிபாடு மற்றும் நாகவழிபாடு ஆகிய இரண்டு விதமான வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடித்த இயக்கர் களும் நாகர்களும் இருந்துள்ளனர். இவர்கள் பிற் காலத்தில் சமய ரீதியாக ஒன்று சேர்ந்தமையை எடுத்துக்காட்டும் நாகலிங்க சிலைகள் ஆய்வுக் குரியனவாகும்.

மேற்கு மூலையில் உள்ள வவுனியன் பெரியகுளக் கட்டின் கீழே உள்ள வீரபத்திரர் ஆலயத்தில் ஆவுடையாருடன் கூடிய இலிங்கத்திற்கு ஐந்துதலை நாகம், குடைபிடிப்பது போன்று பொளியப் பட்டுள்ள சிலை பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளது. இந்தச் சிலை எப்படி வந்தது என்பதற்கான விபரங்களைப் பெறமுடியவில்லை. இதனை நாகதம்பிரான் எனவும் நாகலிங்கம் எனவும் வழிபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள நாகபந்த மற்றும் ஐந்துதலை நாக சிலைகள் எப்போது ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப் பட்டன என்பதை, கிரமங்களில் இருந்த முதியவர்கள் இடம் பெயர்ந்துள்ள காரணத்தால் முழுமையாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை. பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சிலைகள் பொளியப் பட்ட காலத்தையும் வித்தியாசங்களையும் தெரிந்து கொள்வதற்கு நீண்ட ஆய்வுகள் அவசியம்.

மாதோட்டம் லங்கா நகரிப் பிரதேசத்தில் சைவ சமய இராவண மகாராசாவின் ஆட்சிக்குப் பின்னர், வடஇந்திய அயோத்தி தசரத ராமனால் நியமிக்கப் பட்ட விபீஷணன் ஆட்சி இடம்பெற்றது. இவர் காலத்தில் மாதோட்ட லங்கா நகரியில் சைவ சமயிகளாக இருந்த இயக்கர்கள் மற்றும் நாகர்கள் அனைவரும் வைஷ்ணவத்தை தழுவ வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டமை குறிப்பிடப்



வவுனியா
பெரியகுளத்தில்
ஐந்து தலை
நாகலிங்கம்

இலிங்க வழிபாட்டில் சிறப்புற்றிருந்த சைவ சமயத்தைச் சேர்ந்த அநேகர், போர்த்துக்கேயர் காலத்தில் றோமன் கத்தோலிக்கம், ஒல்லாந்தர் நிர்வாகத்தில் புரட்டஸ்தாந்து, ஆங்கிலேயர் ஆட்சி யில் கிறிஸ்தவம் போன்ற சமயங்களை, பல அழுத்தங்கள் காரணமாக மாறி மாறி பின்பற்றி யமையும் தெளிவாகிறது.


அண்மையில் ஏற்பட்ட இடப் பெயர்வு காரணமாக அடங்காப் பற்று-வன்னிப் பிரதேசத்தில் குடியேறியுள்ள பிறமாவட்டங்களைச்சேர்ந்தவர்கள் ஐந்து தலை நாகத்தில் அமர்ந்து அருள் பாலிக்கும் நாக பூசணி அம்மன் கோவிலை அமைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

பெருநிலப்பரப்பில் மாதோட்டம் - லங்காநகரி, அடங்காப்பற்று மற்றும் பாணன்கமவன்னி, கிழக்குக் கரையோரப் பிரிவுகள் ஆகியவற்றின் வழிபாட்டு முறைகளை ஆய்வு செய்து குறித்து வைக்க வேண்டியது வடபுலத் தமிழர்களின் வரலாற்றுத் தேவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக நோக்குடைய எழுத்து, சமூக மாற்றத்துக்கான எழுத்து ஆகியவற்றுடன் உறவாடிய

# எஸ்.அகஸ்தியர்



■

பேராசிரியர் சபா.ஜெயராசா

தாய் மொழிவழிக் கல்வி வளர்ச்சியும் அச்சு ஊடகங்களின் பெருக்கமும் சமூக முரண்பாடுகளை தமிழ் இலக்கிய வெளிக்குக் கொண்டுவரும் செயற் பாடுகளுக்கு ஊக்குவிப்பு வழங்கின. அவற்றின் பின்புலத்தில் தெளிவான ஒரு சமூகக் கருத்திய லோடு ஆக்க இலக்கிய வரைபை முன்னெடுத்தவர் அகஸ்தியர், அவர் வாழ்ந்த காலம் 1926-1995.

சமூக நோக்குடைய எழுத்து, சமூகமாற்றத்துக்கான புனைவு ஆகிய கருத்தியல் தளத்தில் நின்றோர் ஒவ்வொருவரதும் எழுத்துக்களில் அவரவர்களுக் குரிய ஆக்கத்தனித்துவம் எழுகோலம் பெற்றிருந் தமை குறிப்பிடத்தக்கது. அதாவது, தமக்குரிய ஆக்கமலர்ச்சியை வாய்பாடுகளாக்காது தமக்குரிய கலைத் தனித்துவத்துடன் எழுதினர்.

பின்வரும் ஒரு சிறிய எடுத்துக்காட்டினால் மேற்கூறிய கருத்தை விளக்கலாம். டானியலுடைய எழுத்துக்கள் ஒரு விதமாகவும், அகஸ்தியருடைய எழுத்துக்கள் இன்னொரு விதமாகவும், சாந்தனுடைய எழுத்துக்கள் வேறோரு விதமாகவும் அமைந்துள்ளமை குறிப்பிட்டுக் கூறக் கூடியவை.

அகஸ்தியர் தமது பள்ளிப்பருவத்திலிருந்தே எழுத்துத் துறையில் ஆர்வத்தோடு செயற்பட்டவர். தந்தையார் சவரி முத்துவும், தாயார் அன்னம்மாளும் அவரைக் கத்தோலிக்க சமயச் சூழலில் வளர்த்தெடுத்தனர். ஒருகால கட்டத்தில் அவர் கத்தோலிக்கக் குருத்துவ நெறிமீதும் ஆறாத விருப்பம் கொண்டிருந்தார். குருவாக மாறுவதற்கும் தீர்மானித்தார்.

தந்தையார் சவரிமுத்து கிராமியக் கலை இலக்கியங்களில் ஈடுபாடு கொண்டவர். நாட்டுக் கூத்து ஈடுபாட்டை அகஸ்தியரிடத்து முனைந்து வளர்த்தெடுத்தார். அவரை ஒரு தண்ணுமைக் கலைஞராகவும் வளர்த்தெடுக்க முற்பட்டார். இசைப் பயிற்சியும் தண்ணுமைப் பயிற்சியும் அகஸ்தியருக்குக் கிடைக்கப் பெற்றன. கலை யார்வமும், இலக்கிய ஈடுபாடும், கல்விச் செயற்பாடும் எழுத்தாக்கத் துறையில் அவரது இருப்பை நிலை பேறு கொள்ளச் செய்தன. குருவாக மாறும் எண்ணத்தை நழுவவிட்டார்.

பள்ளிக்கூடப்பருவத்திலிருந்தே வாசிப்பு பழக்கம் அவரிடத்து மேலோங்கியிருந்தது. அவரது தந்தை யாரும் ஆசிரியர்களும் தரமான வாசிப்புக்குரிய வழங்கலை மேற்கொண்டிருந்தனர்.

அக்காலத்து இந்திய சஞ்சிகைகளிலே தரமானவற் றைப் பொறுக்கி வாசிப்புக்கென வழங்கினர். அவர் ஈடுபாடு கொண்ட கலை இதழ்களுள் ஒன்றாகக் கலைமகள் அமைந்தது. கதை சொல்லும் நுட்பங்களை அவர் தமது ஆனைக்கோட்டைக் கிராமத்து வாய் மொழி மரபுகளில் இருந்தும் கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



மகள் வாசிப்பிலிருந்தும் வளர்த்தெடுத்துக் கொண்டார். அவரது பள்ளிப்பருவ காலத்தில் காந்திய அலை வீசத் தொடங்கியது. காந்தியம் முன்வைத்த தேசிய விடுதலை, சுதேசப் பொருள் நுகர்ச்சி, தாய் மொழிக்கல்வி, சமூக சீர்த்திருத்தம், தீண்டாமை ஒழிப்பு முதலாம் துறைகள் அவரிடத்து ஆழ்ந்த செல்வாக்குகளை ஏற்படுத்தின.







**அகஸ்தியர் வாழ்ந்த சமயச் சூழலில் மார்க்சியம் ஏற்புடைய ஒரு கருத்தியலாகக் கருதப்படவில்லை. அந்த வகையில் அவரது செயற்பாடுகள் ஒரு புறநடையாகவே அமைந்தன.**

அக்காலத்தில் எழுச்சிகொண்ட பிறிதொரு இலக்கிய விசையாக அமைந்தது மார்க்சியம். மார்க்சிய நூல்கள் தமிழில் வெளிவரத் தொடங்க அவற்றை விருப்புடன் வாசிக்கலானார். மார்க்சிய இலக்கியங்களுடனான ஈடுபாடு அவரிடத்தே உலகியல் விசையை ஊட்டியது. சமய வாழ்விலிருந்து உலகியல் வாழ்வுக்குத்திரும்பச் செய்தது.

அவர் வாழ்ந்த சமயச் சூழலில் மார்க்சியம் ஏற்புடைய ஒரு கருத்தியலாகக் கருதப்படவில்லை. அந்த வகையில் அவரது செயற்பாடுகள் ஒரு புறநடையாகவே அமைந்தன.

சமூகச்சீர்கேடுகளை எழுத்து வெளிக்குக்கொண்டு வருதல், சமூக மாற்றத்தை விசைப்படுத்தும் கருவிகளுள் ஒன்றாக எழுத்தைப் பயன்படுத்துதல், தனிமனித அடிப்படையில் உதிரி எழுத்தாளராக நிற்காது, முற்போக்குச் சிந்தனைகள் கொண்டவர்களிடம் இணைந்து செயற்படல் முதலான முன்னெடுப்புக்கள் அவரிடத்தே நிகழ்ந்தன.

அவற்றின் ஒன்றிணைந்த விசையாக இலங்கைக் கம்யூனிசக் கட்சியில் ஓர் உறுப்பினரானார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலும் இணைந்து கொண்டார்.

அக்காலத்தில் எழுச்சிகொள்ளத் தொடங்கிய தேசிய இலக்கியம், மண்வாசனை, விளிம்பு நிலை மக்களைப் புனைவு மாந்தராக்குதல் என முக்கிய செயற்பாடுகளுக்கு எடுத்துக்காட்டான ஆக்கங்களைப் படைக்கலானார்.

முற்போக்கு எழுத்தாளர்கள் முன்வைத்த கருத்து நிலைப்போராட்டங்களிலும் தம்மை இணைத்துக் கொண்டார். அதன் துணைத் தலைவர்களுள் ஒருவராக இருந்து இழிசனர் வழக்கு என்று மரபுவாதிகள் முன்வைத்த கருத்துக்களுக்கு எதிரான முன்மொழிவுகளை இயங்கியல் நோக்கில் முன்வைத்தார்.

பேச்சு வழக்கை இழிசனர் வழக்கு என்று அடையாளப்படுத்துதல் தவறாகும். மரபு என்பது நிலைத்த பொருளன்று. சமூக மாற்றத்துக்கு ஏற்றவாறு அதுவும் மாறுதலடையும் என்பதைத் தெளிவுபடுத்தி வீரகேசரி, தினகரன், சுதந்திரன் முதலாம் இதழ்களிலே கட்டுரைகளை எழுதினார்.

பேராசிரியர் க.கைலாசபதி, போராசியர் கா. சிவத்தம்பி, பிரேம்ஜீ ஆகியோருடன் இணைந்து முற்போக்குக் கருத்தியலை வளம்படுத்தும் கருத்துப் பகிர்வுகளை மேற்கொண்டார்.

கண்டியில் பணிபுரிந்த காலத்தில் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களுடன் ஒன்றிணைந்து சமகால இலக்கியங்கள் தொடர்பான கருத்தாடல்களை மேற்கொண்டார். அக்காலத்தில் தமிழ் மொழிவாயிலான உயர்கல்வி வளர்ச்சியடையத் தொடங்கிய நிலையில் தமிழ் மொழி வாயிலான வாசிப்பு வளர்ச்சி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இளம் எழுத்தாளர்கள் பலர் பல்கலைக்கழகச் சூழலிலே தோற்றம் பெற்றனர். முற்போக்கு, எதிர் முற்போக்கு, நற்போக்கு முதலியவற்றுடன் தொடர்பான விவாதங்களும் இடம்பெற்றன.

அகஸ்தியர் அதிகம் எழுதிய எழுத்தாளர்களுள் ஒருவர்.

திருமணத்துக்காக ஒரு பெண் காத்திருக்கின்றாள் (நாவல்), இருளினுள்ளே (குறுநாவல் தொகுதி), மண்ணில் தெரியுதொரு வானம் (நாவல்), கோபுரங்கள் சரிகின்றன (குறுநாவல்), ஏரி நெருப்பில் இடைபாதை இல்லை (நாவல்), நரகத்திலிருந்து (குறுநாவல் தொகுதி) பூந்தான் யோசேப்பு கலையுலக வாழ்க்கை வரலாறு முதலியவற்றை வெளியிட்டார். லெனின் வழங்கிய தத்துவக் குவியலை 'லெனின் பாதச்சுவடுகள்' என்ற தலைப்பில் நூலாக்கம் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது நாவல்கள் வீரகேசரியின் பிரசுரமாகவும், சென்னை நியூசெஞ்சுரி வெளியீடுகளாகவும் வந்தன. இலங்கையில் மட்டுமின்றி தமிழகத்து முற்போக்கு வாசகரிடத்தும் அகஸ்தியரது ஆக்கங்கள் ஊறிச்சுவறின.

அகஸ்தியர் கதைகள் தனித்தொகுதியாக ஆனைக் கோட்டையில் வெளியிடப்பட்ட வேளை (ஜனிக் ராஜ் வெளியீடு) அந்தக் கிராமத்து வாசிப்பு நிலையில் பயனுள்ள மாற்றம் நிகழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது. ஊர் வாழ்க்கையைச் சிறுகதைப் புனைவுகளாகக் கண்ட மக்கள் குதூகலிப்பு எய்தினர்.

களும் களத்துக் காளான்களும் ஒருங்கு சேர்ந்து மக்கி இற்றுப்போய்ச் சதுப்பாகிவிட்டதினால் மடைகட்டிய ஒரே துர்நாற்றமான சிணிக்காற்று, சுர் என வீசிக் கொண்டிருந்தது. *(எரிநெருப்பில் இடைபாதை இல்லை நாவல் 1992,க்.171).*

அகஸ்தியரின் படைப்புக்கள் இலங்கையிலும் தமிழகத்திலும் விரிவான திறனாய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அவரின் முத்திரை பதித்த பேட்டியினை நாவலாசிரியர் க.கணேசலிங்கம் *1985* ஆம் ஆண்டு வெளியிட்டார். அகஸ்தியர் பற்றிய ஒரு முழுமையான காட்சியை அந்த ஆக்கம் முன்வைத்தது.

**அகஸ்தியரின் படைப்புக்கள் இலங்கையிலும் தமிழகத்திலும் விரிவான திறனாய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அவரின் முத்திரை பதித்த பேட்டியினை நாவலாசிரியர் க.கணேசலிங்கம் 1985 ஆம் ஆண்டு வெளியிட்டார்.**

தமது எழுத்துக்களுக்குரிய கலை இலக்கியக் கோட்பாட்டை அவர் பின்வருமாறு விபரிக்கின்றார்.

கலை இலக்கியங்கள் சூன்யத்திலிருந்தோ சுயம்பு வாகவோ ஒருபோதும் உருவாவதில்லை. எழுத் தாளன் வாழ்வை மானசீகமாக உருவகப்படுத்தும் அஞ்ஞானி போலன்றி, வாழ்க்கையை விமர்சித்து உண்மையைத் தேடும் விஞ்ஞானியாக விளங்கு வதால் அவனிடம் உருவாகும் கலை இலக்கியங் களும் கருவூலங்களும் அவன் சிருஷ்டிகளினால் புடமிடப்படுகின்றன. வாழ்க்கையில் அவன் பெறுகின்ற அனுபவ போதம் மக்களுக்குரியதால், கலை இலக்கியங்கள், யாவும் மக்களுக்காகவே சிருஷ்டிக்கப்படுகின்றன. *(அகஸ்தியர் கதைகள் நூலின் முன்னுரை, 1987)*

அவர் தெரிந்தெடுத்த பாத்திரங்களும், காட்சி விபரிப்புக்களும் கொட்டடி, நாவாந்துறை, இரட் டைப் பூவரசடி, ஆனைக்கோட்டை, காக்கைத்தீவு, ஊர்காவற்றுறை ஆகிய பிரதேசங்களின் உயிர்ப்பை வெளிக்கொண்டு வரும் வகையில் அமைந்துள்ளன. அப்பிரதேசங்களின் கடலோரக் காட்சியின் விபரிப்பு ஒன்று வருமாறு.

மாலைச் சூரியனின் கதிரொளிச்செங்கீறுகள் அலைகளின் மோதல்களினால் கரையோரம் பொங்கி நுரைத்துத் தேங்கிக் கிடந்து பளபளக்கும் வெண்ணுரைகளில் பட்டு மினுமினுத்து மின்னொளி பரப்பிய வண்ணமிருந்தன. தண்ணீர்த் தேக்கத் தினால் மிகவும் சொரிவு கண்டு உக்கிப்போய் உப்பிச்சேறு நிறைந்த சிற்சில பகுதிகளில் அலைகளோடு ஒதுங்கி வந்தடைந்த கடற்பாசி

அந்தப் பேட்டியில் க.கணேசலிங்கம் அவரைப் பின்வருமாறு அறிமுகம் செய்துள்ளார்.

ஈழத்து இலக்கிய உலகில் சுமார் முப்பத்தெட்டு ஆண்டுகாலமாக தமிழ் இலக்கியத்தின் பல்வேறு கூறுகளில் பல்வேறு கோணங்களிலும் தன் படைப்புக்களை அளித்து அவற்றில் தனது முத்திரையை அழுத்தமாகப் பதித்து, சாதாரண வாச கர் மத்தியில் புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்த அனுபவம் மிக்க முன்னணி எழுத்தாளர் திரு.எஸ். அகஸ்தியர்.

புனைகதைகள் மட்டுமன்றி கவிதை, நாடகம், நாட்டுக்கூத்து, கட்டுரை முதலாம் இலக்கிய வடிவங்களோடு உறவாடிய பல்துறை ஆற்றல்க ளோடு தம்மை வெளிப்படுத்திக் கொண்டவர். எழுத்துக்களோடு மட்டுமே நின்றுவிடாது சமூக வினைப்பாடுகளோடும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்.

அகஸ்தியரின் எழுத்துக்களில் விதந்து பேசப்படு வது அவர் எழுதிய உணர்வூற்றுருவகச் சித்திரம்.

தமிழ் இலக்கியத்திலே இது புதிய நடை. விடயமும் புதிது. மரபிற்குள் மொழியை அடைத்துச் சிறைப்படுத்தும் சிலர் நிலை தடுமாறுவர். ஆனால் இப்புதிய வாக்கிய அமைப்புக்கள் புதிய அகராதியில் கட்டாயம் இடம்பெறும் ஏனென்றால் அகஸ்தியர் ஆக்கிய இந்த மொழியும் நடையும் மனசைப் பிரளயப்படுத்துகின்றன. என்று செ.யோகநாதன் மடிப்புரையிலே கூறியுள்ளார். *(1969)* (மடிப்புரை என்பது அட்டைப்பட உள்மடிப்பில் எழுதப்படும் உரை.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வூற்றை உழைக்கும் மக்களின் தளத்தில் நின்று எழுதியமை அகஸ்தியர் மேற்கொண்டிருந்த சமூகப் பொறுப்புணர்வையும், சமூக நீதியையும், சமூகக் கருத்தியலையும் தெளிவுபடுத்துகின்றன.

அந்நூலிலே ஏழு உணர்வூற்று உருவகச் சித்திரங்கள் அமைந்துள்ளன. அவற்றின் கதா பாத்திரங்கள் நீயும், நானுமேயாகும்.


அவரது நீ என்ற உணர்வூற்று உருவகச் சித்திரம் பின்வருமாறு தொடக்கம் கொள்கின்றது.









நீ
நீ தானா-?
உன் சடலம் உருக்குலைந்திருக்கிறது,
நீ, வண்டரித்த பாளை: வண்ணாத்தி நுகர்ந்த பூ
வேடன் அடித்த புறா: இல்லை எரியும் சருகு
நான் நானாக, நானாகியவனாக, என்னுள்
என்னோடு, நிலை தெளிந்து
தாமரைமேல் நீராகப் பற்றற்று
நிற்கிறேன்
நீ?
பிட்டு அவித்த ஆவியில் துளிர்த்துத்
தேங்கிய தண்ணீராய்த் தளம்புபவன்

இவ்வாறாக ஆழ்மன உரையாடல்களாய் அவரது ஆக்கம் நீண்டு செல்கின்றது. மேலைப் புல உளவியலாளர் குறிப்பிடும் நனவு அருவி அல்லது நனவோடை நுட்பவியலை தமிழ்ச் சூழலுக்கு ஏற்றவாறு அகஸ்தியர் பயன்படுத்தியுள்ளார்.

ஆழ்மன அமுக்கத்தைத் தடைகள் இன்றி வெளிக்கொண்டு வருதல் நனவு அருவி எழுத்தின் முக்கிய நோக்கம்.

உணர்வூற்று உருவகச்சித்திரம் அக்காலப்பகுதியில் (1969) பல விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டது. அந்தப் புதிய முயற்சியை ஆதரித்தவரும் உளர். அடியோடு நிராகரித்தவரும் உளர்.

தமிழ் இலக்கிய வட்டத்தில் இதை ஒரு புது முயற்சியாகவும் கடும் பரிசோதனையாகவும் செய்து ஒரு கன்னிக் குழந்தையாக்கி விட்டிருக்கிறேன் என்று அகஸ்தியர் குறிப்பிட்டுள்ளார்.

உணர்வூற்று உருவகச் சித்திரம் பற்றிக் கவிஞர் இ.முருகையன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

உணர்வூற்று உருவகச் சித்திரம் அகஸ்தியர் தமக்கென உருவாக்கியதோர் இலக்கிய வடிவம். உடைமையாளருக்கும் உழைப்பாளருக்குமுள்ள பேதத்தையும் அது பற்றிய போதத்தையும் ஆதாரமாகக் கொண்டது. அவருடைய உணர்வூற்றும், அவற்றின் அடியாகப் பிறந்த உருவகமும் உலகக் காட்சியாகிய சித்திரமும் வரவேற்கப்பட வேண்டியவை.

## அகஸ்தியரின் ஆக்கங்கள் பற்பல

முந்நூற்று எழுபது சிறு கதைகள், பத்து குறுநாவல்கள், ஒன்பது நாவல்கள், நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள், திறனாய்வுகள், இருபது வானொலி நாடகங்கள் என்றவாறு அவரது எழுத்துப் பணி விரிவு கொண்டது.

இலங்கையின் அனைத்து இதழ்களிலும் அவரது எழுத்துக்கள் வெளிவந்துள்ளன. தமிழகத்தில் தாமரை, எழுத்து, கலைமகள், தீபம், ஜீவா, கண்ணதாசன் முதலாம் இதழ்களிலும் அவரது படைப்புக்கள் இடம்பெற்றன.

1983 ஆம் ஆண்டு இலங்கையில் நிகழ்ந்த இனக்கலவரத்தினால் பாதிப்புக்குள்ளாகி அவர் தமது மனைவி அனேசம்மா நவமணி, பிள்ளைகள் யோகரட்ணம், நவஜோதி, நவஜீவா, நவஜெகா, நவஜோனி ஆகியோருடன் பிரான்ஸ் நாட்டிற்கு புலம்பெயர்ந்து சென்றார். புலம் பெயர்ந்த நிலையிலும் தமது எழுத்துப்பணிகளைத் தொடர்ந் தார். அதிகம் எழுதினார். ஆக்கபூர்வமாக எழுதினார் சமூக விசைப்படுத்தலோடு எழுதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேருவில பௌத்த பள்ளி

■

வைத்தியகலாநிதி
அருமைநாதன் ஸதீஸ்குமார்

திருகோணமலை தேசத்தில் பௌத்த மக்களின் யாத்திரைத் தலங்களில் ஒன்ருன சேருவில மங்கள ரஜமகா விகாரை கொட்டியாபுரப்பற்று பிரதேசத்தின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இது இன்றைய சேருவில பிரதேச செயலர் பிரிவில் உள்ளடங்கியுள்ளது. சுமார் 100 அடி உயரமான இவ்விகாரம் சேருவில தாதுகோபுரம், சேருவில மங்கள மஹாசாய, சேருவில திஸ்ஸ மஹவெஹர என்றும் அழைக்கப்படுகின்றது. இதன் தோற்றுவாய் பற்றி உறுதியான தகவல்கள் கிடைத்திராதபோதிலும் பௌத்த நூல்கள் கூறும் தகவல்களைக் கொண்டு இதன் வரலாற்றை ஆராய்வோமாயின்!

According to the late Dr. R. L. Brohier, Seruwila region was a vast swamp or villu where the flood waters of the Mahaweli Ganga collected. This villu was the home of large flocks of teal (seru) during migratory period. That perhaps was how the place came to be known as Seruwila (Seeing Ceylon by R. L. Brohier).

நீர் கொண்ட பரந்த பிரதேசம் 'வில்லு' என்று அழைக்கப்படும். மகாவலி கங்கையின் வெள்ளநீர் காரணமாக உண்டாகும் நீர் கொண்ட இச்சேற்று பிரதேசம் (Vast Swamp or Villu) சேறுவில்லு என்றழைக்கப்படும். இது Dr. R. L. Brohier அவர்களின் கூற்றாகும். இது பிற்காலத்தில் மருவி சேறுவில என்றாகியிருக்கலாம்.

இவ்விடத்தில் முந்தைய மூன்று வகையான கல்ப காலப்பகுதியில் புத்தர்கள் என்று அழைக்கப்பட்ட கக்குஸ்ஸந்த, கோனாகமன, கஸ்ஸப என்னும் மூவருக்காக விகாரைகள் அமைக்கப்பட்டிருந்ததாக நம்பப்படுகின்றது. அத்தோடு இறுதிப் புத்தரான இவ் யுகத்தின் கௌதமபுத்தர் இவ்விடத்திற்கு வந்தபோது எட்டு எண்ணிக்கையான கையளவு சப்பு மலர்களைக் கொண்டு இங்கு வழிபட்டதாகவும் கூறப்படுகின்றது.

புத்தரின் மூன்றாவது இலங்கை வருகை கூறப்படுகின்ற போது, கல்யாணி (இன்றைய களனி) தேசத்தை ஆட்சி புரிந்த நாகர்குல மன்னனான



சேருவில ரஜமகா விகாரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தடாகம்





போதி சத்வர் சிலை

மணியகிகவின் வேண்டுகோளின் படி இடம்பெற்றது. நாகர்களின் அழைப்புக்கிணங்க தொடர்ந்து அவர் சேறுவிலவுக்கும் வருகை தந்திருந்தார் (1).

கி.மு 2ஆம் நூற்றாண்டில் எல்லாளனுடன் நட்புக் கொண்டிருந்த கவந்தீச மன்னன் (காக்கைவண்ண தீசன்) உறுகுணை தேசத்தை மாகாமம் (மாகமை) என்னுமிடத்தி லிருந்து ஆட்சி புரிந்தான். அக்காலத்தில் சேறுவில என்னு மிடத்தில் அரசு புரிந்து கொண்டிருந்த சிற்றரசனொருவனுடன் தோழமை கொண்டு இவ்விடத்திற்கு வந்து, புத்தபகவானின் புனித சின்னங்களுள் ஒன்றான நெற்றி எலும்பை வைத்து விகாரையொன்றை அமைத்தான்.(2) இது பற்றி தாதுவங்ஸய மற்றும் ஜினகாலிமாலி எனும் மத நூல்களிலும் காணப்படுவதாக குறிப்புகள் தெரிவிக்கின்றன.

அதுமட்டுமல்லாது சேறுவிலவை ஆட்சிசெய்த மன்னர்கள் பற்றி தகவல்கள் கிடைக்கப்பெறாத போதிலும், கிழக்கிலங் கையில் சேறு மற்றும் சோம ஆகிய இடங்களில் முறையே சிவ மற்றும் அபய என்பவர்கள் சிற்றரசர்களாக இருந்தமை பற்றி பிராமிக் கல்வெட்டுகள் மூலம் அறியப்படுகிறது.(3)

இதன்பின்னர் காடுமண்டி கவனிப்பாரற்றுக் கிடந்த இவ் வணக்கத்தலம் 1921 ஆம் ஆண்டில் சேறுவில ஆதி காரணகர்த்தா தூரந்தர மங்கள தரசுமகீரசுத்தி ஸ்ரீ தம்பஸ் ஆரே ஸ்ரீ சுமேதங்கர நாயக்க தேரரசு அவர்களால் புனருத்தாரணம் செய்யப்பட்டதாக கூறப்படுகின்றது(4). இச்சம்பவத்துக்கு தாதுவங்ஸ என்னும் வரலாற்று நூல் இயற்றப்பட்டது பெரும் அமைந்திருந்தது. பின்னர் 1924 இல் சேறுவில முன்னேற்றச் சங்கம் அமைக்கப்பட்டது. இத்தேரரை பிரதம குருவாகக் கொண்டு அரசாங் கத்தின் அனுசரணையுடன் விகாரையின் திருத்த வேலைகள் இடம்பெற்று 1930-09-08 அன்று முடிவு பெற்றது.

இப்புனருத்தாரண வேலைகளின் போது இரண்டு கல்வெட்டுக்கள், புத்த பெருமானின் பல சிலைகள், கைகள் உடைந்த நிலையிலுள்ள போதிசத்வர் சிலை, நெலும் மலர் சிலை, கருங்கற் களாலான குளம், விலங்குகளின் உருவங்கள் கொண்டமைந்த சிற்பங்கள், பல கருங்கற்தூண்கள், ஏழுதலை மற்றும் ஒன்பதுதலை நாகத்தின் கீழமர்ந்த புத்தர்சிலைகள் என்பனவும் இங்கு கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இது இப்பகுதியில் ஆதிக்கம் செலுத்தி வாழ்ந்த திராவிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தாமரைக்கல்



ஒன்பது தலை நாகத்தில்
போதி சத்வர்









தமிழ்க்
கல்வெட்டு

முன்னோடிகளான நாகர்களின் செல்வாக்கைப் பிரதிபலிப்பதாக அமைகின்றது. இதன் தொடர்ச்சியாக 1962 ஆம் ஆண்டு இத்தாபகத்தைச் சூழவுள்ள 85 ஏக்கர் விஸ்தீரண நிலப்பரப்பு தொல்பொருள் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டது. அத்தோடு இவ்விகாரையின் வளாகத்தில் தொல்பொருள் நூதனசாலை ஒன்றும் அமைக்கப்பட்டது. இங்கு மேற்கூறப்பட்ட புராதன சிற்பங்கள் அடங்கலான தொன்மையான பொருட்கள் பாதுகாக்கப்படுகின்றன. இவ்விகாரம் பற்றிய வரலாற்றின் சிறிய பகுதிகளையும் இங்கே அறியக்கூடியதாயுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்விகாரை புனரமைக்கப்பட்ட காலங்களில் யாத்திரிகர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகக் காணப்பட்ட போதிலும், 1944 இல் திருகோணமலை - மூதூர் இடையிலான இயந்திரப்படகு போக்குவரத்துச்சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னரும், அதைத் தொடர்ந்து 1965 களில் அல்லை-கந்தளாய் வீதி திறக்கப்பட்டதும் பௌத்த யாத்திரிகர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படலாயிற்று. அத்தோடு 1970 களில் அரசாங்கத்தின் உதவியுடன் புதியநகரம், யாத்திரிகர் விடுதி மற்றும் சந்தைத் தொகுதிகள் முதலான வசதிகள் இவ்விகாரைச் சுற்றாடலில் ஏற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(5)

தொடர்ந்து வந்த காலமான 1952 களில் கிழக்கு மாகாணத்தில் மற்றுமொரு விவசாயக் குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டது. அல்லை-கந்தளாய் எனப் பெயரிடப்பட்ட விவசாயக் குடியேற்றத் திட்டத்தின் போது தென்னிலங்கையிலிருந்து பெருமளவு சிங்கள மக்கள் கொட்டியாபுரப்பற்று பிரதேசத்தின் பலவிடங்களில் குடியமர்த்தப்பட்டனர். சேருவிலவுக்கு அண்மையாக மேற்கொள்ளப்பட்ட இவ்வகையான பத்துக்கும் மேற்பட்ட சிங்களக் கிராமங்கள் மூலம் சேருவில விகாரையின் மத வழிபாடுகள், பெரஹெரா நிகழ்வுகள் மற்றும் சமயபோதனைகள் என்பன எவ்வித இடையுறுகளுமின்றி நடைபெற்றுவருகின்றன.

அடிக்குறிப்புகள்

1. சேறுவில மங்கள ரஜமகா விகாரய சக லலாட தாது கதா வஸ்துவ [2011] - ரூபசிறி குணவரசுத்தன [பக்-04]. இது ஒரு சிங்கள மொழி நூலாகும்.
2. இலங்கையிற் தொல்லியலாய்வுகளும் திராவிடக் கலாச்சாரமும் [1988] - திருமதி.ஜி. தனபாக்கியம் [பக்- 57]
3. ஈழத்தவர் வரலாறு [1996] - கலாநிதி க. குணராசா [பக்-29]
4. சேருவில விகாரைப்பகுதியிலுள்ள வரலாற்றுக் குறிப்புகள் [நினைவுச்சின்னம்]
5. கொட்டியாபுரப்பற்று வரலாறு - எம்.ஏ. சமது [பக்-153]
6. ஆங்கில விக்கிபீடியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்






# பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் தேசியப் பாடசாலை களுவாஞ்சிகுடி

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.




இ.பாக்கியராஜன்

"உள்ளுவ தெல்லாம் உயர்வு' எனும் உயரிய கருத்தை மகுட வாக்கியமாகக் கொண்டு 'கேடில் விழுச் செல்வம் கல்வி' என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு அமைய அச்செல்வத்தை வழங்கும் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் நூற்றாண்டு விழாவைத் தற்போது கண்டு மகிழ்கிறது. மேலும் ஒரு நிகழ்வு மே மாதம் 'உள்ளம்' சிறப்பு மலர் வெளியீடு ஆகியவற்றுடன் நடத்தப்பட விருக்கிறது. இதற்கு முன்னர் 2013 ஆம் ஆண்டில் வித்தியாலயத்தின் 94 ஆவது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிருப்பு தேர்தல் தொகுதியில் பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலகத்தின் நிர்வாகத்துக்கு உட்பட்டது பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலம் தேசிய பாடசாலை களுவாஞ்சிகுடி. இப்பாடசாலை பட்டிருப்புத் தொகுதியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இதன் காரணமாக சுமார் 36 கிராமங்களைச் சேர்ந்த 2510 மாணவர்களுடனும் 137 ஆசிரியர்களுடனும் இயங்கி வருகின்றது.

பாடசாலையின் வளர்ச்சியில் காலத்துக்குக் காலம் பலரும் தம் பங்களிப்பை நல்கியுள்ளனர். இவர்களில் அரசாங்க சபை உறுப்பினராக இருந்த அமரர்.வி.நல்லையா மற்றும் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர்.சி.மூ.இராசமாணிக்கம் ஆகிய இருவரும் குறிப்பிடக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியவர்களாவர். இவர்களின் பின்வந்த அரசியல் பிரமுகர்களும் தம் பங்களிப்பினை வழங்கியுள்ளனர்.

கத்தோலிக்க மிசனரிமாரும் மெதடிஸ்த மிசனரி மாரும் இராமகிருஷ்ண மிசனும் மட்டக்களப்பு மாவட் டத்திலே பாடசாலைகளை ஆரம்பித்தனர். இவற்றை விட சிறார்களின் கல்விக்காக திண்ணைப் பள்ளிகளை யும் பின்னர் சைவப் பாடசாலைகளையும் கிராமத்தவர் சிலர் ஆரம்பித்தனர். இதற்கு இந்து ஆலயத்தினரும் கிராமத் தலைவர்களும் இந்து சமய தலைவர்களும் உறுதுணையாக இருந்தனர்.

இவ்வாறு திண்ணைப் பள்ளியாக ஆரம்பிக்கப்பட்டு, பின் சைவப் பாடசாலையாக மாறி, பல்வேறு வளர்ச்சிப் படிகளைத் தாண்டி இன்று தேசியப் பாடசாலையாக நூற்றாண்டு விழாவைக் காணும் சிறப்பையும் பெருமையையும்பட்டிருப்புமத்தியமகாவித்தியாலயம் பெற்றுள்ளது.

தற்போது களுவாஞ்சிகுடி விநாயகர் வித்தியாலயம் அமைந்துள்ள இடத்தில் 1919 ஆம் ஆண்டுக்கு முன்னர் இப்பாடசாலை திண்ணைப் பள்ளியாக ஆரம்பிக்கப்பட்டு இயங்கியது. திரு. கணபதிப்பிள்ளை மற்றும் திரு.சபாபதி என்ற இருவர் இங்கு ஆசிரியர் களாகச் சேவை செய்தனர் என்றும் வீடு தோறும் எண்ணெய்ச் சிந்து பாடி அதன் மூலம் கிடைத்த வருமானத்தில் இவர்களுக்கு சம்பளம் வழங்கப் பட்டது என்றும் கூறப்படுகிறது.

1919 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி இந்து சபை இத்திண்ணைப் பாடசாலையைப் பொறுப்பேற்று அதே இடத்தில் சைவப் பாடசாலை என்னும் பெயரில் நடத்தியது. இதன் மூல கர்த்தாவாக கிராமத்தலைவர் த.சபாபதிப்பிள்ளை என்பவர் செயற்பட்டுள்ளார். போரதீவைச் சேர்ந்த திரு. சிவஞானம் என்பவர் முதல் ஆசிரியராகவும் அவருக்குப் பின்னர் சுவாமி விபுலானந்தரின் மைத்துனர் திரு.பூபாலபிள்ளையும் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளனர்.

பின்னர் 1924 ஆம் ஆண்டு அரசாங்கம் இப்பாட சாலையைப் பொறுப்பேற்றதும் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என்னும் நாமம் பெற்றது. இப்பாடசாலையின் முதலாவது அதிபர் என்ற பெருமை ஆரையம்பதியைச் சேர்ந்த திரு.த.சீனித் தம்பி என்பவருக்கு உரித்தானது. நாளொரு வண்ண மும் பொழுதொரு மேனியுமாக இப்பாடசாலை வளர்ச்சியடைந்து சுமார் 175 மாணவர்களுடன் 9 ஆம் வகுப்பு வரை நடைபெற்றது.

இந்தப் பாடசாலையின் வரலாற்றில் 1936 ஆம் ஆண்டு யூன் மாதம் 1 ஆம் திகதி நடைபெற்ற ஒரு சம்பவம் மிக முக்கியமாகக் கூறப்படக்கூடிய ஒரு தோற்றுவாயாக அமைந்தது எனலாம்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








நூல் நிலையம்




விஞ்ஞான கூடத்தில் ஆசிரியர்கள்

பாடசாலை இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டதே அந்தச் சம்பவமாகும். ஒரு பிரிவு அதே இடத்தில் இயங்க, மற்றைய பிரிவு தற்போது தேசியப்பாடசாலை இயங்கும் இடத்துக்கு 'பட்டிருப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை' என்னும் பெயருடன் மாற்றப் பட்டது.

1937 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் திகதி நாட்டுக் கல்விமுறையைப் பின்பற்றும் பாடசாலை ஆனது. அத்துடன் மீண்டும் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. 1937 ஆம் ஆண்டு யூன் மாதம் 1 ஆம் திகதி இங்கு பயின்ற மாணவிகள் விநாயகர் ஆலயத் துக்கு அருகில் இயங்கிய மற்றைய பிரிவுக்கு மாற்றப் பட்டனர். பட்டிருப்பு அ.த.க. பாடசாலையில் மாணவர்கள் மட்டுமே பயின்றனர். 1943 ஆம் ஆண்டில் அரசினர் கனிஷ்ட ஆங்கிலப் பாடசாலை என்னும் பெயர் பெற்றதாகவும் அது தொடக்கம் மீண்டும் கலவன் பாடசாலை ஆனது என்றும் அறியவருகின்றது. மேலும் 1958 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி அரசினர் சிரேஷ்ட உயர்தரப் பாடசாலை ஆனதுடன் 1962 இல் மகா வித்தியாலய மாகவும் தரமுயர்த்தப்பட்டது.

பட்டிருப்பு மகா வித்தியாலயம் என்னும் பெயரில் இயங்கிய இப்பாடசாலை 1980 ஆம் ஆண்டு மத்திய மகா வித்தியாலய மாகவும் 2002 ஆம் ஆண்டு தேசியப் பாடசாலையாகவும் தரம் உயர்த்தப்பட்டது.

1960 ஆம் ஆண்டுக்கு முன்னரே இங்கு விஞ்ஞான ஆய்வுகூடம், தொழிற்கூடம் என்பன கட்டப்பட்டது டன் பின்னர் க.பொ.த. உயர்தர விஞ்ஞான பிரிவு மற்றும் வர்த்தகப் பிரிவுகளும் ஆரம்பிக்கப்பட்டன.

பாடசாலையின் வரலாற்றில் அதன் அதிபர்களாக திரு.சி.தம்பிராசா தொடக்கம் திரு.பொன்.வன்னிய சிங்கம் வரை 23 பேர் சேவையாற்றியுள்ளனர். 24 ஆவது அதிபராக திரு.கதிராமன் தம்பிராசா தற்போது கடமை யாற்றுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டரங்கு







திருவாளர்கள். ரி.எஸ்.வேதநாயகம், ஜே.எம். சாமுவேல், க.அருணாசலம், பண்டிதர் வித்துவான் வி.சி.கந்தையா, வித்துவான் க.செபரெத்தினம், என்.நடராசா, ரி.சுப்பிரமணி யம், கே.சாந்தலிங்கம், பொன்.வன்னியசிங் கம் ஆகியோரின் காலங்கள் குறிப்பிட்டுப் பேசப்படுகின்றன.

தற்போதைய அதிபர் 2002 ஆம் ஆண்டு தொடக் கம் 2015 ஆம் ஆண்டு வரை இங்கு பிரதி அதிபராகக் கடமையாற்றியவராவார். இவரே 2015 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 23 ஆம் திகதி அதிபராகப் பொறுப்பேற்றுள்ளார். இவரின் காலத்தில் மாணவர் தொகை விஞ்ஞான பிரிவு உட்பட அதிகரித்துள்ளது. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை சித்தியும் 67 சத வீதமாக உயர்ந்துள்ளது.

1937 ஆம் ஆண்டில் பெற்றோர் தின விழா நடத்தப்பட்டிருக்கிறது. 1951 ஆம் ஆண்டில் கூட் டுறவுப் பண்டகசாலை ஆரம்பிக்கப்பட்டதும் குறிப் பிடத்தக்கது. சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட துடன் சாரணர் பாசறையும் இடம்பெற்றிருக்கிறது. விஞ்ஞானக் கழகம், வரலாறு, குடியியல் கழகம் என்பன 1961-1963 காலப்பகுதியில் ஆரம்பிக்கப் பட்டு அதன் வாயிலாக மாணவர்களின் திறமைகள் மேலும் வளர்க்கப்பட்டன. பிற்பட்ட காலங்களில் கடெற், சென்.ஜோன்ஸ் படைப்பிரிவு, சுகாதாரக் கழகம், சுற்றாடல் முன்னோடிக் கழகம் என்பனவும் மாணவர்களின் புறக்கிருத்திய நடவடிக்கைகளின் மேம்பாட்டுக்காக ஆரம்பிக்கப்பட்டன.

1977 ஆம் ஆண்டில் அதிபராகப் பதவி ஏற்ற வித்துவான் க.செபரெத்தினத்தினம் அவர்களின் காலத்தில் விபுலானந்தர் விழா மற்றும் புத்தகக் கண்காட்சி என்பன நடத்தப்பட்டதுடன் 'உள்ளம்' என்னும் பெயரில் ஒரு சஞ்சிகையும் வெளியிடப் பட்டது. இதுவரை 6 இதழ்கள் வெளிவந்துள்ளன.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரிய நேத்திரனும் இப்பாடசாலையின் பழைய மாணவரா வார். 1979 ஆம் ஆண்டில் 23 மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றனர். முதன் முதல் மருத்துவ பீடத்துக்கு ஒரு மாணவனும் விஞ்ஞான பீடத்துக்கு இருவரும் தெரிவு செய்யப்பட்டனர்.

தமிழ்த் தினப்போட்டிகளிலும் பேச்சு, வில்லுப் பாட்டு, பாவோதல் முதலிய போட்டிகளிலும் இப்பாடசாலை மாணவர்கள் தேசிய ரீதியில் பரிசி ல்களைப் பெற்றுள்ளனர். 2017 ஆம் ஆண்டில் க. பொ.த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் களில் 11 பேர் 9 பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. விளையாட்டுக்க ளிலும் மாணவர்கள் சாதனை புரிந்துள்ளனர். 2018 ஆம் ஆண்டில் 28 மாணவர்கள் அதிக அளவில் சி த்தி பெற்றமையும் சுட்டிக் காட்டப்பட வேண்டிய தொன்றாகும். ஒரு மாணவன் தேசிய மட்டத்தில் 2 ஆம் இடமும் மற்றொரு மாணவன் 4 ஆம் இடமும் பெற்றார்.







(பிரதி அதிபர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அதிபர் திரு. கதிராமன் தம்பிராசா

### பாடசாலைக் கீதம்

இலகுநல் விசையொடு வாழ்க - எம
தெழில் கொள் கலாலயம் வாழ்க (இலகு..)
கலை அறிவியலொளிர் சோதி - தெய்வக்
காதலையூட்டுதா யாதி
பலகலைநியமம் பட்டிருப்பு
மத்திய மா வித்தியாலயமே (இலகு...)

மீனிசைபாடுநல்வாவி - விளை
வோங்கு கழனிகள் மேவி
வானுயர்ந்தபலசோலை வள
மருவுமெங்கள் கலாசாலை(இலகு...)

வாழ்வுறுசீர் களுவாஞ்சிகுடி
மாண்புவீங்குகலை நிதியம்
தாழ்விலாதெவருங் கூடித் - தாய்
உரிமைகொள்ளும் ஒருநிலையம்(இலகு..)

மானில மீதினில் வாழ வழி
காட்டும் அன்னை நிதம் வாழ்க
வான் உயர்ந்த மலைமேலே - மதி
போலவே நிலவி வாழ்க(இலகு...)

பாடசாலை வரலாற்றில் இதுவரை 2012 ஆம் ஆண்டில் 32 மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றனர். அதிபர்கள் வரிசையில் கூடுதலான அளவில் 13 வருடங்கள் கடமையாற்றிய பொன்.வன்னியசிங்கத்தின் காலம் இதுவாகும். கல்வி நிர்வாக சேவை அதிபர் என்ற வகையிலும் இவர் முதல் அதிபராவார்.

இவருடைய காலத்தில் பல் சிகிச்சைப் பிரிவு, கணினிப் பிரிவு ஆகியனவும் ஆரம்பிக் கப்பட்டன.

1961 ஆம் ஆண்டில் HIGHER SCHOOL CERTIFICATE (H.S.C) எனப்படும் உயர் தரப் பாடசாலை தராதரப் பத்திர வகுப்பு ஆரம்பிக்கப் பட்டது. இவ்வகுப்பில் படித்து 1962 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் எவரும் சித்தியடையவில்லை. பின்பு 1963 ஆம் ஆண்டு நடைபெற்ற பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் இராசலிங்கம், தம்பிராசா ஆகிய இருவரும் சித்தியடைந்து பல்கலைக்கழகம் சென்றனர். அடுத்த பரீட்சையில் 12 மாணவர்கள் சித்தியடைந்து பல்கலைக்கழகம் சென்றனர்.

இக்காலத்தில் அதிபர் க.அருணாசலம் மற்றும் பண்டைத்தரிப்பைச் சேர்ந்த வித்துவான் மு. விருத்தாசலம், உசன் மிருசுவிலைச் சேர்ந்த பண்டிதர் சரவணமுத்து, கோட்டைக்கல்லாற்றைச் சேர்ந்த பண்டிதர் க.கந்தையா, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பி.எஸ்.சி.பட்டதாரியான திரு.சின்னத்துரை அவரின் மனைவி (பி.ஏ. பட்டதாரி) ஆகியோர் கடமையாற்றினர். அதிபர் அருணாசலம் எச்.எஸ்.ஸி வகுப்புக்கு வரலாறு கற்பித்தார். எந்தத் துறையை எடுத்தாலும் நிறைவு காண்பது அரிது. அதேபோன்று இப்பாடசாலையின் தேவைகளும் இன்னமும் உள்ளன. பௌதிக வளங்கள் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும். சங்கீதம் பயிலும் மாணவர்கள் ஒரே ஒரு பியானோவை மட்டுமே நம்பியிருக்கின்றனர். இசைக்கல்விக்கு இன்றியமையாத கருவிகளான வயலின், மிருதங்கம் என்பன வழங்கப்படவில்லை.

1960 களில் களுவாஞ்சிகுடி குளத்தில் நீர் வற்றியிருக்கும் போது விளையாட்டுப்போட்டிகள் அங்கு நடத்தப்பட்டன. அக்காலத்தில் பாடசாலைக்கு பின்னாலுள்ள தற்போதைய மைதானம் காடாக இருந்தது. பின்னர் அங்கு மைதானம் அமைக்கப் பட்டது. தற்போது 4 கோடி ரூபா ஒதுக்கப்பட்டு 3 மாடி கட்டடம் ஒன்று கட்டப்பட்டி ருப்பதுடன் விளையாட்டு மைதானமும் நவீன மயப்படுத்தப் படுகிறது. மேலும் 80 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்பு வேலைகள் நடைபெற் றிருப்பதுடன் 19 இலட்சம் ரூபா செலவில் மேலும் பிள்ளைகளுக்கான கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இராமகிருஷ்ணர், விவேகானந்தர், விபுலானந்தர், நாவலர் ஆகிய நான்கு இல்லங்களாகப் பிரிந்து மாணவர்கள் விளையாட்டுப் போட்டியை நடத்துகின்றனர்.

பாடசாலைக் கீதம் இங்கு ஆசிரியராகக் கடமையாற்றிய திரு.வி.விசுவலிங்கம் என்பவரால் இயற்றப்பட்டது. அதேபோன்று பாடசாலைக்கான இலட்சினை திரு.எஸ்.சபாரெத்தினம் (ஆசிரியர்) என்பவரால் வடிவமைக்கப் பட்டது.

பட்டிருப்புத் தொகுதியைப் பொறுத்தவரை இக்கல்விக்கூடம் பல சிறப்புக்களைக் கொண்டுள்ளது. இத்தொகுதியின் நாலா புறமும் உள்ள கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் அறிவொளி ஊட்டும் இக்கல்விக் கூடத்தில் கல்வி கற்றமையும் கற்கின்றமையும் ஒரு பெருமை யாகும்.

இத்தகுபெருமைகளுடன் நூறு ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள இப்பாடசாலை ஆரையம்பதிக்கு வடக்கே உள்ள கல்லூரிகள் போன்று தெற்கே ஒரு தலைசிறந்த கல்லூரியாக மிளிர வேண்டுமென வாழ்த்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடும் நடராஜர் திருவுருவம் பிரதிபலிக்கும் அபிநயங்கள்



முனைவர் சண்முக சர்மா
ஜெயப்பிரகாஷ்
பாண்டிச்சேரி, பல்கலைக்கழகம்

"சிற்பங்கள் நாட்டிய அபிநயங்களைப் பின்பற்றியே அமைக்கப்படுகின்றது" என்பதைத் தெளிவுபடுத்துவதற்காக, நடராஜர் சிற்ப வடிவத்தை முன்வைத்து அவ்வடிவத்தில் காணப்படும் அபிநயக் கூறுகளை அறிந்து கொள்ளும் நோக்கில் இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

அரங்கப் பெருவெளியில் உடல் அசையும்போது அது பல காரண காரியத் தொடர்புடன் அசைந்தாடுகின்றது. இவ்வாறு அசைந்தாடும் வடிவமாகவும் இவ்வுலகத்தின் இயக்க வடிவமாகவும் காணப்படுகின்றது நடராஜர் திருவுருவம். இத்திருவுருவம் நாட்டிய அபிநயங்களை ஆதாரமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

நாட்டிய அபிநயங்களை தமிழ் நாட்டுக் கோவில் சிற்பங்களிலும் உலோக வார்ப்புக்களிலும் காணலாம். அபிநயமானது பார்ப்பவர் மனதில் ரசம் ஏற்படக்கூடிய விதமாக தேகத்தையும் அதன் உறுப்புக்களையும் வளைத்துக் காட்டி, பார்ப்பவர் மனதில் கதையை அல்லது கருத்தை விளங்க வைக்கும் கலைவடிவமாகும். நாட்டிய நூல்களில் அபிநயத்தை ஆங்கிகம், வாச்சிகம், ஆஹார்யம், சாத்விகம் என்று நான்கு வகையினதாக வகுத்துக் கூறியுள்ளனர்.

### ஆங்கி அபிநயம்

ஆங்கி அபிநயம் உடல் அங்கங்களால் நிகழ்த்திக் காட்டப்படுவது. உடல் அங்கங்களை அங்கம், உபாங்கம், பிரத்தியாங்கம் என மூன்றாகப் பிரித்துக் காட்டுவர். தலை, கை, மார்பு, விலா, இடுப்பு, கால்கள் என்பன அங்கமாகவும், தோள்கள், மேற்கைகள், முதுகு, வயிறு, தோள், கணுக்கால் என்பன பிரத்தியாங்கமாகவும், முகம், கண், கண் வழிகள், கன்னங்கள், மூக்கு, தாடை, உதடுகள், பற்கள், நாக்கு, நாடி, விரல்கள் என்பன உபாங்கங்களாகவும் விளங்குகின்றன.

தலையினைப் பயன்படுத்தி ஒன்பது விதமான அசைவுகளையும், கண்ணினைப் பயன்படுத்தி எட்டு விதமான அசைவுகளையும், கழுத்தைப் பயன்படுத்தி நான்கு விதமான அசைவுகளையும் அபிநயிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்று நாட்டிய நூலோர் கூறிச் சென்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'கை'யினை மட்டும் பயன்படுத்தி கருத்தைச் சொல்லும் முறையினை நாம் முத்திரைகள் என்று குறிப்பிடுவோம். இம்முத்திரை ஒற்றைக் கை (பிண்டி) இரட்டைக்கை (பிணையல்) நிறுத்தக்கை என மூவகை எனக் குறிப்பிடுவர்.

மேற்கூறப்பட்டுள்ள தலை, கண், கழுத்து, கை, அபிநயங்களானவை நாடகம், நிருத்தம் என்பவற்றிக்கு கூறப்பட்டனவாயினும் அவை சிற்பத் திருவுருவங்களைச் செதுக்கும்போதும் உலோக உருவங்களை வார்க்கும்போதும் கவனத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டும் என சிற்ப நூல்கள் கூறி நிற்கின்றன.

### வாச்சிக அபிநயங்கள்

வாச்சிக அபிநயங்கள் வாயால் செய்யும் சப்த வேற்றுமையால் கண்டத் தொனி வேறுபாட்டாலும் வார்த்தைகளின் உச்சரிப்பு வேறுபாட்டாலும் உண்டாக்கப்படுவதால் காவிய பாராயணத்திலும் நாடகங்களிலுமே உபயோகிக்கப்படுகின்றன.

### ஆஹார்ய அபிநயம்

ஆஹார்ய அபிநயம் ரசபாவங்கள் தோற்றுவதற்கு ஏற்றவிதத்தில் தேகத்தை ஆடை ஆபரணங்களால் அலங்கரித்து நடிப்பதாகும்.

### சாத்விக அபிநயம்

சாத்விக அபிநயம் மனதின் கண்ணே நிகழும் நவரசங்களால் தேகத்தில் ஏற்படும் வரவை, கண் நோக்கு முதலான மாறுதல்களைக் காட்டுவதாகும்.

இந்த அபிநயங்களில் ஆஹார்ய அபிநயம் மட்டுமே உடலிற்கு புறத்தே இருந்து உடலை மெருகூட்டப் பயன்படுத்தப்படுகின்றது. இந்த அபிநயங்களில் குரல் வழி அபிநயம் தவிர ஏனைய மூன்று அபிநயங்களையும் பயன்படுத்தி சிற்பங்கள் செதுக்கப்படும். காரணம் குறிப்பாக குறிப்பிட்ட ஒரு உருவம் இவ்வாறான உடையைப் பெற்றிருக்க வேண்டும். அதேபோல் குறிப்பிட்ட உடையில் குறிப்பிட்ட முறையான பாவம் தெரியத்தக்க வகையிலும் குறிப்பிட்ட உடல் அசைவு முறையையும் அச்சிற்பம் கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு கொண்டிருக்கும் சிற்பம் பூரணத்துவம் பெற்றதாக இருக்கும்.

குறிப்பாக நடராஜர் சிற்பத்தையே எடுத்துக் கொண்டால் அச்சிற்பத்தில் ஆஹார்ய அபிநயத்தைக் குறிக்கும் ஒப்பனை ஆடை ஆபரணங்களாக விரிந்த சடையுடன் கூடிய சடா முடியினுள் பாயும் கங்கையும், மண்டலமிட்ட நாகாபரணமும், கபால ஓடும், ஊமத்தம் பூவும், அதற்கு மேல் பிறைச் சந்திரனும் உண்டு. நெற்றியில் திருநீறு, முக்கண்ணும், வலக்காதில் கடுக்கன், இடக்காதில் குண்டலம், கழுத்தில் - உருத்திராக்கம், மண்டையோடு, ஒரு கையில் பாம்பு வளை, இடையில் மணியிழைத்த உதர பந்தம், தோழில் முப்புரிநூலும், கையில் காப்பு வளை, இடையில் மணியிழைத்த உதரபந்தனம், இடையில் மறைப்பகுதியில் புலித்தோலாலான இறுக்கமான குறுங்காற்சட்டை, காற்றில் அசைந்தாடும் உத்தரியம் காணப்படுகின்றது. காலில் கழல், கைவிரல் கால் விரல்களில் கணையாழி என்பன நடராஜருடைய உடலுக்கு புறத்தே இருந்து உடலை அலங்கரிக்கும் ஆடை ஆபரணங்கள் ஆகும். அவ்வுருவம் பயன்படுத்தும் பொருட்களாக பின் வலக்கை உடுக்கும், பின் இடக்கை தீயும் ஏந்தியவாறு திருவாசியை தொட்டவாறு அமையப் பெற்றுள்ளது.



இவை நடராஜருடைய ஆஹார்ய அபிநயமாகின்றது. இந்த ஆஹார்ய அபிநயத்திற்கு சில காரணங்களையும் கற்பிக்கின்றனர். உடுக்கை - படைத்தல், தீ - அழித்தல் என்பதையும் குறிக்கின்றது. பொதுவாக ஆஹார்ய அபிநயம் உடலின் புறத்தே இருந்து உடலை குறிப்பிட்ட ஒருருவத்திற்கு மாற்றுவதற்கு பயன் படுத்தப்படும் பொருட்கள் ஆகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடராஜருடைய உடல் நிலைகளான இடப் பக்கம் திரும்பியவாறான முகம், கடைக்கண் பார்வை, வலக்கை - அபய ஹஸ்தம், முன் இடக்கை வலப்பக்கம் நீட்டியவாறு, முயலகன் மேல் ஊன்றிய பாதம், தூக்கிய குஞ்சித பாதம் என்பன ஆங்கிக சலனங்களைக் காட்டி நிற்கின்றது.

நடராஜ வடிவத்தின் அங்கச் சலனங்கள் ஒரே தன்மையாக இருந்தாலும் நாம் ஆனந்தத் தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், திரிபுர தாண்டவம் என்று குறிப்பிட்டு வகைப்படுத்து வதற்கான காரணம், அவ்வுருவம் காட்டி நிற்கும் ஆஹார்ய, சாத்விக பாவம்தான். அப்பாவம் முகத்தின் அசைவில் இருந்தும் கண் பார்வைக் கோட்டில் இருந்தும் தெரியவரும். குறிப்பிட்ட ஒரு பாவத்தை மெருகூட்டுவதற்காக நடராஜர் உருவத்தில் பயன்படுத்தப்படும் ஆஹார்ய அபிநயங்களும் மாறுபடும்.



இந்தச் சிற்பத்தைப் பார்க்கும்போது ஆங்கி, சாத்விக, ஆஹார்ய அபிநயங்களை நாம் காணும் அதேவேளை வாச்சிக அபிநயத்தை நாம் கேட்க முடியாது. இருந்தாலும் இத்தோற்றத்தை கண்ட இறையடியார்கள் இவ்வுருவத்தை உணர்ந்து பாடியிருக்கின்றனர். அவற்றை நாம் வாச்சிக அபிநயமாகக் கொள்ளமுடியும்.

நடராஜன் என்பது நடனக் கலையின் அரசன் என்ற நிலையில் வைத்து நோக்கும்போது, அபிநய தர்ப்பணம் என்னும் நூல் நடனத்திற்கான அபிநயக் கூறுகளை குறித்துக் காட்டுகின்றது. இதில் நாட்டியத்திற்கான தியான ஸ்லோகத்தினை பின்வருமாறு குறித்து நிற்கின்றது.



**'ஆங்கிகம் புவனம் யஸ்ய வாச்சிகம் சர்வா வான்மயம்**

**ஆஹார்யம் சந்த்ரதாராதி தம் நும சாத்விகம் சிவம்'**

இதன் கருத்து - உலகத்தை உடம்பாகவும் பேசும் பாசைகள் யாவற்றையும் ஒரே பாசையாகவும், சந்திர, நட்சத்திரங்களை ஆபரணங்களாகவும் அணிந்துள்ள சாந்த ரூபமான சிவனை வணங்குகி றேன் என்பது இந்த சுலோகத்தினுடைய பொருள். இந்த சுலோகத்தில் அபிநயங்களின் தன்மைகளை தன்னகத்தே கொண்டதாக சிவன் அமைகின்றார் என்பது தெரிய வருகின்றது. உடல் சார்ந்த ஆங்கிக அபிநயமும், இயல், இசை வார்த்தைகளின் வாசிக அபிநயமும், ஆடை ஆபரணங்களின் ஆஹார்ய அபிநயமும், முக பாவத்தின் சாத்விக அபிநயமும் இந்த சுலோகத்தில் கூறுப்பட்டுள்ளது. இந்த அபிநயங்களின் தன்மைகளைக் கொண்டு நடராஜருடைய திருவுருவம் அமைக்கப் பட்டுள்ளதுடன் இவை அனைத்தும் நடராஜருடைய திருவுருவத்தில் தத்துவ ரூபமாகக் காணக் கூடியதாகவும் உள்ளது.

நடராஜர் திருவுருவை பார்த்த நாயன்மார்கள் தமது கண்ணுக்கு அத்திருவுருவம் எவ்வாறு தோன்றியதோ அதை அவர்களது வாச்சிக அபிநயத் தின் மூலம் விளங்கப்படுத்த முற்பட்டுள்ளனர். அந்த வகையில் அப்பர் பெருமானார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



*குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்,*

*பனித்த சடையும், பவளம் போல் மேனியில் பால் வெண் நீறும்,*

*இனித்தம் உடைய எடுத்த பொன்பாதமும் காணப் பெற்றால்*

*மனி[த்]தப் பிறவியும் வேண்டுவதே, இந்த மா நிலத்தே!*

இந்தப்பாடலில் குனித்த புருவம், கொவ்வைச் செவ்வாய், குமிழ் சிரிப்பு, பனித்த சடை, பவளம் போல் மேனி, எடுத்த பொற்பாதம் என்பன அத் திருவுருவின் அங்க வகிபாகங்கள் ஆகும். அதில் பால் வெண்நீறு மட்டுமே ஆஹார்ய அபிநயத்துடன் தொடர்புபட்டதாக இருக்கின்றது. இப்பதிக வரிசையில் அமைந்த மற்றைய பாடல்களும் இத்திருவுருவம் பற்றிய தகவலை வேறு விதமாகத் தருகின்றது.

*முடி கொண்ட மத்தமும், முக்கண்ணின் நோக்கும், முறுவலிப்பும்,*

*துடி கொண்ட கையும், துதைந்த வெண் நீறும், சுரி குழலாள்*

*படி கொண்ட பாகமும், பாய் புலித்தோலும், என் பாவி நெஞ்சில்*

*குடி கொண்டவா, தில்லை அம்பலக் கூத்தன் குரைகழலே!*

முக்கண், முறுவல், துடி கொண்ட கை, சுரி குழல் போன்ற ஆங்கிக சலனங்களை காட்டுவதாக அப்பாடல் அமையப்பெற்று நர்த்தன நிகழ்த்துகை யை செய்கின்றான் தில்லை இறைவன் என்றவாறு அமையப்பெற்றுள்ளது இப்பாடல்.

*பொன் ஒத்த மேனி மேல் வெண் நீறு அணிந்து, புரிசடைகள்*

*மின் ஒத்து இலங்க, பலி தேர்ந்து, உழலும் விடங்க வேடச்-*

*சின்னத்தினால் மலி தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்*

*என் அத்தன் ஆடல் கண்டு இன்பு உற்றதால், இவ் இரு நிலமே.*

கொன்றை மலர், துதைந்த வெண்நீறு, புலித்தோல், உழலும் விடம் என்று ஆஹார்ய தன்மையைக் காட்டி நிற்பதையும், பொன் மேனி, புரி சடை என்பனவும் கொண்ட தன்மையாக அமையப் பெற்ற அபிநயத்தை சித்திரிக்கின்றது இப்பாடல்.

திருவாசகத்திற்கு இணையாகக் கருதப்படும் தில்லை நடராஜரின் மீது பாடப்பட்ட நடராஜ பத்து என்னும் பாடற் பகுதி சுமார் முந்நூறு வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த சிறுமணவூர் முனுசாமி என்பவரால் எழுதப்பட்டது. இப்பாடற் தொகுதி நடராஜரின் நாட்டிய நிகழ்ச்சியை மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறது. அப்பாடல் வருமாறு:-

*''மானாட மழுவாட மதியாட புனலாட மங்கை சிவகாமி யாட*

*மாலாட நூலாட மறையாட திறையாட மறைதந்த பிரமனாட*

*கோனாட வானுலகு கூட்டமெல்லாமாட குஞ்சர முகத்தனாட*

*குண்டல மிரண்டாட தண்டை புலி யுடையாட குழந்தை முருகேசனாட*

*ஞானசம்பந்தரோடு இந்திராதி பதினெட்டு முனி அட்ட பாலகருமாட*

*நரை தும்பை அருகாட நந்தி வாகனமாட நாட்டியப் பெண்களாட*

*வினையோட உனைப்பாட எனைநாடி இதுவேளை விரைந்தோடி ஆடி வருவாய்*

*ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!'*



இப்பாடல் அரங்க வெளியில் நடன நிகழ்த்துகை இடம்பெறும்போது எவ்வாறன சுழல் ஏற்படுமோ அதனை தெளிவாகக் காட்டி நிற்கின்றது. இப்பாடல் அபிநயத்தின் அனைத்துக் கூறுகளையும் கொண்டு அமையப்பெற்றுள்ளது.

இத்தோற்றத்தின் சிறப்பை பல்வேறு வகையாகக் கூற முற்பட்டதன் விளைவாக வாச்சிக அபிநயத்தின் வெளிப்பாட்டை நாம் உணரக்கூடியதாக இருக்கும், அதே சமயம் நடராஜர் வடிவத்தைச் செதுக்க முற்படுபவர்கள் அது என்ன மூர்த்தம்? என்பதைத் தெரிந்துகொண்டு முழுமைப்படுத்த முயற்சித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நாட்டியத்தில் ஒரு குறிப்பிட்ட அசைவு நிலை என்பது மிகவும் முக்கியமானது மட்டுமல்லாது அவ்வசைவுக்கான காரண காரியமும் கற்பிக்கப் பட வேண்டும். இத்திருநடனத்தின் நிலைக்கு பல்வேறு காரணங்களைச் சுட்டி ஐந்தொழில் தத்துவம் கூறப்பட்டு, இத்தோற்றத்திற்குப் பின்னணியாக தாருகாவனத்து முனிவர்களது கதை முன்வைக்கப்படுகின்றது.

இந்தத் தோற்றத்தை பல்வர்கள் முதன் முதலில் சிற்பமாக வடித்தனர். இதனுடைய தொடர்ச்சியாக தஞ்சைப் பெரிய கோவிலின் கோபுரம் என அழைக்கப்படும் தூபியின் முதலாம் தளத்தில் நடராஜர் வடிவம் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது.

பார்ப்பவர்கள் மனதில் ரசானுபாவம் தோன்றும் பொருட்டு அபிநயங்கள் எவ்வாறு இன்றி அமையாத சாதனங்களாக இருக்கின்றனவோ அவ்வாறே சிற்பத்திற்கும் ஓவியத்திற்கும் இன்றிய மையாதனவாக இருக்கின்றன. இந்தியச் சிற்ப, ஓவிய வடிவங்கள் அபிநயச் சிறப்பு பொருந்தவே அமைக்கப்படுகின்றன. ஓவிய, சிற்ப இலக்க ணத்தை அபிநய இலக்கணத்தை நன்கு அறிந்தவர் நன்கு அறிந்திருப்பார்.



நாட்டியக் கலையினிடமிருந்தே சிற்பக்கலை பல இயல்புகளையும் பெற்றிருக்கின்றது. சிற்பி சிற்பத்தை செதுக்கும் முன்னர் தான் என்ன வடிவத்தை செதுக்கப்போகிறேன் என்று முதலில் தனது மனக்கண்ணில் பதித்துக் கொள்ளவேண்டும். அம்மனக் கண்ணில் இருக்கும் உருவம் உளி வழியே உருவமாகக் காட்சி பெறுகின்றது. சிற்பி தனது வாழ்வில் கண்டு, கேட்டு அனுபவித்த விடயங்களை வைத்துக் கொண்டே தனது கலை வடிவத்தை உருவாக்குகின்றான். நாட்டிய உருவங் களை உணர்ந்ததன் காரணமாகவே சிற்பிகள் சிற்பங்களை செதுக்கும்போது உடலில் உள்ள வளைவு நெளிவுகளை தெரிந்து கொண்டு அவர்கள் அணிந்த ஆடை அணிகலன்கள் அனைத்தையும் தமது சிற்பங்களில் செதுக்கி உள்ளனர். கோயிலின் வாயிலில் காணப்படும் நங்கையர்களது உருவங்கள் இதற்கான சான்றுகளாகும்.

இறைச் சிற்பங்களைச் செதுக்கும்போது இறை வடிவங்கள் பற்றி புராண இதிகாச நூல்கள் எவ்வாறு வர்ணித்திருந்தனவோ அதனை நடன மாதர்களுடன் தொடர்புபடுத்தி முன்வைக்க முனைந்திருக்கின்ற னர் சிற்பிகள். அதன் விளைவாக நாம் இன்று காணும் அஜந்தா, சிற்றன்னவாசல், சீகிரி முதலிய இடங் களில் காணப்படும் ஓவியங்களும் தஞ்சைப் பெருங் கோவில், காஞ்சி கைலாச நாதர் கோவில், கங்கை கொண்ட சோழபுரம், சிதம்பர கோபுர வாயில்களில் காணப்படும் பரதநாட்டிய சிற்ப உருவங்களும் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டுக் களாகும். சிற்பப் பொருள்களில் அழகை அனு பவிக்க விரும்பும் ஒருவருக்கு நாட்டியக் கலையின் இலக்கணம் சிறிதளவாயினும் தெரிந்திருக்க வேண்டும். நாட்டிய சாஸ்திரம் கூறும் அபிநய அசைவுகளை சிற்பி உணர்ந்து கொண்டு செதுக்கி யிருப்பதை அச்சிற்பங்களைக் காணும் போது உணர முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்திருக்கும்

# அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருக்கோயில்

■

**இராசையா ஸ்ரீதரன்**

உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஆதிபராசக்தியான அம்பிகையானவள் தம்மை வழிபடும் அடியார்களின் அல்லல் போக்கி, அருள் புரியும் நோக்கில் யாழ்ப்பாணம் திருநெல் வேலியிலே அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாளாக எழுந்தருளி அருட்காட்சி தருகின்றாள்.

திருமகளாய், கலைமகளாய், மலை மகளாய் காட்சி தருகின்ற எம்பெருமாட்டி, அண்டமெல்லாம் பூத்தவள், பெருவலி வானவள், பேரறிவானவள், பெருநிதியான வள். பராசக்தியாக விளங்குகின்ற அம்பிகை யின் அருட்சக்தியை, மெய்ஞ்ஞானிகள், அரும்பெரும் பாசுரங்களாகப் பாடிப் பரவியுள்ளதை அறிவோம். சக்தியின்றிச் சிவமில்லை அல்லவா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமணித் திருநாட்டின் முடிபோல விளங்குகின்ற சிவபூமியாம் யாழ்ப் பாணத்திலே அறிஞர்கள், கலைஞர்கள் பலர் வாழ்ந்த இடம்தான் திரு நெல்வேலி. பைந்தமிழும் செந்நெறியும் நல்லொ ழுக்கமும் நற்பண்பும் வளர்ந்து நிறைந்து விளங்கும் இத்திருநெல்வேலியிலே சைவப் பாரம்பரிய ஆகம முறைப்படி அழகுற அமைந்திருக்கும் இத்திருக் கோவில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்கின்ற முப்பெருமையுடன் திகழ்கின்றது.

கண்டவுடன் கைதொழ வைக்கின்ற கம்பீரமான வானளாவிய உயர்ந்த இராஜகோபுரத்துடன் அழகா கக் காட்சிதரும் இக்கோயில் கர்ப்பக்கிரகம், மகாமண்டபம், வசந்தமண்டபம், வெளிமண்டபம் ஆகியவற்றோடு விநாயகர், துர்க்கை, நாகேஸ்வரி, வள்ளி தெய்வானை சமேத சுப்ரமண்யர், வைரவர், சந்தான கோபாலர், சனீஸ்வரர், காத்தவராயர், சண்டேஸ்வரர் முதலாய பரிவார மூர்த்திகளுடன் விளங்குவது சிறப்பம்சமாகும்.

மூலஸ்தானத்திலேயுள்ள முத்துமாரி அம்பாளின் பாதார விந்தங்களிலே ஸ்ரீ சக்கரம் என்ற மகிமை மிக்க யந்திரம் வைக்கப்பட்டிருப்பதாலே மாதந் தோறும் பூரணை நாளிலே விசேட அபிஷேக ஆராதனை பூசை வழிபாடுகளுடன் லலிதா சகஸ்ர நாம அச்சனையும் இடம்பெறுகிறது.

அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியான அம்பிகை முத்து மாரியின் அருட்பொலிவும் அற்புதச் சக்தியின் மகத்துவமும் இந்த ஆலயத்திலே பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருப்பதால் அடியார்கள் பலரும் நேர்த்திகள் வைத்து வழிபாடி யற்றுகின்றதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

பழைமை வாய்ந்த இத்திருக்கோயில் உருவாகிய காலம் முதலாக சைவக் குருக்கள்மாரே பொறுப்பாக இருந்து வந்துள்ளனர். அந்த வகையில் சிவாகம கிரியை பூஷணம் சிவசிறி க.சிவலோகநாதக் குருக்கள் மற்றும் பாலசுப்பிரமணியக் குருக்கள், கிருபாகரக் குருக்கள் ஆகியோரின் தன்னலமற்ற அருட்பணி குறிப்பிடத்தக்கது.

இந்த ஆலயமானது திருத்த வேலைகள் செய்யப் பட்டுத் திருத்தும் பணி நிறைவுற்றுக் கடந்த 1971 இல் மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது. பின்பு 1979 இல் சுப்பிரமணியருக்கும் எழுந்தருளி மூர்த்திகளுக்கும் மகாகும்பாபிஷேகம் நிகழ்த்தப் பட்டது.

அடியார்களுக்கு வரம் அருளும் பெருமாட்டியான ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் வருடாந்த மகோற்சவம் ஆனி மாத கார்த்திகை நட்சத்திர நாளிலே கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து பத்து தினங்கள் சிறப்பாக நடைபெறும். ஒவ்வொரு நாளும் அம்பிகையின் அலங்காரம் அடியார்களின் உள்ளத்தைத் தொடும் வண்ணம் மிகவும் அழகாக அமைந்திருக்கும். யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் அடியார்கள் கூட்டங்கூட்டமாக ஒருங்கே திரண்டு வந்து பத்து நாளும் திருவிழா பார்ப்பது சிறப்பு நிகழ்வாகும்.

அன்னைக்கு அன்னையாக விளங்குகின்ற ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் மகோற்சவத்தில் தேர்த்திரு விழாவும் தீர்த்தத்திருவிழாவும் மிகப் பிரமாண்ட மான அளவில் கோலாகலமாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. இந்த இரண்டு திருவிழாக்களில் தேர் ஆனிப்பூரத்திலும், தீர்த்தம் ஆனி உத்தரத்திலும் வருவதனால் அம்பாளின் அடியார்கள் பக்திபூர்வ மாகப் பங்கு பற்றி அருளுக்குப் பாத்திரமாவர்.

மேலும், இந்த திருநெல்வேலிப் பதியுறையும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் பரிபூரண கிருபாகடாட்சம் வேண்டி வழிபாடியற்றி வந்த உபாசகர் சிவகாம கிரியாபூஷணம் சிவஸ்ரீ க.சிவலோகநாதக் குருக்கள் அவர்களின் இடைவிடாத முயற்சியினால் இந்த ஆலயத்தில் பல திருப்பணி வேலைகள் அழகாகச் செய்யப்பட்டு முன்னர் இருந்ததிலும் பார்க்க மிக உயர்ந்த தரத்தில் கோயில் கட்டப்பட்டு இப்போது அருள் பொழிந்து நிற்கும் ஆலயமாக மிளிர்கின்றது.

மகோற்சவ காலத்தில் எம்பெருமாட்டி வீதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பதற்காக அழகாக அமைக்கப்பட்ட ஒரு சித்திரத் தேரும் இந்தத் தெய்வீக ஆலயத்தில் இருக்கின்றது. வாழ்த்த வாயும், நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவியாக விளங்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளுடைய திவ்விய திருவருட்டிறத்தினால் 2003 ஆம் ஆண்டு பங்குனி மாதத்திலே புதிய இராஜகோபுரம் கட்டி முடிக்கப் பெற்றுத் திருப்பணி நிறைவுக்கு வந்து மகாகும்பாபிஷேகமும் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாதே என்ற வாக்கிற்கிணங்க திருநெல்வேலியில் வாழும் அடியார்கள் பலரும் இந்த முத்துமாரி அம்பாள் மீது கொண்ட பக்தி மிகுதியினால் ஆர்வத்துடன் வந்து பாடிப்பரவிப் பணிந்து, சிந்தித்து, வந்தித்துச் சேவித்து நிற்கின்றனர்.

இந்த ஆலயத்தில் ஆண்டுதோறும் சித்திரைப் புத்தாண்டு மிக விமரிசையாக கொண்டாடப் படுகின்றது. இந்த ஆலய கும்பாபிஷேக தினமான சித்திரைப்பூர நன்னாளில் சங்காபிஷேகமும், பூந்தண்டிகை உற்சவமும் மிகக் கோலாகலமாக நடைபெறும். சித்திரா பௌர்ணமி நன்னாளிலே சுமங்கலி தீப பூசையுடன் விசேட பூசை வழிபாடுகள் மிகக் சிறந்தமுறையிலே நிகழ்வதால் அடியார்கள் பெரும் எண்ணிக்கையில் வந்து கலந்து கொள்வார்கள்.

அதனைத் தொடர்ந்து இங்கு நடக்கும் வைகாசி விசாகப்பொங்கல், தீ மிதிப்பு என்பனவும் முக்கிய விழாக்களாகும். அத்துடன் ஆடிப்பூர உற்சவமும் ஆடிச் செவ்வாய் ஆடிவெள்ளி உற்சவங்களும் சிறப்புமிக்க நல்ல நிகழ்வுகளாகும்.

மேலும் ஆவணி மாதத்திலே வருகின்ற விநாயக சதுர்த்தி, புரட்டாதி மாத நவராத்திரி, மகிஷாசுர




சங்காரம், விஜயதசமி, மானம் பூ உற்சவம் என்பனவும் அடியார்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் உற்சவங்களாகும்.

ஐப்பசி மாத கேதார கௌரி விரதம், கார்த்திகை மாத விளக்கீடு, மார்கழி திரும்வெம்பாவை, வைகுண்ட ஏகாதசி ஆகிய உற்சவங்களும் இந்த ஆலயத்தில் பக்திபூர்வமாக நடைபெற்று வருகின்றன. ஆதிபரா சத்தியான அம்பிகை ஸ்ரீ முத்துமாரி அம்பாளுடைய அனைத்துத் திருவிழாக்களும் இந்த ஆலயத்தில் களை கட்டும் நிகழ்வுகளாக இடம் பெறுவது அடியார்கள் செய்த பூர்வ புண்ணியப் பலனாகும்.

தைப்பொங்கல் விழாவும் மாசி மக இலட்சார்ச்சனையும் பங்குனித் திங்கள் உற்சவமும் மிக விசேடமாக நடைபெறுவதால் இந்த ஆலயத்தில் அடியார்கள் முண்டியடித்துக் கொண்டு பக்தியோடு முன்னேறுவது கண் கொள்ளாக் காட்சியாகும்.

அருளும் அற்புதமும் நிறைந்த யாழ்ப்பாணத் திருநெல்வேலி முத்துமாரியைச் வந்தித்துச் சேவித்து அன்னையின் அருட் கடாட்சத்தைப் பெறுவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எம் பாரம்பரியச் சிறப்புகளையிட்டு இளையோர் கவனம் செலுத்துவோம்'

இவ்வாண்டின் தை மாதக் 'கலைக்கேசரி' இதழைச் சுவைக்கக் கிடைத்தமை பெரும்பாக்கியம் என கருதுகிறேன். 'நான் ஒரு தமிழன் எனக் கூறிக்கொள்வதில் எத்தனை பெருமை உள்ளது' என்பதை உணர்வு பூர்வமாக ஏற்றுக்கொள்வதில் உள்ள உண்மை இச்சஞ்சிகையைப் படித்ததில் இருந்து மேலும் பல மடங்கு அதிகரித்துள்ளது.

நுழைவாயிலில் வைத்தியர் சதீஸ்குமார் அவர்களின் 'சம்பூர் கிராம தேவதைச் சடங்கு' எம்மையெல்லாம் பொட்டுவைத்து வரவேற்கின்றது. நானும் திருகோணமலையின் பன்நெடுங்கால வாசி என்ற வகையில் பெருமையாக உள்ளது. இக் கட்டுரை எனக்கு பல விடயங்களையும், நிகழ்வுகளையும் மீள் நினைவுக்குட்படுத்தத் தூண்டியது.

காவல் தெய்வங்களுக்கான சடங்குகள் நம்பிக்கைகளைத் தாண்டி, தமிழர்களின் பாரம்பரிய பண்பாட்டுக் கோலங்கள் என்பதில் அதீத ஈடுபாடு எனக்கு உண்டு. இவையாவும் தற்போது அருகிவரும் நிலையில் சம்பூர் பகுதியில் இன்றுவரை தொடரப்பட்டு வருகின்றது என்பது தமிழரின் வரலாற்றை அழிக்க முற்படுபவர்களுக்கான எதிர்வுகூறல் என்றே கூறவேண்டும்.

கந்தளாய் குளக்கட்டு ஆலயத்தை வந்தடையும் வழியில் உள்ள அனைத்து கிராமங்களும் விழாக் கோலம் பூண்டு ஊர்வலத்தில் வரும் மக்களை வரவேற்று அனுப்புவார்கள். தம்பலகாமம் கோணேசர் ஆலயத்தில் தங்கி ஊர்வலம் செல்லும் அந்தப் பாரம்பரிய தமிழர் பண்பாட்டுக்கோலங்கள் தற்போது அழிந்துவிட்டன.

இது எம்மவரின் அலட்சியப் போக்கா? நவீன வாழ்வியலின் தாக்கமா? என்பதைச் சிந்திக்க வேண்டும். புராதனப் பண்பாடுகளை தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் முதியவர்களிடம் இளையோர் அறிந்து, அவற்றை மீண்டும் புதுப்பிக்க வேண்டும்.


மல்லிகைத் தீவிலே பாரம்பரியமாக நடைபெற்று வந்த கொம்பு விளையாட்டு என்னும் தமிழ் உழவர் சடங்கு ஏறத்தாழ 40 வருடங்களுக்குமுன் நடை பெற்றதாக நினைவிருக்கிறது. இதுபோன்ற சடங்குகள் ஒவ்வொரு கிராமங்களிலும் மீளக் கொண்டு வரப்பட வேண்டும். இவைதான்தமிழர் வந்தேறு குடிகள் அல்ல என்பதற்கும், தமிழர்தான் முதல் குடியானவர்கள் என்பதற்கும் ஆதாரங்கள் ஆகும்.

இதற்கு இளையோர் கூட்டம் தலைமை தாங்க வேண்டும். அதுவே சாத்தியப்படும். பழைமையை ஆதாரபூர்வமாக அறிந்து வைத்திருக்க வேண்டும். வேறுவேறு விடயங்களில் கவனம் செலுத்தும் இளையோர் எமது பாரம்பரிய தொன்மைகளை அடுத்த சந்ததியினருக்கு அறிவு பூர்வமாகக் கடத்துவதற்கு முக்கியமாக இதில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

ஆகவே, வைத்தியர் சதீஸ்குமார் அவர்களின் காத்திரமான அந்தக் கட்டுரை, சகலரையும் விழிக்கவைக்கும் எனலாம். அத்தோடு நாகர்கால அணைக்கட்டுபற்றி திரு. அருணா செல்லத்துரையின் கட்டுரை, தமிழ் பௌத்தம் பற்றி திருமதி. சாந்தினியின் கட்டுரை, சீனாவின் சிவன் ஆலயம் பற்றி திரு. திருத்தணிகாசலம் தந்த கட்டுரை போன்ற அனைத்துமே தமிழரை நிமிர்ந்து நிற்க வைக்கிறது. இவை அனைத்திற்கும் களம் அமைத்த கலைக்கேசரியை நன்றியுடன் நெஞ்சார வாழ்த்தி பாராட்டுகிறேன். தமிழ் உணர்வாளர்கள் ஒவ்வொரு வருக்கும் இந்த நூல் மிகப்பெரிய ஆதார விருந்தாகும்.

**கனகசபை தேவகடாட்சம்**
**திருகோணமலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீவகப் பற்றில் சைவமும் பௌத்தமும் – 5

■

பேராசிரியர் (ஓய்வுநிலை)
கனகசபாபதி நாகேஸ்வரன் M.A.Ph.D





ஐந்தாம் நூற்றாண்டிலேயே விஜயன் இலங்கைக்கு வந்தான். அதற்கு 1400 வருடங்களுக்கு முன்பிருந்தே (கி.மு.3283 - கி.மு.4ஆம் நூற்றாண்டு) ஈழத்தில் நாகர்கள் வாழ்ந்துள்ளனர். மகாபாரதமும், இராமாய ணமும் கதைகளாகக் கொள்ளப்பட்ட போதும் நாகர்கள் என்ற இனத்தவர் இந்தியாவின் தென்கரையில் வாழ்ந்தனர் என்பதற்கு இவை ஆதாரங்களாகின்றன. மகாபாரத காலம் கி.மு 2000 எனக் கொள்ளப்படுகின்றது. "ஈழத்து மணிபுரம்" என்ற நாகர்களின் பிரதேசமும் இந்தியாவின் ஒரு பகுதியாகவே இருந்திருக்க வேண்டும்.

மகாவம்சத்துப் பிக்குகள் தமது வம்சத்தவ ருக்கு ஒரு சிங்கத்தை தந்தையாக்கும் நம்பக மற்ற ஒரு கதையையே உருவாக்கினர். நாகர்கள் சிங்கத்தை இலச்சினையாகக் கொண்டிருந்த காலத்தில் விஜயன் என்ற கதாநாயகனுக்கு வரலாறே இருக்க வில்லை. நாகர்களின் சின்னமான சிங்கமே வடக்கிலும் பின்னர் அநுராதபுரத்திலும் இருந்த அரசர் களின் சின்னமாக தொடர்ந்தது, இன்றும் தொடர்கிறது என்பது உண்மை.

'மாலோனி' என்ற சரித்திர ஆசிரியர் பிராமி எழுத்துக்களைப்பற்றி மேற்கொண்ட ஆராய்ச்சியின் முடிவாக "இலங்கையில் இருந்து தென்னிந்தியாவுக்குப் பிராமி எழுத்து க்கள் பரவியுள்ளன. முதலில் திருநெல்வேலி, மதுரை மாவட்டங்களுக்கு இவை பரவின. அங்குள்ள சாசனங்களில் பொறிக்கப்பட்டுள்ள பிராமி எழுத்துக்கள் காவேரி, கோயம்புத்தூர் பகுதிகளில் உள்ள எழுத்துக்களை விடப் பழமையானவை"[6] என்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நாகர்களிடமிருந்து பரவிய இந்த எழுத்துக்கள் சமஸ்கிருத மொழியின் எழுத்து வடிவத்தைப் பாதித்ததாலேயே இன்றுவரை சமஸ்கிருத எழுத்துக் கள் 'தேவநாகரி' எனப் பெயர் பெற்றுள்ளன.

"தென்னிந்திய அரசுகளில் திராவிடச் செல்வாக்கு மிகுந்திருந்த காலத்தில் இருந்தே இலங்கையின் வரலாற்றிலும் திராவிடர் செல்வாக்கு இருந்தி ருக்கிறது. இன்றுள்ள சிங்கள இனத்தின் உருவாக்கத்துக்கு காரணமாகி இருந்த இனத்தவருட் திராவிடரும் அடங்குவர். அவர்கள் இத்தீவுக்கு எப்போது வந்தார்கள் என்பது தெளிவாக இல்லை, சந்தேகத்திற்கிடமின்றி மிகப்பழைய காலம் தொட்டே இவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பது மட்டும் தெளிவு"[7]

### 1.29 இயக்கர் வரலாறு:

வான்மீகி இராமாயணம்- இராமகதையின் காலம் கௌதம புத்தருக்கு 1844 வருடங்களுக்கு முந்தியது எனக் கணிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசனான இராவணன், இயக்கர் குலத்தவன். சிங்களவரின் முன்னோரான விஜயன் இயக்க வம்சத்து இளவரசியான குவேனியை முதலில் மணந்தான். இயக்கர்களது அரசை தந்திரமாகக் கவரவிரும்பிய விஜயன், குவேனியை வைத்து, களனிதேசத்து அரச னைக் கொன்று அந்த அரசை அபகரித்தான். குவேனி இயக்கர் குலத்துக்கு துரோகம் இழைத்த தால் குவேனியின் உறவினர்கள் அவளை அடித்தனர். அவள் இறந்து விடவே விஜயனுக்கும் குவேனிக்கும் பிறந்த இரு பிள்ளைகள் தமக்கும் ஆபத்து நேரும் என அஞ்சி மலைப்பகுதியிலுள்ள காட்டுக்குள் ஓடித்தப்பி விட்டனர். இயக்கர்கள் ஆட்சியும் முடிவுற்றது. இராம, இராவண யுத்தத் தின் பின்னர் எஞ்சியிருந்த இயக்கர் சிலர் நாக இனத்துடன் இணைந்து கொண்டனர்.

'யாழ்ப்பாண அரசு' பற்றி எழுதிய பவிலோன் (Pavileon), "வன்னி உட்பட கிழக்கில் திருகோண மலை முதல் மேற்கில் கற்பிட்டி வரையும், யாழ்ப்பாணத்தைச் சுற்றியுள்ள தீவுகள் முதலான எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒரு அரசு யாழ்ப்பாண அரசு"[8] எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆதியில் யாழ்.குடாவின் வடமேற்கிலமைந்த நயினாதீவு இந்திரனமைத்த சக்தி பீடத்தினை யுடையதாயும், புத்தரின் வருகையுடன் தொடர்பு டையதாயும், மணிமேகலைக் காப்பியம் குறிப்பிடும் இடமாயும் மணிபல்லவம், மணித்தீவு, சம்புத்தீவு, எழுவத்தீவு, நாகதீவு என்பன போன்ற பல பெயர்களால் புகழ் பெற்றிருந்தது என்பதும், பின்னர் புத்தர் இரண்டாவது முறை நாகதீவுக்கு வந்தபோது நாகதீவில் மகோதரநாகனின் ஆட்சி நிலவியது என்பதும், இத்தீவிலே மகோதரனுக்கும், குலோதரநாகனுக்குமிடையிலிருந்த சர்ச்சையை தீர்த்து பௌத்ததர்ம நெறிகளைப் போதித்ததோடு, இரத்தினாசனத்தையும், இராஜாயதன மதத் தினையும் வழிபடுமாறு பணித்துச் சென்றனர் என்பதும் தெளிவாகின்றன. நாகர்கள் இவ்விதம் பௌத்தத்தை தழுவவே காலப்போக்கில் அதன் தாக்கம் யாழ்.குடா முழுவதும் ஏற்படலாயிற்று. இக்காலகட்டத்தில்தான் ஜம்புக்கோளத் துறையை அ3ண்டி வாழ்ந்த பழந்தமிழ் மக்களும் பௌத்தத்தின் செல்வாக்கிற்குட்படுகின்ற நிலை ஏற்படுகிறது. இந்நிலையில்தான் யாழ்.குடா நாவலந்தீவு அல்லது ஜம்புகோளப்பட்டினம் அல்லது நாகதீபம் என்ற பெயர்களாற் புகழும் சி றப்பும் பெறுகிறது. இந்தப் பின்னணியில் நாகர் கலாசாரமும், தமிழ் கலாசாரமும் ஒன்றோடொன்று கலந்து விடுகின்ற நிலையையும் அவதானிக்கலாம். காழ்ப்பின்றிப் பழந்தமிழர்கள் பௌத்தத்தைத் தழுவுகின்ற நிலை ஏற்படுகிறது.

அரசியற் சூழல் தமக்குச் சாதகமாக இருந்த ஓரிரு கட்டங்களில் நாகதீபத்திற் சிங்களக் குடிகள் வாழ்ந்துதான் இருக்கின்றார்கள் என்பதற்கு யாழ்ப்பாண வைபவமாலை தரும் தகவல்கள் ஆதாரமாகின்றன. அதன்படி விக்கிரமசிங்கையின் (கி.பி 1330) காலத்திலும், சங்கிலியன் (கி.பி 1550-1564) காலத்திலும் தமிழ் - சிங்கள இனக் குழப்பங்கள் யாழ்.குடாவில் ஏற்பட்டதாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையிலும் தமிழகத்திலும் பௌத்தமத வளர்ச்சிக்குத் தமிழ் பௌத்தர்கள் ஆற்றிய பணியே இன்று இலங்கையிற் பௌத்தம் சிறப்புடன் வாழ வழி வகுத்தது எனில் மிகையாகாது.

இம்மன்னர்கள் இக்குடியேற்றங்களை அப்புறப் படுத்தி இனக் குழப்பங்களைத் தவிர்த்ததாகவும் தெரிகிறது.

சுருங்கக் கூறின் இலங்கையிலும், தமிழகத்திலும் பௌத்தமத வளர்ச்சிக்குத் தமிழ் பௌத்தர்கள் ஆற்றிய பணியே இன்று இலங்கையிற் பௌத்தம் சிறப்புடன் வாழ வழி வகுத்தது எனில் மிகையாகாது. மணிமேகலை குறிப்பிடுகின்ற மணிபல்லவமும், மகாவம்சம் குறிப்பிடுகின்ற நாகதீபமும் இன்றைய நயினாதீவு என அடையாளம் காணப்பட்டுள்ளது. கௌதம புத்தரின் வருகையினாற் புனிதமடைந்த நாகநாட்டின் ஒரு பகுதியான நயினாதீவினையே, தமிழ் பௌத்தத்துறவியாகிய மணிமேகலை, மணிமேகலா தேவதையின் துணையுடன் தரிசித்தாள் எனத்தெரிகிறது. எனவே இவ்விரு நூல்கள் தரும் வரலாற்றுக் குறிப்புகளிலிருந்து கௌதம புத்தரே இலங்கையிற் தனது மதத்தைப் பரப்பினார் என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது.[9]

### பௌத்த சமயத்திற்கும் சைவசமயத்திற்கும் இடையிலுள்ள பரஸ்பரத் தொடர்புகள் மேலும் விருத்தி பெறுவதற்கு வணிக துணைத் தலைவரின் நடவடிக்கைகள்; சாசனச் சான்றாதாரங்கள்:

“சுந்தரமூர்த்திநாயனாரின்திருவாரூர்ப்பதிகத்திலே ‘செட்டியப்பன்’ என்னும் அடைமொழி சிவபெருமானுக்குரியதாக வருகிறது.[10] ‘செட்டி’ என்னுஞ் சொல் முருகனைக் குறிக்கும் என்று அகராதிகள் கூறும். எனவே குமரக்கடவுளையே ‘லோகப் பெருஞ்செட்டியார்’ எனச் சாசனத்திலே வர்ணித்தனர் என்று கருதமுடிகிறது.”

பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் கூறுவதாவது, “இலங்கை பௌத்த சமய மரபின் வரலாற்றைப் பொறுத்தவரையில் இது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாகும். 14 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட வேறு ஆவணங்களில் பௌத்த பெரும் பள்ளிகளிலே குமரக்கடவுளின் கோட்டம் அமைந்திருந்தமைக்கான சான்று எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. 12 ஆம் நூற்றாண்டிலே இந்த மரபு தோன்றிவிட்டது என்பதை இப்பொழுது வணிகரின் சாசனத்தினால் அறிய முடிகிறது. முன்னொரு பொழுதும் காணப்படாத வழமையொன்று இவற்றிலே குறிக்கப்படுகிறது. பௌத்த பள்ளியிலுள்ள குமரக்கோட்டம் பற்றிய காலத்தில் மிகமுற்பட்ட குறிப்பு ஐந்நூற்றுவரின் சாசனத்திற் காணப்படுவதால் வணிக நகரங்களில் அமைந்த பௌத்த பள்ளிகளிலே முதன்முதலாகக் குமரக் கடவுளின் படிமங்களை வழிபாடு செய்வதற்கென தாபனஞ் செய்தனர் என்று கருதலாம். காலப் போக்கில் இந்த மரபு பௌத்த சமயத்திலே பொது வழமையாகி விட்டதென்று கொள்வதற்கு இடமுண்டு. எனவே, பௌத்த சமயத்திற்கும் சைவ சமயத்திற்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்புகள் மேலும் விருத்திபெறுவதற்கு வணிக துணைத் தலைவரின் நடவடிக்கைகள் ஏதுவாயின எனக் கொள்ளலாம்.[11]

கி.பி.800- 1200 ஆகிய காலப்பகுதியில் இலங்கையின் சில பகுதிகளில் பத்தினியைத் தெய்வமாகப் போற்றும் வழக்கம் நிலவியதாகத் தெரிகிறது. பிற்காலங்களில் பத்தினி வழிபாடு இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் பரவியிருந்தது. தமிழரும் சிங்களவரும் பத்தினியைத் தெய்வமாகப் போற்றி வழிபடலாயினர். சைவர் செறிந்து வாழும் இடங்களிலே பத்தினிக்கு கோயில்கள் அமைக்கப் பட்டிருந்தன. 14 ஆம் நூற்றாண்டு முதலாக பௌத்த மரபிலே பத்தினிக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டிருந்தது. காலப்போக்கிலே இலங்கையின் காவற் தெய்வங்கள் நான்கினுள் ஒன்றாகப் பத்தினியைப் போற்றிப் பரவினார்கள். இவ்வளர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கள் எவ்வாறு ஏற்பட்டன என்பது பற்றி எவரும் தெளிவாகச் சிந்திப்பதாகத் தெரியவில்லை என்கிறார் முதுபெரும் பேரறிஞரும் வரலாற்றுத் துறைப் பேராசிரியருமான கலாநிதி சி. பத்மநாதன்.

அவர் மேலும் விபரிப்பதாவது, "மணிமேகலை மூலமாகப் பத்தினித் தெய்வம் தமிழகத்திலே பௌத்தர்களால் போற்றி வழிபடப்பட்ட தெய்வம் என்பது தெளிவாகிறது. இதனால் அநுராதபுரத்திலும் பிற தானங்களிலுமுள்ள பௌத்த பெரும்பள்ளிகள் காவிரிப்பூம்பட்டினம், காஞ்சிபுரம், வஞ்சிமாநகரம் போன்றவற்றிலுள்ள சமய நிறுவனங்களோடு கொண்டிருந்த தொடர்புகளின் மூலமாகவே இலங்கையிற் பத்தினி வழிபாடு பரவியதென்று கருத வேண்டியுள்ளது. அத்தகைய தொடர்புகளின் காரணமாகவே அபயகிரிமஹா விகாரை, ஜேதவன ராமம் ஆகியவற்றில் மகாயான செல்வாக்கு ஏற்பட்டதென்று மகாவம்சம் கூறும்.

அவ்வண்ணமாகவே பத்தினி வழிபாடு இலங்கையிற் பரவியிருத்தல் வேண்டும். பௌத்த சமயத் தொடர்பின் காரணமாகப் பத்தினி வழிபாடு இலங்கையிலே சிங்களவரிடையிலும் தமிழரிடையிலும் பெருஞ் செல்வாக்கினைப் பெற்றதெனக் கருதமுடிகிறது. 13 ஆம் நூற்றாண்டுக்கு முன்பு இலங்கையின் வட பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் வாழ்ந்த தமிழரிற் கணிசமான தொகையினர் பௌத்தராயிருந்தாரென்பது அங்குள்ள சில சபைகளினாலும் பிற தொல்பொருட் சின்னங்களினாலும் அறியப்படும். அதற்குப் பிந்திய காலத்தில் சைவ சமயத்துள் மேலோங்கிய செல்வாக்கின் காரணமாக அவர்கள் சைவராயினர். ஆயினும் பத்தினி வழிபாடு பொதுமக்களின் வாழ்க்கையோடு உணர்ச்சிபூர்வமான தொடர்பினைக் கொண்டிருந்தமையால் அது நிலைபெறலாயிற்று. சைவ சமயத்திற்கும் பத்தினி வழிபாட்டுக்கும் இடையிலே பொது வழக்கில் முரண்பாடுகள் தென்படவில்லை. பிரதான சிவாலயங்களில் ஒன்றான தம்பலகாமம் ஆதிகோணநாதர் கோயிலிற் பத்தினிக்கு விழா எடுக்கும் வழக்கம் உண்டு. ஆலயம் 17 ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பெற்றது. அதற்கு முன் இத்தகைய மரபொன்று நிலவியமைக்கான சான்றில்லை"[12]



பத்தினியைப் பற்றி கலாயோகி ஆனந்த குமாரசுவாமி மேல் வருமாறு கூறுவர்.

She was subsequently canonized and is regarded as a manifestation of Sakthi, her special attributes are jewelled anklets and the amango she is a goddess of charity and controller of diseases, such as small pox measles and cattle murrain.

ஆனந்த குமாரசுவாமியின் கருத்தை மறுத்துரைக்கும் பேராசிரியர் கலாநிதி சி.பத்மநாதன்,

"பத்தினியைச் சக்தியின் வடிவமாகக் கொண்டனர் என்று ஆனந்த குமாரசுவாமி சொல்வது பொருத்தமானதன்று. பத்தினியை சக்திகளுள் ஒன்றாகக் கொள்ளும் மரபு பௌத்த சமயத்திலோ, இந்து சமயத்திலோ இருப்பதற்கு எதுவித ஆதாரமும் கிடையாது. அது மட்டுமன்றி சைவ சமயத்தில் ஓரம்சமாக பத்தினி வழிபாட்டை ஒப்புக்கொள்வதில்லை. சைவாலயங்களிலும் பத்தினிக்குத் தனிக் கோட்டம் அமைக்கும் வழக்கமில்லை"[13]

"தீவகப்பகுதியில் நீடித்து நிலைக்கும் சைவப் பண்பாடே இன்று யாழ்ப்பாணப் பண்பாடாகி உலகளாவிய நிலையில் சைவத்தமிழ்ப் பண்பாடாக மாறியுள்ளது." பேராசான் பேராசிரியர் கலாநிதி சி.பத்மநாதன் அவர்கள் வலியுறுத்துவது, தீவகச் சமய பண்பாட்டுத் தொடர்பில் மிகமிகப் பொருத்தமுடையதாகும். பழம் பெருஞ் சைவப் பண்பாடு செழித்தோங்கி வாழும் இடமும் தீவகப்பற்றே யாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்துப் பண்பாட்டில் தேர்

## கலை வரலாற்று நிலை நிற்கும் ஓர் ஆய்வு

■

வேலுப்பிள்ளை அம்பிகைபாகன்

'தேர்' என்ற சொல் பற்றியும் அதன் வடிவங்கள் பற்றியும் இந்து சமய, கலை மரபில் அதன் முக்கியத்துவம் பற்றியும் விரிவாக ஆராய்தல் அவசியமாகின்றது. 'தேர்' எனும் தமிழ்ச் சொல், வினையாகிய இரு வடிவங்களிலும் தமிழ்மொழியில் வழங்குவதாகவும், 'தேர்' என்பதற்குரிய ஒத்தபொருட் சொற்களாக அரி, இயந்திரம், எந்திரம், இரதம், கவரி, குயவு, கூவிரம், கொடிஞ்சி, சயநடதன், திகிரி, யந்திரம், விமானம், வையம் என்பவை அமைகின்றன. அதே வேளையில் "தேர்" என்ற சொல்லுக்குப் பதிலாக நடைமுறை வழக்கிலமையும் 'இரதம்' என்ற சொல்லின் ஒத்த பொருட் சொற்களாக அரைஞாண், அவயவம், இரசம், இனிமை, உடல், குணம், உமிழ்நீர், சாத்தியம், சுவைசூதம், தேர் பண்டி, பல், பாதம், மாமரம், வாகனம், சாறு, வண்டு, பாதரசம், இரசலிங்கம், பாவனன் என்பவை அமைகின்றன.

தேர், இரதம் என்பவை பற்றிய கருத்து முரண்பாடு ஒன்று தற்கால மரபிலே தோற்றம் பெற்றுள்ளமையை அவதானிக்கலாம். தேரும் இரதமும் ஒரே வடிவாயினும் அமைப்பு முறையில் மாறுபட்டன அல்லது சிறிது மாறுபட்டன என்ற கருத்துமுளது. மேல்விதானம், இயற்கையாக அமையும் ஊர்தியை "தேர் என்று சொல்வது மரபு" என்றும் "அது நிரந்தரமாக அமையும் ஊர்தியை இரதம் என்று சொல்வதும் மரபில் வந்துவிட்டது" என்றும் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் இம்மரபினை எடுத்துரைப்பார்.

'தேர்' என்பது தமிழ்ச் சொல் என்றும் 'இரதம்' என்பது வடமொழிச்சொல் என்றும் கவனத்திற் கொண்டு நோக்கும் போது ஒரே ஊர்தியைக் குறிக்கும் இரு மொழிச் சொற்களாகவே அவை அமைந்திருப்பதை அவதானிக்கலாம். யாழ்ப்பாணத்திலே 'தேர்' எனும் சொல்லாட்சியே பொதுவாக நடைமுறையிலுள்ளது. தமிழகத்திலே மேல் விதானம் இயற்கையாக உள்ள தேர்களே பெருமளவிற் காணப்படுகின்ற போதிலும் 'இரதம்' என்ற சொல்லாட்சியே அங்கு இடம்பெறுவது என்பதை நாம் அவதானிக்கலாம். 'மேல் விதானம் நிரந்தரமாக அமைக்கப்படுவது இரதம்' என்னும் மரபிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரமேதும் இருப்பதாகத் தெரிய வரவில்லை. இம் மரபுக் கொள்கையின் அடிப்படையில் 'தேர்' என்று வழங்கப்படவேண்டிய மாவிட்டபுரம் கந்தசாமி தேர் மகோத்திர மஹாரதம் என்று வழங்கப்படுவதை உற்றுநோக்கும்போது 'தேர்', 'இரதம்' என்னுமிரு சொற்களும் ஒரே ஊர்தி வடிவினைக் குறிக்கும் இரு மொழிச் சொற்களே என்னும் அடிப்படை உண்மையை அறியமுடியும். ஆகவே "இரதம் என்னும் முதன்மைப் பொருளிலே தேர் என்னும் சொல்" அமைகின்றது என்று கொள்வது பொருத்தமாகின்றது.

'தேர்' என்னும் 'இரத'த்தின் சிறப்பினை ஆராய்கையிலே 'இரதம்' என்னும் சொல்லின் சிறப்பு, இந்து மரபில் எத்தகைய முக்கியத்து வமுடையது என்பது தெளிவாகும். 'இரதம்' போன்ற பொலிவும் விரைந்த செயலும் எல்லா வற்றையும் குறித்து நிற்பது தெரியவரும். வானிலே பறக்கும் தேர்களை விமானம் என்று கூறுதல் மரபு. ஆயினும் அதனை 'வானரதம்' என்று கொள்வதும் கூட, அதன் சிறப்பினையே எடுத்துரைக்கும். கற்பனையாற்றலை அல்லது அதன் வேகத்தை 'மனோரதம்' என்றும் அறிவாற்றலை 'ஞானரதம்' என்றும் வாதத்தில் அல்லது தர்க்கத்திற் சிறந்த சைவ சித்தாந்த தத்துவத்தை 'வாதரதம்' என்றும் 'இரதம்' சித்திரக் கவி மரபிலும் 'இரதபந்தம்' என் றும் இடம்பெறுவதாகும். சிறு பிரபந்த இலக்கி யங்களில் ஒன்றாகிய பிள்ளைத்தமிழில், ஆண் களுக்குரிய இலக்கணத்தில் 'சிறுதேருருட்டல்' என்று பத்தாவது பருவமாகவும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய சிறப்புப் பெற்ற இரதமே இந்துசமய பெருங்கடவுளாகிய சிவபெருமான் திரிபுர தகனம் செய்வதற்காக ஊர்ந்து சென்ற ஊர்தி எனும் இந்து பௌராணிக மரபில் உயர்வு பெறுவதாகும். விஷ்ணுவைத் தாங்கித் திரியும் வாகனமாகிய கருடன் 'விஷ்ணுரதம்' என்று சிறப்பிக்கப்படுவதும் கூட, இரதத்தின் சிறப்பு நோக்கியே எனலாம்.

தேர் அல்லது இரதம், சிறந்த ஊர்தியாக மாத்திரமல்லாது சிறந்த படைப்பிரிவாகவும் படைக் கலமாகவும் அமைந்ததாகும். இரதம் செலுத்துவதில் சிறப்புப் பெற்றவர்களை 'அதிரதன்' என்றும் 'மகாரதன்' என்றும் மகாபாரதம் உட்பட பல காவிய இதிகாசங்கள் கூறும். பத்துத் திசைகளிலும் இரதம் செலுத்தும் ஆற்றல் பெற்றமையால் அயோத்திய மன்னன் அஜகுமாரன், 'தசரதன்' என்று பெயர் பெற்றமையை இராமாயணம் கூறுவது குறிப்பிடத் தக்கது.

போக்குவரத்து, ஊர்தி ஆகியவற்றின் அடிப்படை யில் யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை எனும் நால்வகைப் படைப்பிரிவுகளில் இரண்டாவதாக இடம்பெற்ற தேர், ஆயுதங்களின் அடிப்படையை ஓரளவில் கருத்திற் கொண்டே வேல், வாள், வில், தேர், குதிரை, யானை எனும் அறுவகைப் பிரிவுகளிலும் இடம்பெறுவது குறிப் பிடத்தக்கது. இவ்வகையில் தேர், ஓர் 'ஆயுதமே' எனும் கொள்கையும் கவனத்திற்குரியதாகும்.

தேரை மையமாக வைத்து நடைபெறும் போர்க்கள நிகழ்ச்சிகளைப் பாடுவதற்காகப் பல திணை துறைகளைப் புறப்பொருள் வெண்பாமாலை நிரல் படக்கூறியுள்ளது. இவ்வகையில் யுத்த முறையிலும் தேர் பெறும் இடம், சிறப்பானதேயெனலாம்.

## தேர் வடிவத்தின் தோற்றமும் வளர்ச்சியும் வரலாற்றுப் பின்னணி

### 01. சிந்துவெளி நாகரிக காலம்

இந்திய வரலாற்றினதும் நாகரிகத்தினதும் தொட்டில் என்று கூறப்படும் தொன்மைமிக்க சிந்து வெளி நாகரிக காலத்திலேயே 'தேர்' என்ற ஊர்தி இந்தியாவில் அறிமுகமாகியிருந்தது என்ற கருத்து வரலாற்று ஆய்வாளர்களின் ஆராய்ச்சி உரைகளில் இருந்து தெரிவதாகும். அக்கால நகரங்களில் புகழ் பெற்றதாகிய 'ஹரப்பா'விற் கிடைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலச்சினைகள் சிலவற்றில் தேர் வடிவங்கள் அல்லது தேரையொத்த வடிவங்கள் காணப்படுவ தாக மேலைத்தேய ஆய்வாளரான வண.ஹெரஸ் கருதுகின்றமை இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

சிந்துவெளி காலத்தில் இந்தியாவிற்கு வருகை தந்த புதிய இனத்தவராகிய ஆரியர்கள் "தேரூரும் மக்களாகவே" ஆய்வாளரால் இனங்காணப் படுவதும் இக்காலத்தில் தேரூர்தி அறிமுகமாகி யிருந்ததை உறுதிப்படுத்தும். அவர்கள் இந்தியா விற்கு வருகைதரும் போது பயன்படுத்திய தேர்கள், போரூர்தியாகவும் போக்குவரத்தூர்தியாகவும் விளங்கின. ஆரக்காற் சில்லுகளுடைய இத்தேர்கள் குதிரைகளால் இழுக்கப்படும் அமைப்புடையன. இந்திய சுதேச மக்களுக்கும் இவர்களுக்கும் ஆரம்ப காலத்தில் நடைபெற்ற யுத்தங்களில் இவர்களின் யுத்த ஊர்தியான "பளுவில்லாத தேர்களிற் பூட்டிய ஆரியரின் கபில நிறக் குதிரைகள் சிந்துவெளி மக்களையும் நடுக்குறுத்தியிருத்தல் வேண்டும்", என்று கூறும் பேராசிரியர் ஏ.எல்.பசாம் சிந்துவெளி வீழ்ச்சிக்குரிய காரணிகளை ஊகிக்கையில்,

"கி.மு இரண்டாம் ஆயிரமாண்டிலே முழு நாகரிகவுலகத்தின்
முகத்தையே மாற்றியமைத்த தேரூரும் மக்களின் இயக்கத்திலே
இப்பெரு நாகரிகத்தின் வீழ்ச்சியும் ஒரு நிகழ்ச்சியாயிருத்தல்
கூடும்"

என்று குறிப்பிடுவதும் கூட, இக்காலத்திலேயே தேர்கள் அறிமுகமாயிருந்தன என்பதை உறுதிப் படுத்தும்.

### 02. இருக்கு வேத காலம்

சிந்துவெளி காலத்தின் வீழ்ச்சியுடன் ஆரம்ப மாகும் புதிய சகாப்தமான ஆரிய நாகரிகத்தின் ஆரம்ப இலக்கியமாக இருக்கு வேதம் விளங்குகின்றது. "வேதகாலத்தில் தேரே தலை சிறந்த போர்க் கருவியாகத் திகழ்ந்ததுடன்" போக்கு வரத்து ஊர்தியாகவும் அமைந்தது. இத்தகைய "தேர்களை இழுப்பதற்கு மாடுகளையும் குதிரை களையும் அவற்றிற் பிணைத்தனர்". இங்கே காணப்படும் தெய்வங்கள் பற்றிய வர்ணனைகளில் அவர்களுக்குரிய தேர்களின் இயல்புகள் சிலவும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. சூரியன் தேரை ஏழு குதிரைகளும் இந்திரன் தேரை இரு குதிரைகளும் இழுத்துச் செல்ல, பூஷன் தேரை ஆடுகளே இழுத்துச் செல்வது சிறப்பானதோர் அம்சமே எனலாம். அத்துடன் அஸ்வினி தேவர்கள்



இருவரினதும் தேர், இவற்றினின்றும் பிறிதுபட்ட இயல்பினையுடையது. மூன்று சில்லுகளுடைய இவர்களின் தேரை, சிறகுகளுடைய குதிரைகளும் பறவைகளும் இழுத்துச் செல்வது குறிப்பிடத்தக்கது.

இருக்கு வேதத்தில், பிற்காலப் புராண இலக்கியங்களிற் போன்று ஆகாயத்திற் பறந்து செல்லும் தேர் விமானங்கள் பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றன என்பர் ஆராய்ச்சியாளர். இவை ஆகாயத்திற் பறந்து செல்வதுடன் கடலிலும் கப்பல் போன்று ஊர்ந்து செல்லும் சிறப்பு மிக்கவையாக விளங்கின. கடலிற் செல்லும் நீராவி இயந்திரங்கள் "அக்கினி ரதம்" என்று இங்கு அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இருக்கு வேதகாலத்தில் சிறப்பிடம் பெறும் யாகங்களுக்குரிய வேதிகைகள், போரூர்தியான இரத வடிவிலே அமைக்கப்பட்டன என்பதை தைத்திரீய சம்ஹிதையிலிருந்து அறியலாம். வேதகால இரதங்கள், இரத வடிவ வேதிகைகளில் இருந்தே ஆலய வடிவம் தோற்றம் பெற்றது என்னும் ஆராய்ச்சியறிஞர் கருத்து மனங்கொள்ளத் தக்கதாகும்.

### 03. இதிகாச புராண இலக்கிய காலம்

இலங்கையரசனும் இராமாயணத்தின் முக்கிய பாத்திரங்களில் ஒருவனுமாகிய இராவணனுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஷ்பக விமானம், தரையில் மட்டுமல்லாது ஆகாயத்திற் பறந்து செல்லும் சிறப்புடையது. இப்புஷ்பக விமானத்தினுள் ஓவியங்கள் வரையப் பட்டிருந்ததுடன் பைசாசங்கள், மயில். கின்னரப்புள், மகரம் என்பவற்றின் சிற்பங்களும் காணப்பட்டன என்று இராமாயணம் கூறும். சிவனுடைய திரிபுரதகன நிகழ்வு பற்றிய ஐதிகத்து டன் தொடர்புடையதாக சிவபுராணங்கள் பலவற்றிலும் இடம்பெறும் தேர் விளக்கம் அமைகின்றது. 'பிரபஞ்ச வடிவமே சிவன் தேர்' எனும் வகையில் அமைவது இப்பௌராணிக மரபு. யசுர் வேதத்திலிருந்து வளர்ச்சி பெற்று வந்த திரிபுரதகன ஐதிகம், விரிவுற்ற நிலையில் இலிங்க புராணங்களில் அமைவதும் இதுவே "இந்து தேர்த்திருவிழா பற்றிய தத்துவமாகவும் எழுச்சி பெற்றது என்பது குறிப்பிடத்தக்கன."

சிவனுக்காக விஸ்வகர்மா நிர்மாணித்த வையம் அல்லது பிரபஞ்சம் எனப்படும் தேரில், மந்திரகேசரி மலைகள் அச்சாகவும் சூரிய சந்திரர் சக்கரமாகவும் ஆறு பருவங்கள் சந்திகளாகவும், பதினான்கு உலகங்கள் பதினான்கு தட்டுகளாகவும், ஆகாயம் ஆசனமாகவும், உதய - அஸ்தகிரிகள் கூவிரமாகவும், நதிகள் கொடிகளாகவும், நட்சத்திரங்கள் விதானமா கவும், மோட்ச உலகம் மேல் விரிவு ஆகவும், யாகங்கள் சட்டங்களாகவும், நாட்கள் முதலியன குறுக்குவிட்டங்களாகவும், எட்டு மலைகள் தூண் களாகவும், அட்ட திக்கு யானைகள் தாங்கும் ஆதாரங்களாகவும், ஏழுகடல்கள் தேர்ச்சிலைகளாக வும், அறுபத்து நான்கு கலைகள் முளைகளாகவும், வேதாங்க - பாங்க - னு சாஸ்திரங்கள் மணிகளாகவும் வாயுக்கள் படிகளாகவும் நால்வேதங்கள் குதிரை களாகவும், பிரமன் சாரதியாகவும் அமைய, 'தேர்' முழுமை பெறுகின்றது. பிரபஞ்ச வடிவமாக இது அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

ஸ்கந்த புராணத்தை தழுவி கச்சியப்ப முனிவர் தமிழில் இயற்றிய கந்த புராணத்தில் இடம்பெறும் தேர்கள் பற்றிய விளக்கங்கள் கற்பனா சாமர்த்திய உச்சம் என்று தான் சொல்ல வேண்டும். இதன் அடிப்படையில் இடம்பெறும் விடயங்கள் இருக்க லாம் என்பதை ஒருபுறம் வைத்துவிட்டு முதலில் கந்தபுராண தேர்கள் பற்றி ஆராய்தல் பொருத்த மானது. இப்புராண யுத்த காண்டத்தில் இடம்பெறும் சூரபத்மனுடைய தேர் ஒவ்வொன்றும் தனித்தனியே 70,000 எனும் தொகையுடைய சிங்கம், பூதம், குதிரை ஆகியவற்றால் இழுக்கப்படும் பிரமாண்டத் தன்மையுடையது. யுத்தத்திற்கென்றே நிர்மாணிக்கப் படும் இது, அத்தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைவதாகும்.





இந்திய வரலாற்றினதும் நாகரிகத்தினதும் தொட்டில் என்று கூறப்படும் தொன்மைமிக்க சிந்து வெளி நாகரிக காலத்திலேயே 'தேர்' என்ற ஊர்தி இந்தியாவில் அறிமுகமாகியிருந்தது என்ற கருத்து வரலாற்று ஆய்வாளர்களின் ஆராய்ச்சி உரைகளில் இருந்து தெரிவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரனுக்கு அவன் யாகத்தில் சிவனால் வழங்கப்பட்ட 'இந்திர ஞாலம்' என்னுந்தேர் "உண்ணிலா மாயைவல்ல வொருதனித் தேர்" என்று, அதாவது வேறு துணையின்றித் தானே இயங்கும் தேர் என்று குறிப்பிடப்படுவது இங்கே ஆராய்தற்குரியது. இது இந்த விஞ்ஞானத் தொழில்நுட்ப அறிவு பற்றிய சாதனை மதிப்பீடாகவும் அமையும். தற்கால நவீன விஞ்ஞானத் தொழில்நுட்பம் மூலம் உருவாகும் தானியங்கி ஏவுகணைகள், விமானங்கள் போல் செயற்படும் நிலையில் 'இந்திர ஞாலம்' அமைகின்றது. சூரனுடைய ஏவலையேற்று, சஞ்சீவி மலையை அது எடுத்து வருவதும் "திருத்தமற்ற மழலை வார்த்தையைப் பேசும் சிவன் சேய்பாற் கூட்டமாக நிற்கின்ற பூதங்களையும் வில் வீரர்களையும் எல்லாம் நீயள்ளிக் கொண்டு போய் அண்ட முகட்டில் வைத்துக் கொண்டிரு" என்ற ஏவலை யேற்று அவர்களைக் கைப்பற்றிச் செல்வதும் இவ்வற்புதத்தேரின் அதிசிறந்த செயற்பாடாக இங்கே கூறப்படினும் இந்து விஞ்ஞான தொழில்நுட்ப சாதனையின் காவிய வடிவமாகவே இது அமைகின்றது என்று கூறுதல் பொருத்தமானது. இத்தகைய விமானங்கள் உருவாக்கப்பட வேண்டிய தொழில்நுட்ப முறைகளை பரத்வாஜர் எழுதிய 'இயந்திர சர்வாஸ்தா' என்னும் இந்து சிற்ப, இயந்திர சாஸ்திரம் குறிப்பிடுவது இங்கே ஒப்பு நோக்குவதற்குரியது.

இந்து இலக்கியங்களில் வரும் தேர்களின் செயற்பாடுகள் பற்றி பிற நாட்டறிஞர்கள் ஆராய்ச்சி செய்துள்ளமை குறிப்பிடற்குரியது. அமெரிக்க ஆய்வாளரான திருமதி லீலரிவில்சாக்ஸ், "வானியலை எடுத்துக்கூறி அதில் செலுத்தக்கூடிய விமானம், ஏவுகணை ஆகியவற்றைப் பற்றி அவர்கள் விரிவாகச் சொல்லியிருக்கின்றார்கள்" என்று இந்து சாஸ்திர ஆசிரியர்களைப் பாராட்டுவதும் 'வாஸ்லூத் - விண்வெளி வீரர்' என்ற நூலின் ஆசிரியர், "இவற்றை வெறும் கற்பனைகளாக நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது. அன்றே புழக்கத்தில் இருந்த கருவிகளையே அவர்கள் நுட்பங்களுடன் குறிப்பிட்டு இருக்கிறார்கள்" என்று இவர்களைப் போற்றுவதும் மனங்கொளத்தக்கன. கந்த புராணம் உட்பட இந்து இலக்கியங்களில் வரும் தேர்களின் உண்மை நிலை எதுவாயிருப்பினும் அவை முற்று முழுவதும் "பௌராணிக மரபே" என்று கொள்ளப் பட முடியாதன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### 04.வரலாற்றுக் காலம்

இதுவரை ஆராய்ந்த இலக்கியங்களில் இடம் பெற்ற தேர் பற்றிய விபரங்களிலிருந்து சற்று விடுபட்ட நிலையில், வரலாற்று ரீதியான சகல வளர்ச்சி நிலைகளை ஆராய்தல் அவசியமாகின்றது. வேதகால இரதங்கள், இரத வடிவ வேதிகைகளில் இருந்து ஆலய வடிவம் தோற்றம் பெற்றதென்னும் ஆய்வறிஞர் கருத்தினை முன்னர் ஆராய்ந்த நாம் அதன் வளர்ச்சியின் தொடர்ச்சியை குப்தர் காலத்தில் அவதானிக்க முடிகின்றது. இவ்வகையில் சிறப்பிடம் பெறும் தேர், குப்தர்களின் சாஞ்சி சிற்பங்களில் நான்கு குதிரைகளுடைய "எளிதி லியங்க முடியாத பெரியதோர் ஊர்தியாக" அமைந்துள்ளது. தேர் வடிவிலிருந்து தோற்றம் பெற்ற ஆலய வடிவம் தேர் வடிவினையே பிரதிபலிக்கும் வகையில் சில்லுகள், குதிரைகளுடன் அமைந்தமையை ஆரம்ப, மத்திய காலக் கோவில்கள் பலவற்றிலும் கண்டுகொள்ளலாம். திருக்கடம்பூர், திருவதிகை என்பன இவ்வகையிற் குறிப்பிடத்தக்கன. இவற்றின் கருவறைகள் இத்தகைய அமைப்புடையன. மாமல்லபுரம் 'பஞ்சபாண்டவர் ரதங்கள்' எனப்படும் கற்றேர்களில் இருந்தே தமிழக ஆலய வடிவம் மத்திய காலத்தில் மறுமலர்ச்சியுற்றதாகும். கற்றேர்கள் எனும் வகையினதாக பதினான்காம் நூற்றாண்டிற்குரிய கொனார்க் சூரியன் கோவில், விஜயநகரத்தில் எழுச்சி பெற்ற ஹம்பி நகர கற்றேர் (கி.பி. 15 - 16) என்பன குறிப்பிடத்தக்கனவாகும்.

இந்து ஆலய வடிவினையே தோற்றுவித்த தேர் எனும் கலையூர்தி வடிவம், கலைச்சிறப்புடன் வளர்ந்தது தமிழகத்திலேயே எனலாம். சோழ, விஜயநகர காலங்களில் பெரு வழக்கில் இடம் பெற்ற தேரமைப்புக்கலை, இன்றைய நிலையில் வளர்ச்சியுற்றதொன்றேயெனலாம். மரச் சிற்பத் தேர்களாக இறைவனின் ஊர்தியாக வீதிவலம் வரும் சிறப்புடையவை இத்தேர்கள். தங்கரதம், வெள்ளிரதம் போன்றனவும் சிற்சில இடங்களில் நடைமுறையிலுண்டேனும் அதேயாலயங்களில் தேர்த் திருவிழாவிற்குரியதாகவும் மரச் சிற்பத் தேர்களே பெரும்பாலும் அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் சிறப்புப் பெறும் தேர்களில் திருவாரூர், திருவிடைமருதூர், ஸ்ரீ வில்லிபுத்தூர், திருச்செந்தூர், மதுரை போன்றவை குறிப்பிடத் தக்க சிறப்புடையனவாக அமைகின்றன என்று கூறின் அது மிகையல்ல.



தமிழகத்தில் சிறப்புப் பெறும் தேர்களில் திருவாரூர், திருவிடைமருதூர், ஸ்ரீ வில்லிபுத்தூர், திருச்செந்தூர், மதுரை போன்றவை குறிப்பிடத்தக்க சிறப்புடையனவாக அமைகின்றன என்று கூறின் அது மிகையல்ல.

### தேரும் தேர்த்திருவிழாவும் சமூகத்தில் பெறும் முக்கியத்துவமும்

தேர் அமைப்பு முறைமைகளை விபரிக்கும் ஆகம, சிற்ப சாஸ்திரங்கள், தேர்த்திருவிழா நடை முறை பற்றியும் விபரிப்பது குறிப்பிடத்தக்கதாகும். தேர்த் திருவிழா, ஏழாம் நாளில் நடைபெற வேண்டும் என்று காரணாகமம் கூறும். இன்று அம் மரபு, பெரும்பாலும் தளர்ந்துவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். தேர்த் திருவிழா, இன்றைய நிலையில் ஆலய திருவிழா நாட்களின் அடிப்படையில் இறுதிக்கு முதல்நாள் அமைவது அவதானித்தற் குரியது. பத்து நாள் விழாவாயின் ஒன்பதாவது நாளிலும் சில ஆலயங்களில் இறுதி பத்தாவது நாளிலும் பன்னிரு நாள் விழாவாயின் பதினோராவது நாளிலும் பதினைந்து விழாவாயின் பதின்னான் காவது நாளிலும் பதினெட்டு விழாவாயின் பதினேழாவது நாளிலும் இருபத்தைந்து விழாவாயின் இருபத்துநான்காவது நாளிலும் அமைவது இன்றைய காலமுறை எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நிலையில் தேர்த்திருவிழா அல்லது இரதோற்சவம் நடைபெறுவதன் தத்துவமாக "திரிபுர சங்காரத்து உண்மைக் காட்சியை உணர்த்தி ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் கெடுத்தற்காக" என்னும் இந்து சமய, பௌராணிக தத்துவத்தை ஏற்பது பொருத்த மானது. இதனையே சைவசித்தாந்த நூலாகிய திருமந்திரமும் "முப்புரம் ஆவது மும்மல காரியம்" என்றும் குறிப்பிடுகின்றது. திருமூல தத்துவத்தின் அடிப்படையில் அமையும் தேர்த்திருவிழா ஆலய விழாக்களுள் சிறப்புடையதாகும். இது பற்றி தவத்திரு குன்றக்குடி அடிகளார்,

"தேர்த்திருவிழாவைப் போல மகிழ்வைத் தரத்தக்க விழா
வேறொன்றில்லை. சமயநெறி தழுவிய சமுதாய அமைப்பிற்குத்
தேர்த்திருவிழாவே அரண் செய்கிறது."

என்று குறிப்பிடுவது பொருத்தமுடையதே யாகும். சமுதாய அமைப்பினையே நெறிப் படுத்தும் தேர்த் திருவிழா, இந்து சமயத்தைப் பொறுத்தவரையில் ஓர் 'பதி புண்ணிய விழா'வாக அமைவதுடன் "இறைவனுக் குரிய ராஜோபசாரம்" என்று போற்றப்படு வதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக் கதாகும். அதேவேளையில்,

**"சிறந்த தேரில்லாத ஆலய வழிபாடு தலையில்லா உடம்பை**
**போசிப்பது போன்றது"**

என்று இந்து மரபு கூறுவதிலிருந்து தேர்த் திருவிழாவின் முக்கியத்துவம் இத்தகைய சிற்பாகம அடிப்படையிலமையும் சிறந்த தேரிலேயே தங்கியுள்ளது என்னுமுண்மை தெளிவாகின்றது எனலாம்.

தேரோட்டம் நடைபெறும் ஆலய மூலமூர்த்தி சிவனாயின் நடராஜர் அல்லது சோமாஸ்கந்தரும் விநாயகராயின் பஞ்சமூல விநாயகரும், முருகனாயின் ஆறுமுகனும், விஷ்ணுவாயின் வரத ராஜப் பெருமாளும், சக்தியாயின் அதன் பல்வேறு வடிவபேத மூல மூர்த்திகளுக்கு அமைய அவ்வவற்றின் சிறப்பார்ந்த வடிவமும் தேர் எழுந்தருளி மூர்த்தமாக அமைய, சைவாலயங்களில் ஆண் தெய்வங்களாயின் சண்டேஸ்வரரும், பெண் தெய்வங்களாயின் சண்டேஸ்வரியும் அவ்விழாவின் தரிசன பலன் அல்லது பேறு



அளிப்பவராக இறுதியில் சிறிய தேரில் அல்லது மூலவருடன் சேர்த்து பெரிய தேரில் எழுந்தருளுவதும் சிறப்பாக அவதானிக்கக்கூடிய பொது நடைமுறையாகும். ஏனைய தெய்வங்களையும் சிவ சொரூபமாகவே தரிசனம் செய்தல் இவ்விழாவின் நுண்மையம் தழுவிய தத்துவ மாகும். இத்தகைய தேர்விழா வேளையில் 'தேர் வடிவம்' முழுவதும் 'சிவ வடிவம்' அல்லது 'சிவசொரூபமாகவே அமையும்'. இவ்வாறு இறைவன் தேரில் எழுந்தருளும் தேர்விழா, 'சார்வத்ரீக தீக்ஷை' என்று குறிப்பிடப்ப டுவது சிறப்புடையதாகும்.

தேரோட்ட வேளையில் தேரின் பொது வடிவம் தாமரை மொட்டினைப் போன்று அக்கினி சுடர் விடும் அல்லது சுவாலிக்கும் தோற்றமுடையதாக அமைய, அதில் இறைவன் அமர்ந்து, ஆன்மாக்களின் இதயத் தாமரையில் அவன் அமர்ந்திருப்பதனையும் அவன் ஏறியவுடன் தேர் ஓடுவதும் இறங்கியவுடன் நிற்பதும் அவனருளின்றி ஆன்மாவால் இயங்க முடியாது என்பதனையும் குறிக்கும் தத்துவார்த்த மாகும்.

இத்தகைய சிறப்பினை உடைய தேர்த்திருவிழா, இந்து சமூகத்தை சிறப்பாக யாழ்ப்பாணத்து இந்து சமூகத்தைப் பொறுத்தவரையில் ஓர் 'தேர்க் கலாசாரம்' என்று போற்றத் தகும் உள்ளார்ந்த சிறப்பினை உடையதாகும். இது இந்து சமூக நிலையின் பொதுமை தழுவிய பண்பினை எடுத்துரைக்கும் சமூக தத்துவமாகவம் அமையும். இச்சமூக பொதுமைத் தத்துவம் 'பிரபஞ்சத் தேர்' என்று குறிப் பிடப்படுதலும் பொருத்தமுடைய தொன்றே என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சங்கீத பூஷணம்

# திருமதி. அக்னஸ் இராசம்மா மரியாம்பிள்ளை

■

பத்மா சோமகாந்தன்

"வடமராட்சியின் இசைப்பாரம்பரியம்" என்ற அறிமுகக் குறிப்பொன்றிலே பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் "வடமராட்சியின் கல்விப் பாரம்பரியம், கலைப்பாரம்பரியம், கோயிற்பாரம்பரியம் என விரியும் பாரம்பரியங்களைத் திருமதி. இராசம்மா மரியாம் பிள்ளை அவர்களை மையப் புள்ளியாகக் கொண்டு பார்க்கத் தொடங்கலாம்" எனச் சொல்லியிருப்பதைக் கொண்டே கலாபூஷணம் சங்கீத வித்துவாட்டி திருமதி. அக்னஸ் இராசம்மா மரியாம்பிள்ளையின் பெருமை மிக்க வியத்தகு ஆளுமையை நாம் நன்கு ஊகித்துக் கொள்ளலாம்.

மலேசியா கோலாலம்பூரிலே பிரதம ஓவசியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த நீயோக்கீம் சுவானப் பிள்ளை தம்பதியின் மூத்தமகளாக 1926ஆம் ஆண்டு மார்கழி மாதம் 4ஆம் நாள் பிறந்தவரே அக்னஸ் இராசம்மா. இவருக்கொரு தங்கை அவர் பெயர் கனகமணி. இவர்கள் இருவரும் மலேசியாவிலே சிறுமிகளாக இருந்தபோது ஆரம்பக்கல்வியைத் தொடங்கினாலும் பின்னர் தம் பெற்றோரது சொந்த ஊரான கரவெட்டிக்கே வந்து தமது பள்ளிக் கல்வியைக் கரவெட்டி இருதயக் கல்லூரியிலே தொடர்ந்தனர்.

இயற்கையாகவே இனிய குரல்வளமும் இசையில் மிகுந்த தாகமும் கொண்டிருந்த சிறுமி அக்னஸ் இறைவழிபாட்டுப் பாடல்கள், குழந்தைப் பாடல்கள், தொழிலாளர்களின் நாட்டுப் பாடல்கள் போன்றவற்றையெல்லாம் தன் விருப்புக்கேற்றபடி இயல்பான தனது காந்தர்வக் குரலால் பாடிப் பலரையும் இரசனையுள் மூழ்கடிக்கச் செய்வாள். அத்தகைய வல்லமையைக் கலைவாணி நிறையவே நல்கியிருப்பதை அவதானித்த பெற்றோர், இவரது இசைஞானத்தை வளம்பெறச் செய்ய இவர்களது அயலிலே இருந்த நாதஸ்வர வித்துவான் கு.பெரியசாமிப்பிள்ளையிடம் இசை கற்பிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டனர். அக்னஸ் வாய்ப்பாட்டு இசையோடு ஆர்மோனியம் வாசிப்பதிலும் பயிற்சி பெற்றுக் கொண்டார். பாடசாலைக் கல்வியையும், நெறி முறை தவறாமல் ஆரம்ப இடைநிலைக் கல்வியையும் ஆர்வத்தோடு படித்து முடித்த அக்னஸ், ஆசிரியர் பயிற்சி நெறியை மேற்கொள்ள விரும்பினார். 1947,48 என இரு ஆண்டுகளாகக் கோப்பாய் ஆசிரிய கலாசாலையிலே பயிற்சி பெற்றார். இப்பயிற்சிநெறியின் போது சங்கீதத்தையும் ஒரு பாடமாகக் கற்றுத் தேறினார். ஏனைய பாடப்பயிற்சிகளோடு இயல்பிலேயே இசையில் கூடிய நாட்டம் கொண்டிருந்தவருக்கு சங்கீதப் பயிற்சிநெறியும் கிட்டியது வெகு வாய்ப்பாகிவிட்டது.

அக்கால கட்டத்தில் பெண்களுக்கே மிகப் பொருத்தமான தொழிலாகக் கருதப்பட்ட ஆசிரியப் பணிக்குரிய தகுதியையும் தேர்வையும் பெற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாபூஷணம் சங்கீத பூஷணம் திருமதி. அக்னஸ் இராசம்மா மர்யாம் பிள்ளையின் சங்கீதகலை ஆளுமை வியக்கத்தக்கது. வாய்ப்பாட்டு இசையோடு, வயலின் வீணை ஆகிய வாத்தியங்களையும் வாசிக்கும் திறமை பெற்றவர். நாடகம் நடிப்பு, நாட்டார் இசை என்பனவற்றிலும் ஈடுபாடு காட்டியவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே முதன் முதல் சங்கீதம் கற்ற, யாழ்ப்பாணம் கரவெட்டியைச் சேர்ந்த கத்தோலிக்கப் பெண்மணி என்ற பெருமையும் புகழும் இவருக்குரியது.**


மலேசியாவில் சிறுமியாக

கொண்ட அக்னஸ் இராசம்மா மணவாழ்வை மேற் கொள்ள கரவெட்டியைச் சேர்ந்த ஆசிரியர் சு.மரியாம்பிள்ளை அவர்களை மணமகனாகத் தேர்ந்தெடுத்தனர் பெற்றோர்.

பள்ளி ஆசிரியரான திரு.சு.மரியாம்பிள்ளை அவர்கள் ஈழநாடு இதழின் ஆசிரிய பீடத்தில் மட்டுமல்ல இன்னும் பல இதழ்களில் ஊடகவியல் பணியை மேற்கொண்டு பேரும் புகழும் மிக்க திறமையாளராகவும் கணிப்புப்பெற்றவர். இருவரும் சிறந்த ஆசிரியர்களாகவே விளங்கினர்.

இவர்களது இனிய இல்லற வாழ்வின் பேறாக நான்கு ஆண்களையும் ஒரேயொரு பெண் குழந்தை யையும் பெற்று மகிழ்ந்தனர். மகள் ராஜினி போல் பொறியியல் பட்டதாரியாகவிருந்தும் லண்டனிலே பல பெண் குழந்தைகளுக்குப் பரத நாட்டியம் கற்பித்ததன் பயனாக பலர் நாட்டிய தாரகைகளாக விளங்குகின்றனர். திருமதி.அக்னஸ் இராசம்மா அவர்கள் தன் ஆசிரிய சேவையை கரவெட்டி திரு.இருதயக் கல்லூரியிலே பதினொரு வருடங் களும் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் ஐந்து வருடங்களும் மேற்கொண்டார். தொடர்ந்தும் பண்டாரவளை கன்னியர் மடத்தில் பாடசாலை ஆசிரியப் பணியோடு 5,6 வருடங்கள் தனிப்பட்ட முறையில் இசைக்கல்வியையும் பயிற்றுவித்து வந்தார். இயல், இசை, நாடகமெனப் பல இலக்கிய வடிவங்களிலும் ஈடுபாடும், ஆற்றலும், ஆர்வமும் பூரணமான அறிவும் மிக்க இவர் நாட்டின் செல்வங்களான மாணவர்களை சிறந்த ஆளுமை மிக்க பிரசைகளாக ஆக்குவதில் பெரும் பிரயாசையுடன் உழைத்து வந்தார். அதற்கமைவாக இவரது குடும்பச் சூழலும் ஒத்துழைத்தது.

யாழ்.கரவெட்டி எனும் ஊரில் பிறந்து, வளர்ந்து இசை பயின்ற கத்தோலிக்கப் பெண்ணான இவர் தமிழ்நாட்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத் திலே இந்து சமயத்தோடு இணைந்ததான கர்நாடக இசை, பண்ணிசை சேர்ந்த சங்கீத பூஷணப் பட்டப்படிப்பையும் மேற் கொள்ள விரும்பினார். கலைகளுக்கு இனமோ, மதமோ, மொழியோ என்ற எவ்வித வேறுபாடுகளுமே இல்லை. இதனை நன்குணர்ந்த அக்னஸின் தந்தையார், கணவர் யாவருமே இவருடைய இசை வளர்ச்சிக்கு ஆதரவாகவே மதம் கடந்து, மொழி கடந்து பக்தி சிரத்தையோடு இசையை அனுபவிக்கவும் தெய்வீக உணர்வோடு ஆன்மீக உயர்வடையவும் வழிகோலி விட்டனர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே முதன் முதல் சங்கீதம் கற்ற கரவெட்டியைச் சார்ந்த கத்தோலிக்க குடும்பத்திலிருந்து வந்த பெண்மணி என்ற பெருமைக்கும் புகழுக்கும் கூட இவர் ஆளாகி மகிழ்ந்தார்.

கத்தோலிக்க ஆலயங்களில் பல்லாண்டுகளுக்கு முன்னர், வழிபாட்டுப் பாடல்கள் கீழைத்தேச இசையோடு இணைந்ததாகவே இருந்தன. இந்தப் பின்னணியில்தான் ஈழத்தில் பாரம்பரிய கத்தோலிக்க குடும்பத்திலிருந்து வந்த இவர் கர்நாடக இசையில் மிக உயர்தரப் பயிற்சிபெற விரும்பி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே இசை பயின்று பட்டம் பெற்றுத் திரும்பியமை பலருக்கும் பெரும் மலைப்பையே ஏற்படுத்தியது.

இவரது முன்மாதிரியான இப்பரந்த செயற்பாட்டை பெரிய குருமடத்தைச் சார்ந்த யாழ் புனித சவேரியர் அருட்தந்தை எஸ்.வி.பி. மங்களராஜா அவர்கள் தனது இசைப்பணிவழி இறைபணி என்ற கட்டுரையொன்றிலே 2 ஆம் வத்திக்கான் சங்கம் சமய உணர்வை வளர்க்கும் முறையிலும், தனிப் பட்ட பண்புகளுக்கு ஏற்ப வழிபாட்டைத் தழுவியமைக்கும் வகையிலும் இசைக்கு மதிப்பளித்து மக்களது அன்றாட வாழ்வில் பின்னிப் பிணைந்துள்ள இசை மரபுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தகுந்த வழிகாட்டுதல்களை வழங்கி யுள்ளது என்பதைக் குறிப்பிட்டதோடு இதற்குப் பல வருடங்களுக்கு முன்னரே அம்மையார் 2ஆம் வத் திக்கான் சங்கம் சுட்டிக்காட்டிய சரியான பாதையில் எந்த ஆலயங்களின் ஏவுதலுமின்றி இசை மீதிருந்த தாகத்தினால் தாமாகவே பரந்த நோக்கில் கால்பதித்த திறமையை வியந்து பாராட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைச் செல்வி இராசம்மா அவர்கள், அண்ணாமலை யில் இசை பயிலும் காலத்திலே பல்கலைக் கழகப் பேராசிரியர் பிரபல வித்துவான் எம்.எம்.தண்டபாணி தேசிகர், கர்நாடக சங்கீதத் தலைவர் சங்கீத கலாநிதி இசைப்பேரறிஞர் பத்மபூஷண் பி.சாம்பமூர்த்தி, பிடில் வித்துவான் கும்பகோணம் இராசமாணிக்கம்பிள்ளை என மாபெரும் இசை வித்தகர்கள், மேதைகள் எனப் பலரும் அம்மையாருடைய இசை ஞான நேர்த்தியையும் அதற்கு ஆதாரமாயமைந்துள்ள வீணை, வயலின், ஆர்மோனியம் ஆகிய வாத்தியங்களைக் கையாளும் திறமையையும் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.



அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் சங்கீத மாணவியாக...

இப்படிப்பல பெரியோர்களுடைய வாழ்த்துதல்களோடும் தனது மனோரதத்தைச் சமுதாயப் பற்றுதலோடும் கற்கை நெறியில் முற்றுமுழுதாக ஈடுபட்டு இசை கற்பிக்கும் பெருமக்களிடமிருந்து இசை நுட்பங்களையெல்லாம் உள்வாங்கியபடியே தனது கற்பனை, இராக சஞ்சாரங்களையெல்லாம் நன்கு பயின்று திறமையை வளர்த்துக்கொண்டார். ஏற்கனவே வெகு சரளமாக ஆர்மோனியம் வாசிப்பதில் ஆற்றல் பெற்றிருந்த அக்னஸ் அவர்களுக்கு இசைபயிலும் காலத்திலும் பல வாய்ப்புகளும் பாராட்டுகளும் கிடைத்தன. கூடவே வயலின், வீணை என்ற வாத்தியங்களையும் வாய்ப்பாட்டு இசையோடு வாசிக்கும் பயிற்சியையும் மேற்கொண்டு தன் இசை ஆற்றலை மேம்படுத்திக் கொண்டார்.

ஊரிலே ஆசிரியப் பணியோடு கணவன், குழந்தைகள் எனப் பல குடும்பப் பொறுப்புகள் மத்தியிலும் இசைக்கல்வியை மேற்கொள்ளும் அவாவுடன் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து இறுதி 2 ஆண்டுகளில் இலங்கை மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை எழுதி விசேட சித்தி பெற்றார். அச்சலுகையினால் பலனும் கிடைத்தது.

இயல்பிலேயே தேனீ போல மிகுந்த சுறுசுறுப்பும் எந்த நற்பணியையும் முன்னின்று ஆற்றுவதில் முனைப்புற்றும் நிற்கும் இராசம்மா அவர்கள் ஈழ மாணவர் மன்றத் துணைத்தலைவராகப் பொறுப்பேற்றதோடு சமூகசேவை மன்றத்தினரோடிணைந்தும் பணி செய்தார்.

தனது சேவைகளாலும் நற்பண்புகளாலும் பலரது பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்ட இசைச் செல்வி இராசம்மா அவர்கள், அண்ணாமலையில் இசை பயிலும் காலத்திலே பல்கலைக் கழக பேராசிரியர் பிரபல வித்துவான் எம்.எம். தண்டபாணி தேசிகர், கர்நாடக சங்கீதத் தலைவர் சங்கீத கலாநிதி இசைப்பேரறிஞர் பத்மபூஷண் பி.சாம்பமூர்த்தி, பிடில் வித்துவான் கும்பகோணம் இராசமாணிக்கம் பிள்ளை என மாபெரும் இசை வித்தகர்கள், மேதைகள் எனப் பலரும் அம்மையாருடைய இசை ஞான நேர்த்தியையும் அதற்கு ஆதாரமாயமைந்துள்ள வீணை, வயலின், ஆர்மோனியம் ஆகிய வாத்தியங்களைக் கையாளும் திறமையையும் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

இசைப்பேரறிஞர்கள், இசையாளர்கள், இசை ரசிகர்கள் எனப் பல்துறையோரிடமிருந்தும் பாராட்டுக்களையும் போற்றுதல்களையும் பெற்றுக் கொண்டு சங்கீதபூஷணம், கலாபூஷணம் ஆகிய பட்டங்களோடு தாயகம் திரும்பியவர் எவ்வித கர்வமோ, பெருமையோ கொள்ளாமல் முன்னரைப் போலவே மிக ஒழுங்காகவும் எளிமையாகவும் நாளாந்தம் தன் பணிகளை "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற குறிக்கோளோடு தன்மாணவச் செல்வங்களின் கற்பித்தல் மற்றும் சமூக செயற்பாடுகளில் தன்னைக் கரைத்துக் கொண்டார். இவற்றோடு நாடகம், நடிப்பு, நடனம், நாட்டார் இசை எனப் பல விடயங்களிலும் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்த இவர் இவை தொடர்பான சில மன்றங்களின் தலைமை மற்றும் உறுப்பினர் என்ற தகைமைகளையும் ஏற்றுச் செயற்பட்டார். இவற்றிலே 'அடங்காப்பிடாரி' என்ற நாடகமும் 'வெளிக்கிடடி விசுவமடுவுக்கு' என்ற நாடகமும் மக்களை மிகவும் கவர்ந்தவை.

ஈழத்தின் சில பாகங்களிலும் குறிப்பாக மலையகத்திலும் தனது இசைக் கல்விச் சேவையை ஊட்டிவளர்த்த பெருமை இவருக்குண்டு. பண்டாரவளை சென். ஜோன்ஸ் கல்லூரி போன்ற பல பாடசாலைகளில் இவரிடம் இசை கற்ற மாணவர் சிலர் இன்றும் அப்பகுதிகளிலே இசையாசிரியர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

இசையால் இனம், மதம், மொழி என யாவற்றையும் கடந்து மனித நேயத்தை வெளிக்கொணர முடியும் என்பதற்கு திருமதி. அக்னஸ் இராசம்மா மரியாம்பிள்ளை ஒரு அடையாளம்; ஒரு மையப் புள்ளியுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலத்தைக் கடந்து நிற்கும்
# சமணர் கல்வேரவியங்கள்!



### சமண மத தோற்றம்

மதம் என்பது நம்பிக்கை கொண்ட மக்களை பண்படுத்தி, பல்லுயிர் ஓம்புதல், தெய்வ வழிபாடு, பிறர் நலம் பேணுதல், சத்சங்கம் நாடுதல் ஆகிய சிறந்த பண்புகளைப் போதிப்பதாக இருக்க வேண்டும். உலகில் எத்தனையோ மதங்கள் இது காறும் தோன்றி மக்களுக்கு பல்வேறு விதமான கொள்கைகளையும், மதக் கோட்பாடுகளையும் புகட்டியிருக்கின்றன. வேத காலத்திற்கு முற்பட்ட காலத்திலேயே மக்களுக்கு கொல்லாமையையும் அகிம்சையையும் இணக்கமான அன்பு வழியையும் போதித்து நல்வழி காட்டி வந்தது சமண மதமாகும். வேதங்களில் பழைமையான ரிக் வேதத்தில் சமண மதம் பற்றிய குறிப்புகளும் அதன் சிறப்பைப் பற்றிய விபரங்களும் காணப் படுகின்றன.

### சமணர் கொள்கைகள்

சமண மதத்திற்கு ஜெயின மதம், நிகண்ட மதம், ஆறுகத மதம், அனேகாந்த வாத மதம், லியாத்வாத மதம் என்றெல்லாம் பிற பெயர்களும் இருந்து வருகின்றன. பொதுவாக சமணர் என்றால் துறவி என்று பொருள்படுகின்றது. சமண மதமானது துறவை வற்புறுத்திக் கூறி, துறவு மேற்கொள்வோரே வீடுபேறு அடைவர் என்று உறுதியாகத் தெரிவிக்கின்றது. பலன் களையும் கர்மங்களையும் வென்றவர் என்பதால் தீர்த்தங்கரர்களுக்கு ஜினர் என்ற பெயரும் விளங்கி வருகின்றது, ஜினரை கடவுளாக உடைய மதம் ஜெயின மதம் எனப்பட்டது. சமண மத துறவிகள் சமயக் கொள்கைகளை அவ்வப்போது உலகத்தில் பரவச் செய்ததன் பொருட்டு தீர்த்தங்கரர்கள் என்ற பெயரைப் பெற்றார்கள். இந்த சமண மதப் பெரி யார்கள் அவ்வப்போது தோன்றுகின்றார்கள் என்பது சமண சமயத்தின் அசைக்க முடியாத நம்பிக்கை யாகும். இதுவரை 24 தீர்த்தங்கரர்கள் தோன்றியுள் ளார்கள் என்பதும், இனியும் 24 தீர்த்தங்கரர்கள் தோன்றப் போகிறார்கள் என்பதும் சமண மதக் கொள்கைகளில் முக்கியமான ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.





### தீர்த்தங்கரர்கள் தோற்றம்

விருசப தேவர், அஜித்தநாதர், சம்பவநாதர், அபிநந்தனர், சுமதி நாதர், பதும நாபர், சுபார்சவ நாதர், சந்திரப் பிரபா, புஷ்ப தந்தா (சுவிதி நாதர்), சீதள நாதர், சீறியாம்ச நாதர், வாசு பூஜாயா, விமல நாதர், அநந்த நாதர் (அநந்தஜித் பட்டாரகர்), தருமநாதர், சாந்தி நாதர், குந்துநாதர் (குந்து பட்டாரகர்), அரநாதர், மல்லிநாதர், முனிசு வர்த்தர், நமிநாதர் (நமிபட்டாரகர்), நேமிநாதர் (அரிஷ்ட நேமி), பார்சுவ நாதர் மற்றும் வர்த்தமான மகாவீரர் ஆகிய சமண மத பெரியோர்களே இதுவரையிலும் தோன்றிய 24 தீர்த்தங்கரர்கள் ஆவார்கள். சமண மதத்தில் 24 தீர்த்தங்கரர்களும் தெய்வங்களாகப் போற்றப்பட்டார்கள். இருந்த போதிலும் தெய்வங்களால் அருளப்படும் முத்தொழில்களாகிய ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகியவற்றில் இவர்கள் ஒருபோதும் ஈடுபட்டதில்லை. ஏனெனில் இவர்கள் தம்முடைய ஆன்மீக தன்மையின் அடிப்படையில் வேண்டுதலும், வேண்டாமையும் இல்லாதவர்களாக தன்னையே தான் அறிந்து வீடுபேறாகிய பேரின்ப நிலையில் இருப்பதற்கான வழிமுறைகளை பின்பற்றினார்கள். வீடுபேற்றை அடை வதற்குத் தடையாக இருந்த வினைகளை முற்றிலுமாகப் போக்கி உலக நன்மை ஒன்றையே விரும்பி இருந்தார்கள்.



### கடவுளாய் வணங்கப்பட்ட தீர்த்தங்கரர்கள்

சமண மதத்தில் தோன்றிய எல்லா தீர்த்தங்கரர்களையும், சமணர்கள் தெய்வமாகவே போற்றி வணங்கினார்கள். தீர்த்தங்கரர்களின் துறவறத்தன்மையும் போதனைகளும் சமணர்கள் அவர்களை பெரிதும் மதிப்பதாகவே இருந்தது. தம்மை வணங்குபவர்களுக்கு அவர்கள் எதையும் தருவதோ அல்லது தவறுகள் செய்தோரை தண்டிப்பதோ இல்லை. பின் எதற்காக இவர்களைத் தெய்வங்களாக வணங்க வேண்டும் என்று மக்களில் ஒரு சாரார் கேட்டபோது, அதற்கான விடை என்ன வென்றால், தீர்த்தங்கரர்கள் சென்ற புனித பாதையில் அதாவது நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் இவற்றின் அடிப்படையில் வாழ வேண்டும் என்ற தூண்டுதலைப் பெறுவதற்குத் தானே தவிர வேறெதற்காகவும் அல்ல என்பது தான். உலகத்தில் நல்ல நெறிகளைக் கடைப்பிடித்து நல்ல விதமாக வாழ்ந்து அதன் பின்னர் தெய்வநிலை அடைவதற்காகவே சமணர்கள் தீர்த்தங்கரர்களை வணங்குகின்றார்கள். மேலும் மனிதப் பிறவியின் குறிக்கோளே மேலே சொல்லப்பட்ட நல்ஞானமும், நல்லொழுக்கமும் ஆகியவையேயாகும், மேலும் அதுவே சமண மதத்தில் போற்றப்படுகின்ற மிக உன்னதமான பண்புகளாகும்.



### தமிழ்நாட்டில் சமண சமயம்

சமண மதத்திற்கு முதன்மையான கோயில் குஜராத்தில் உள்ள பலித்தானா கோவில் என்பதாகும். இந்த கோவிலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







சமணமதம் என்றும் செழுமையுடன் விளங்க வேண்டும் என்னும் நோக்கிலும் புனிதத் துறவிகளான தீர்த்தங்கரர்களின் பெருமை என்றும் அழியாதிருக்க வேண்டும் என்னும் நோக்கிலும் காலத்தால் அழியாத கற்சிப்பங்களை வடித்து வைத்துச் சென்றனர்.

தான் முதன்மையான தீர்த்தங்கரராகிய ஆதிநாதர் இருந்து சமணர்களுக்கு அருளாசி வழங்குகின்றார். பண்டைய காலத்தில் சமண சமயம் தமிழ்நாட்டிலும் பரவி நிலை பெற்றிருந்தது. அத்தோடு மட்டுமல்லாமல் சமண மதம் செல்வாக்குப் பெற்றதாகவும் இருந்து வந்தது. ஒரு காலகட்டத்தில் சமணசமயம் தமிழ்நாட்டிலே வேரூன்றி தழைத்துச் செழித்து வளர்ந்திருந்ததை தேவாரம், நாலாயிரத் திவ்யபிரபந்தம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலான பிற்காலத்து நூல்களும், மணிமேகலை சிலப்பதிகாரம் முதலிய சங்ககால நூல்களும் தெரிவிக்கின்றன. சமண மதத்திற்கான இலக்கியச் சான்றுகள் மட்டுமல்லாமல் இது தொடர்பான சாசனங்களும், இன்றளவும் இருந்து வரும் சமண கோயில்களும், ஆங்காங்கே காணப்படுகின்ற சமண சமய தீர்த்தங்கரர்களின் திருவுருவங்களும் இதற்கான சான்றுகளைப் பகர்கின்றன. தமிழ் நாட்டின் மதுரை மாவட்டத்தில் உள்ள யானை மலை அடிவாரத்திலும் மேலூர் பகுதிகளிலும் சமணர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் காணப் படுகின்றன, சமணர் படுக்கைகளும், சில கல்வெட்டுக்களும் இதற்குச் சான்றாக இன்றும் இருந்து வருகின்றன.

### சமணர்களும் சிற்பங்களும்

எளிமைக்கும் அஹிம்சைக்கும் மிகுந்த முக்கியத் துவம் அளித்த சமண சமயத்தவர், தம்முடைய மதம் பற்றியதான பல்வேறு கொள்கை மற்றும் இதர




விடயங்கள் பிற்காலத்து மக்களால் நன்கு அறியப் படுதல் வேண்டும் என்பதற்காகவும் தமது காலத்தில் செழித்தோங்கி இருந்த சமண மதமானது பின்வரும் சந்ததியர் காலத்திலும் அதே செழுமை யுடன் விளங்கிட வேண்டும் என்கின்ற பரந்த எண ணத்திலும், தம்முடன் வாழ்ந்த புனிதத் துறவியரான தீர்த்தங்கரர்களின் பெருமைகளை உலகம் எப்போதும் அறிந்திருக்க வேண்டும் என்பதற்கா கவும். அவர்களின் புகழ் அழியாமல் நினைத்திருக்க வேண்டும் என்பதற்காகவும் அழியாத கல்லோ வியங்களாக காலங்களைக் கடந்து நிற்கும் வகையில் சிற்பங்களை வடித்து வைத்தார்கள்.

இவ்வாறாகப் படைக்கப்பட்ட சமணர்காலத்துச் சிற்பங்கள், பேசும் கற்பொக்கிஷங்களாய்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







தெளிவானதாகவும் அதிஉன்னத கலைநயம் கொண்டதாகவும் இருக்கின்றன. சமண சமயச் சிற்பங்கள் அவற்றின் பொருள், சிற்ப வடிவம், கல்வெட்டுக்கள் ஆகியவற்றால், அவை சமணசமய காலத்தைச் சார்ந்ததுதான் என்பதைப் பறை சாற்றுபவையாக உள்ளன. சமண சமயக் கொள்கை முன்னேற்றங்களும், புதிய கோட்பாடுகளும் சிற்பங்களின் மூலமாகவே வெளிப்படுத்தப்பட்டன. இவை அனைத்தும் மற்ற மதங்களுக்கு ஒரு எடுத்து க்காட்டாகவும் விளங்குகின்றன. இரண்டாம் மற்றும் மூன்றாம் நூற்றாண்டுகளில் உருவான சமணச்சிற்பங்கள் எல்லாமும் மற்ற எவற்றுடனும் ஒப்பிட முடியாத அளவில் சிறப்புற்று விளங்கின. சமணர்களின் ஆன்மீக நூல்களும் சமண மதத்தின் சார்பாக உருவான சமண மத சிற்பங்களும் மற்ற மத சிற்பங்களிலிருந்து சொல்லப்பட்டவற்றைக் காட்டிலும் சிறப்பித்தே செப்பின. மஹாவீரர் மற்றும் பர்ஷ்வநாதா ஆகிய தீர்த்தங்கரர்களின் வாழ்க்கை வரலாறும், அவர்களால் எடுத்தியம்பப் பட்ட ஆன்மீக கொள்கை விளக்கங்களும் சிற்பங் களாகவும் கல்வெட்டுக்களாகவும் உருவாக்கப் பட்டுள்ளன.

சமண சிற்பங்கள் இந்தியாவின் மேற்கு மாநிலங்களான குஜராத்தில் ஒரு மிகப் பெரிய சிற்ப சாம்ராஜ்யத்தையே உருவாக்கியிருக்கின்றது என்றால் அது மிகையாகாது. இந்தச் சிற்பங்களில் கையில் விளக்குடன் கூடிய பாவைகள் நடன மங்கையர், இசைக் கலைஞர்கள், கடவுளர்களின் ஒப்பற்ற காட்சிகள், சமண மதத்தின் நினைவுச் சின்னங்கள், மிருகங்கள், பறவைகள் ஆகியவை அதியற்புதமாகச் செதுக்கப்பட்டு கண்களைக் கவருகின்ற விதத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் சமணர்களின் ஆன்மீக மேன்மையை உலகுக்கு தெள்ளத் தெளிவாக உணர்த்துவதாக இருக்கின்றன.

குஜராத் மாநிலத்தில், கிர்நாரின் ஜுனாகாத் மல்லிநாத் ஆலயம், பவநகரின் பலிட்டானா ஆலயம், பவநகரின் ஸ்ரீ சிமந்தர் சுவாமி ஆலயம், தரங்கா மலையின் மெஹசானா ஆலயம், கோத ராவின் சாந்திநாத் ஆலயம், கட்சின் பத்ரேஷ்வர் ஆலயம், மொதேராவின் கங்கரேஸ்வரர் ஆலயம் உட்பட பதினேழு சமணர் ஆலயங்களில் மிகத் துல்லியமாய் செய்யப்பட்டுள்ள சிற்பக் கூட்டங் களும், கோபுரங்களும், வளைவுகளும், அழகிய தூண்களும், தீர்த்தங்கரர்களின் உருவங்களும் கல்லில் வடிக்கப்பட்டு இவையனைத்தும் காலத்தைக் கடந்து நிற்கும் சமணர் கல்லோ வியங்களாய், அவற்றை உருவாக்கிய சிற்பிகளின் தனித்திறனுக்கும் சான்றாய் அமைந்துள்ளன என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

**தொகுப்பு - அபிதா மணாளன்**

**குறிப்பு - மேற்காண் சமணசமய கட்டுரை, பல்வேறு சரித்திரப் புத்தகங்கள் மற்றும் குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாதநாராயணன்/ வாதமடக்கி



திப்பிலி

# வாத நோய் குணமாக

## பயன்படும் மூலிகைகளும் மருத்துவப் பயன்பாடுகளும்

■
டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன்
(M.D.C.S) சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்


இந்நோயில் வாதம் தன்னிலையில் மிகுந்து நோயை ஏற்படுத்துகின்றது. சித்த மருத்துவத்தில் 84 வகையான வாத நோய்கள் வகைப்படுத்தப் பட்டுள்ளன. "விரேச்சனத்தால் வாதம் தாழும்" என்பதற்கமைய பேதிக்கு கொடுத்தல் நோயாளியின் உடல் வன்மைக்கு (யாக்கையின் இலக்கணம்) ஏற்ப நெய்ப்புத்தன்மையுடைய பேதி மருந்துகள் வைத்திய ஆலோசனைப்படி எடுக்க வேண்டும்.

மூலிகைகளையே உணவாகவும் எளிய மருத்துவ முறைகளாகவும், பத்தியங்களாகவும் அபத்தியமா கவும் எடுத்துக்கொள்வதால் வாத நோய்க்கான பக்க விளைவுகளற்ற மருத்துவ முறைகளை மேற்கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். இம் மூலிகைகளில் வெளி மருந்துகளான பூச்சு, ஒத்தடம், தொக்கணம், பத்து, ரசியம் போன்ற பல்வேறு வெளி மருந்துகளும், குடிநீர், மாத்திரை போன்ற உள்மருந்துகளும் அடங்கும்.

வாதநோய்களில் இன்று உலகத்தையே ஆட்டிப் படைக்கும் கொடிய வியாதியாக மூட்டுவலி காணப்படுகின்றது. மூட்டு வாதம் எலும்பு மூட்டுக்களை தாக்கி இருதயத்தையும் கடிக்கும் என்பது மருத்துவப் பழமொழி

ஆனால், மனிதன் சர்வசாதாரணமாக நினைத்து வலி ஏற்படும்போது வலி நிவாரண மாத்திரைகளைச் சாப்பிட்டு வலிகளை அமுக்கி விடுவதால் வலி மறைந்து பின் திரும்பவும் எற்படும்.

உண்மையில் வலி என்பது வியாதிஅல்ல. இது ஒரு வியாதியின் அறிகுறியேயாகும். இன்றைய கணினி உலகில் வளரும் சிறார்களின் வாழ்க்கையின் முக்கிய நேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்து செலவிடுவதால் முதுகுவலி, நாரி வலி முதலிய நோய்கள் இளம் வயதிலேயே வர வழிவகுக்கின்றது.





முடக்கொத்தான் கீரை



முருங்கைக் கீரை



சாரணைக் கீரை



பெருங்குறிஞ்சா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆரைக் கீரை


நொச்சிப்பூ


பாவட்டை இலை

எனவே உணவு வகைகளையும் அவற்றை உண்ணும் நெறிமுறைகளையும் பின்பற்றி நாம் நோய்களைப் போக்கிக் கொள்ளலாம்.

மூட்டு வலிகளைக் குறைக்கக்கூடிய உணவு வகைகள்

★ முள்ளங்கி
★ முட்டைக்கோஸ்
★ அறக்கீரை
★ முருங்கைக்கீரை
★ ஆரைக்கீரை
★ சாரணைக்கீரை

### முடக்கொத்தான் கீரை சூப்

| | |
|---|---|
| முடக்கொத்தான் கீரை | - 1 கைபிடி |
| மிளகு | - 10 |
| சுக்குப்பொடி | - ½ தேக்கரண்டி |
| பெருங்காயம் | - ¼தேக்கரண்டி |
| பூண்டு | - 5 பல் |
| பெருஞ்சீரகம் | - தேவையான அளவு |
| சீரகம் | - தேவையான அளவு |
| சின்ன வெங்காயம் | - சிறிதளவு |
| உப்பு | - சிறிதளவு |
| நெய் | - 1 தேக்கரண்டி |

முடக்கொத்தான்கீரையுடன்சீரகம், பெருஞ்சீரகம், வெட்டிய வெங்காயம், பூண்டு, பெருங்காயம், சுக்குப்பொடி, மிளகு ஆகிவற்றைப் போட்டு இரண்டு செம்பு தண்ணீர் விட்டு ஒரு செம்பளவிற்கு வற்றப்பண்ணி பருகவும். அடிக்கடி சாப்பிட்டால் மூட்டுக்களில் வலி, வீக்கம் தீரும்.

### சிறுகீரை சூப்

| | |
|---|---|
| சிறுகீரை | - 1 பிடி |
| வேக வைத்த பருப்பு நீர் | - 1 டம்ளர் |
| கறிவேப்பிலை | - வாசனைக்கேற்ப |
| இஞ்சி | - 1 துண்டு |
| மல்லித்தழை | - சிறிதளவு |
| பூண்டு | - 4 பல் |
| வெந்தயம் | - ½ தேக்கரண்டி |
| சீரகம் | - 1 தேக்கரண்டி |
| மிளகு | - ½ தேக்கரண்டி |
| உப்பு | - தேவையானது |
| நெய் | - 2 தேக்கரண்டி |

சிறுகீரையினை வெட்டி எடுத்து அதனை ஒன்றி ரண்டாக நறுக்கி 2 குவளை நீர் விட்டு கொதிக்க விடவும் 1 குவளையாக வற்றியதும் அதனை வடி கட்டி அதில் அவித்த பருப்பு நீரைக் கலந்து வாணலியில் நெய் ஊற்றி சூடானதும் சீரகம், வெந்தயம் போன்றவற்றைப் போட்டு வெடித்ததும் கறிவேப்பிலை போட்டு தாளிக்கவும். பின்னர் பூண்டு மிளகு சேர்த்து வதக்கவும். கலந்து வைத்த கலவையை ஊற்றி இறக்கவும். இந்த சிறுகீரை சூப்பினை வாரம் 2 நாட்கள் ஒரு கப் வீதம் பருகி வந்தால் இரசாயன மருந்துகளால் உருவாகும் நச்சுத் தன்மை நீங்கும். சிறு நீரகத்தைச் சீராக இயங்கச் செய்கின்றது. மூட்டுவலி வாதநோய்கள் குணமாகும்.

### முள்ளங்கி சப்பாத்தி ரொட்டி

| | |
|---|---|
| முள்ளங்கி | - 100 கிராம் |
| கோதுமை மா | - 250 கிராம் |
| உப்பு | - தேவையான அளவு |
| செத்தல் மிளகாய் | - 5 |
| சீரகம் | - சிறிதளவு |

முள்ளங்கியை சிறு துண்டாகச் சீவிக் கொள்ளவும். மிளகாய் சீரகத்தையும் விழுதாக அரைத்துக் கொள்ளவும். இவையனைத்தையும் கோதுமை மாவோடு சேர்த்து ரொட்டிக்கு மா பிசையும் பதத்தில் பிசைந்து கொள்ளவும் 2 மணிநேரம் கழித்து ரொட்டி, சப்பாத்தி செய்து சாப்பிடவும். இதனால் சிறுநீர் நன்கு வெளிப்படச் செய்யும். மூட்டுக்களில் ஏற்படும் வீக்கமும் தணிந்து, வலியும் குறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முட்டைக்கோஸ்



முள்ளங்கி



சிறுகீரை

## உட்கொள்ளக்கூடிய கை மருந்துகள்

- நொச்சிப்பூ, பூண்டு, மிளகு, இலவங்கம், சேர்ந்து அரைத்து தினமும் காலை 1 முதல் 2 கிராம் வரை சாப்பிட்டுவர மூட்டு வலி தீரும்.
- மதிய வேளை கீரையைச் சாப்பாட்டில் சேர்த்து வர மூட்டுவேதனை தீரும்.
- உளுந்தைப் பொரித்து இடித்துப்பொடி செய்து பனை வெல்லத்துடன் உண்ண முதுகுவலி தீரும்.
- வாதநிவாரணி இலைச்சாறு 10-20 ml வரை உணவுடன் சேர்த்துவர மூட்டுவலி தீரும்.
- சுக்கு, காய்ந்த வில்வமிலை சேர்த்து பொடிசெய்து 1 தொடக்கம் 2 கிராம் வெந்நீருடன் எடுத்துவர மூட்டுவலி தீரும்.
- சிற்றாமுடி வேர், அமுக்கிராவேர் சேர்த்துப்பொடி செய்து 1 - 2 கிராம் வெந்நீருடன் எடுத்துவர மூட்டுவலி தீரும்.
- சுக்கு, மிளகு, திப்பலி சமஎடை சேர்த்து தூள் செய்து வெல்லம், நெய் சேர்த்து உண்ண முதுகு வலி தீரும்.
- நொச்சித் தளிர்களை குடிநீராக்கி 30 ml வீதம் காலை, மாலை 7 நாட்கள் குடித்துவர மூட்டு வலிகள், உடல்வலி குணமடையும்.
- அத்தி மரத்துப் பாலை மூட்டு வலிகளுக்கு பத்துப் போட்டால் மூட்டு வலி குணமாகும்.
- வேப்பெண்ணெய் தேய்த்து குளித்து வந்தால் வாத கசிவுகள் (வலிப்புகள்) தீரும்.
- காலை எழுந்ததும் 1 மேசைக்கரண்டி வெங்காயச் சாறும் மே.க தேனும் கலந்து அருந்தலாம். இது இரத்தத்தைச் சுத்திகரித்து இரத்த ஓட்டத்தைச் சீராக்கி, வலி ஆகியவற்றைக் குறைக்கும்.
- முள்ளங்கி இலைச்சாறு 5ml நாள்தோறும் 3 வேளை சாப்பிட்டு வந்தாலும் எளிய வாத நோய்கள் குணமடையும்
- கருஞ்சீரகம் 60 கிராம் 500 ml நல்லெண்ணெயில் கொதிக்க வைத்து ஆறியதும் வடிகட்டி, கொள் கலனில் சேகரித்து வைத்துக் கொள்ளவும். இலேசாக சூடேற்றி பாதிக்கப்பட்ட இடுப்பு வலி, மூட்டுவலி போன்றவற்றிக்கு பூசலாம்.
- நொச்சி இலை, பாவட்டை இலை, முத்தாமணக்கு இலை, பருத்தியிலை, வாதமடக்கி இலை இவைகளை சிறுகச் சிறுக அரிந்து 3 சொட்டுத்துளி வேப்பெண்ணெய் விட்டு பொட்டணியாகக் கட்டி நீராவியில் சூடாக்கி வலியுள்ள இடங்களுக்கு ஒத்தடம் கொடுக்கலாம்.
- சரக்கொன்றை வேர்ப்பட்டை 100 கிராம் 1 லீற்றர் நீரில் போட்டு குடிநீர் காய்ச்சி 200ml காலை, மாலை குடித்து வர வாதநோய்கள் குணமடையும்.
- எண்ணெய்க் குளியல், மருந்து கலந்த எண்ணெய் நிரம்பிய தொட்டியில் மூழ்கியிருத்தல் போன்ற சிகிச்சைகளையும் மருத்துவ ஆலோசனையுடன் மேற்கொள்ளலாம்.
- இதேபோல் வெள்ளுளுந்து என்று சொல்லப் படும் யாழ்ப்பாணத்தில் அதிகமாகக் காணப்படக் கூடிய மூலிகையினை வேருடன் எடுத்து உலர்த்தி, பொடித்து 2 கிராம் அளவு காலை 1 , மாலை 2 வேளையும் பால் அல்லது வெந்நீருடன் 48 நாட்கள் எடுத்துவர வாதநோய்கள், வாத நோய்களில் ஏற்படும் வலி என்பன நீங்கும்.
- பனிச்சைப் பழத்தை ஒரு துணியில் தடவி வலியுள்ள மூட்டுக்களில் பத்து மாதிரிக் கட்ட மூட்டுவலி தணியும்.
- கீரை வகைகளில் அறக்கீரை மூட்டுவலி, வாத நோய்களைக் குணப்படுத்துவதில் சிறந்தது. அதேபோல் வாதநாராயணன், சாரணைக்கீரை, பெருங்குறிஞ்சா இலை போன்றவற்றை வறையாகச் செய்தும் பயன்படுத்தலாம்.
- கருங்குருவை அரிசிச்சோறு சாப்பிட்டுவர உடல் நோ, வாதம் நீங்கும்.
- பொதுவாக நெல்லை அவித்து காயவிட்டு குற்றிய புழுங்கல் அரிசிச்சோறு, உண்டுவர நோய்கள் வராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறந்தோரின் ஆவிகளுக்கு அமைதியளிக்கும் ஒபொன் கொண்டாட்டம்



ஜப்பானின் மிகச் சிறந்த மரபுகளில் ஒன்றாக அமைவது ஒபொன் (Obon) கொண்டாட்டமாகும். காலஞ்சென்றவர்களை நினைவு கூர்ந்து,அவர்கள் தம் ஆவிகளுக்கு ஆறுதலும் கௌரவமும் அளிக்கும் வகையில் பிரார்த்தனைகளிலும், உணவுப்படையல் கொண்டாட்டங் களிலும் ஈடுபட்டு அமைதி அளிக்கும் விடயங்கள், உலகில் பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் நடைபெறுகிறது. அவ்விதமாக காலஞ்சென்ற தமது முன்னோர்களின் ஆவிகள், ஓய்வுநாள் ஒன்றில், குடும்பத்தவர்களுடன் ஒன்றிணையும் பொருட்டு தேடி வருவதாக ஜப்பான் மக்கள் நம்புகின்றனர். இக்கொண்டாட்டம் ஒபொன் அல்லது பொன் (bon) என அழைக்கப்படுகிறது.

ஜப்பானின் ஒவ்வொரு பிராந்தியங்களையும் பொறுத்து, கொண் டாட்டங்களில் சிற்சில வேறு பாடுகள் காணப்படினும், நாடெங்கிலும் அனுஷ்டிக்கப்படுகின்ற ஒரு மிக முக்கியமான கலாசார கொண்டாட் டமாக அமைகின்றது. அதுவுமின்றி, ஜப்பான் நாட்டுக்கு வெளியே, ஆர்ஜென்டினா, பிரேஸில், கொரியா, மலேஷியா, அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளிலும் உள்ள ஜப்பானிய சமூகங்களினால், ஆர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றன. சீனாவிலும் இக்கொண் டாட்டம் முக்கியமானதொன்றே.

பௌத்தமத வழக்கங்களில் ஒன்றாக, முகிழ்த்தெழுந்த ஒரு மரபாக விளங்குவதே 'ஒபொன்' கொண்டாட்டமாகும். ஜப்பானின் பிரதான மதங்களில் ஒன்றாக விளங்குவது பௌத்தம் என்பது குறிப்பிடத் தக்கது. குடும்பங்கள் ஒன்று கூடும் ஓய்வுநாளாக விளங்கும் இக்காலத் தில், மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி, தமது முன் னோரின் ஆவிகள், தமது குடும்பத்தவர் களிடம் மீள்விஜயம் செய்யும் காலத்தில், முன்னோர்களின் கல்லறைப் பகுதிகளைத் துப்புரவு செய்து, கொண்டாட்டங்களை மேற்கொள்வார்கள். வருடத்திற்கு ஒரு முறை, பெரும்பாலும் ஆகஸ்ட் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது 7ஆவது சந்திர மாதத்தின் 1 ஆம் திகதியில் இக்கொண்டாட்டம் கலாசார ரீதியாக கொண்டாடப் படுகின்றது. நாட்காட்டியின் படி, இத்தினம் வேறு பட்ட தினங்களிலும் வரலாம்.

(மூன்று நாட்கள் இக்கொண்டாட்டம் கொண்டா டப்படும்.) ஒவ்வொரு பிராந்தியத்திற்குமேற்ப, கொண்டாட்ட திகதியிலும், கொண்டாட்ட முறைகளிலும், சிறு வித்தியாசங்கள் ஏற்படும். இந்நாட்களில் ஜப்பானின் முக்கியமான பகுதிகள் மிகவும் பரபரப்பாகவும் மக்களது அதிகரித்த போக்குவரத்து நடவடிக்கையின் காரணமாக மிகவும் உற்சாகமாகவும் விளங்கும்.

500 வருட காலப் பழைமை கொண்ட இம்மரபுக் கொண்டாட்டத்திற்கு ஒரு வரலாறு கூறப்படுகிறது. இது இந்தியாவில் இருந்து தோன்றிய விடயம் எனினும், பின்னர் கலாசார ரீதியாக சீன விளக்கங் களுடன் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இக்கதை பௌத்தத்தின் உல்லம்பன சதுக்கத்தில் உள்ள ஒன்றாகும்.

மௌத்கல்யாயன என்பவர் ஒரு பௌத்த பிக்கு வாகும். பிராமண இளைஞரான இவர், பின்னர் பௌத்த மதத்தினைத் தழுவித் துறவியானார். புத்தர் பெருமானின் பிரதம சீடர்களில் ஒருவராக விளங்கிய இத்துறவி, ஏனைய பௌத்த துறவி களிடம் இல்லாதவகையில், அதீத யோக சக்திய டைந்தவராக விளங்கினார். பிரதம சீடராகத் தீட்சை பெற்ற பின், காலமாகிவிட்ட தனது தாய் தந்தையைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து, தமது ஞானக் கண்கள் மூலம், மரணத்தின் பின் அவர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் எங்கு பிறந்துள் ளார்கள்? என நோக்க விளைந்தார். அவருடைய ஞானப் பார்வையின் மூலம், அவரது தந்தை மோட்ச கதி அடைந்து, தெய்வ அனுக்கிரகத்துடன் வாழ்வதைப் பார்த்தார்.

ஆனால் அவரது தாயாரோ, மிகத் தாழ்ந்த கதியில், கடும் வேதனையில் தவிப்பதைப் பார்த்தார். தாய் பட்டினிப் பிசாசின் உருவத்தைப் பெற்று ('பிறிதா' எனப்படுவது) மிகவும் மெலிந்ததான, உடையக் கூடிய தன்மையைக் கொண்ட தொண்டை அமைப்பைக் கொண்டிருந்ததினால், உணவு ஏதும் உட்செல்ல முடியாத நிலை இருந்தது. இதனால் அந்த ஆவி, எந்த நேரமும் பசியால் துடித்தது. அதற்கு மிகப் பெரிய வயிறு. அது உணவின்றித் துவண்டு கொண்டிருந்தது.

காலஞ்சென்ற தந்தை விட்டுச் சென்ற பெரும் செல்வத்தில், அவள் பேராசை கொண்டவளாக இருந்தாள். பௌத்த பிக்குகள் வந்தால், அவர்களை அன்புடன் உபசரித்து உணவளிக்கும்படி தந்தை அவளிடம் கூறியிருந்தார். ஆனால் அவள் தனது பொருளாசை காரணமாக, அவ்விதமாக, ஏதும் இரக்கத்தைக் காட்டவில்லை. பொருளையும் காட் டவில்லை. இந்தக் குணத்தின் காரணமாக அவள் நரக உலகிற்கு தள்ளப்பட்டிருந்தாள்.

மௌத்கல்யாயன இதனால் பெரும் கவலை கொண்டவரானார். புத்தரிடம் சென்று, ஆவியாக உழலும் தனது தாயை எவ்விதம் அக்கதியில் இருந்து மீட்பது? என்று கேட்டார்.

பிதிர்களுக்கு உணவை அளிப்பதன் மூலம் தாயின் துன்ப நிலையைத் தீர்க்க முடியும் என புத்தர் தெரிவித்தார். எப்படி உணவளிப்பது என்பது குறித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புத்தர் விளக்கமும் கொடுத்தார். சுத்தமான தட்டு ஒன்றில் உணவுப் பருக்கைகளை வைத்து அந்த உணவுக்கு ஆசீர்வாதம் வழங்கும் வகையில் ஏழுதடவை மந்திரம் ஒன்றினைக் கூற வேண்டும். பின் இறந்தவர்களை அழைக்க கைவிரல்களால் சொடுக்கி சத்தம் ஏற்படுத்த வேண்டும். இறுதியாக அந்த உணவை சுத்தமான நிலத்தில் தள்ளி விட வேண்டும். இவ்விதம் செய்வதினால் 'பிதிர்களின் பசி நீங்கும்' எனக் கூறினார்.

மௌத்கல்யாயன இவ்விதமான காரியத்தைச் செய்ததின் பயனாக அவரது தாய் ஒரு கனவானின் குடும்பத்தில் நாயாக மறுபிறவி பெற்றார். இருப்பினும் தனது தாயார் மனிதப்பிறவி எடுக்க கருணைகாட்ட வேண்டும் எனவும் சீடர் புத்தரிடம் கேட்டார். அதற்கு புத்தர் சந்திர நாட்காட்டியின் ஏழாவது மாதத்தின் 1 ஆம் நாளுக்குப் பின் ஒரு நாளை நியமித்து, அன்றைய நாள், ஐந்நூறு பௌத்த பிக்குகளுக்கு உணவும் உடையும் வழங்குமாறு கூறினார். இப்புண்ணிய தானத்தின் பயனாக அச்சீடரின் தாயார் மனிதப்பிறவியைப் பெறும் பேற்றினைப் பெற்றார்.

அத்துடன் தாய் காட்டிய அன்பு மற்றும் அவரது தன்னலமற்ற செயற்பாடுகள் தனக்காகச் செய்த தியாகங்கள் ஆகியவற்றையும் சீடர் பார்த்தார். தாயார் விடுதலை பெற்றதினால் பெருமகிழ்ச்சி கொண்ட அவர், தாயின் தியாகங்கள் குறித்து நன்றியுணர்வு மேலிட்டவராக, சந்தோஷத்தில் நடனமாட ஆரம்பித்தார்.

இவரின் இந்த மகிழ்ச்சி ஆட்டத்தில் இருந்துதான் பொன் ஒடோரி (Bou Odori) அல்லது பொன் நடனம் (Bou dance) இறந்தவர்கள் செய்த தியாகங்களை நன்றியுடன் நினைந்து ஆடும் வகையில் ஆரம்பமானது.

வழமையாக ஆகஸ்ட் மாத நடுப்பகுதியில் பொன் கொண்டாட்டம் இடம் பெறுகின்றது. இறந்தவர்களின் ஆவிகளை வரவழைப்பது என்ற வகையில் "பொன் ஒடோரி' இடம் பெறுகின்றது. இது இடத்துக்கு இடம், பிராந்தியத்துக்குப் பிராந்தியம் இங்கு வாழும் மக்களது இயற்கைச் சூழல், தொழில் என்பவற்றைப் பொறுத்து, சிறிது வேறுபட்டு ஆற்றப்படும் வகையாக விளங்குகின்றது.

ஒபொன் கொண்டாட்ட நாட்களில் வீடுகளின் முன்னால், வழமையான விளக்குக் கூடுகள் தொங்க விடப்படும். நடனங்கள் ஆடப்படும். இறந்தவர்களின் ஆவிகளுக்காக வீடுகள், ஆலயங்கள், மயானப் பகுதிகள் ஆகியவற்றில் உணவு மற்றும் பொருட்கள் படைக்கப்படும். ஜப்பானில் பலரும், இந்நாட்களில் மயானத்துக்கு விஜயம் செய்து, குறித்த இடத்தைச் சுத்தம் செய்து மயானக் கல்லைக் கழுவி, அர்ப்பணிப்புகளைச் செய்வர். அக்காலம் கோடைகாலம் ஆனதினால் மெல்லிய ஆடைகளையே அவ்வேளை யாவரும் அணிவர்.

கொண்டாட்ட நாட்களின் போது குடும்பங்கள் இறந்த உறவினர்களின் ஆத்மாக்களுக்காக உணவுகளைப் படைத்து வணங்குவர். கொண்டாட்டம் முடிவடைந்ததும் ஆவிகளை, அவை தாமிருந்து வந்த இடத்திற்குத் திருப்பி அனுப்பும் முகமாக மீண்டும் விளக்குக் கூடுகள் தொங்கவிடப்படும். நெருப்பும் கொளுத்தப்படும். சில வேளைகளில் மெழுகுவர்த்தி ஏற்றப்பட்ட நிலையில் விளக்குக் கூடுகள் நீரில் மிதக்க விடப்படும். மெழுகு வர்த்திகள் முன்னோரின் ஆத்மாவை புலப்படுத்துவதாக அமையும் என நம்பப்படுகிறது.

- கங்கா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருச்செந்தூர் முருகன் ஆலயம்

**முருகனுக்குரிய ஆறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடு எனப் போற்றப்படும் திருத்தலம்**

தமிழ் நாடு, தூத்துக் குடி மாவட்டத்தில், திருச் செந்தூரின் கடற்கரையோரத்தில், கோவில் கொண் டெழுந்தருளி அருள்பாலிப்பவர், திருச் செந்தூர் முருகன் எனப் போற்றித் துதிக்கப்பெறும் அருள் மிகு சுப்பிரமணிய சுவாமி ஆவார். எம்பெருமான் குன்றுதோறாடும் பெருமானாக விளங்குகின்ற போதும் திருச்செந்தூரில் அவர் கடற்கரையில் கோவில் கொண்டெழுந்தருளியுள்ளார். முருகனுக் குரிய ஆறுபடை வீடுகளில், இரண்டாம் படை வீடு என இத்தலம் போற்றப்படும் சிறப்புமிக்கது.

இரண்டாயிரம் ஆண்டுகள் வரை பழைமை வாய்ந்த இக்கோயில், சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரத் திலும் குறிப்பிடப் படுகின்றது.

தூத்துக்குடி மாவட்டத்தில், மன்னார் வளை குடாவை அண்டி அமைந்துள்ள இக்கோவில், சென்னையில் இருந்து 600 கிலோமீட்டர் தொலை வில் உள்ளது. முன்னர் ஒரு காலத்தில் இக் கோவில் அமைந் துள்ள இடம், திருச்சீரலைவாய் என அழைக்கப்பட்டதாக கூறப் படுகிறது. தமிழகத்தில் முதன்முதலில் நாகரிகம் தோன்றிய நகரங்களுள் திருச்செந்தூரும் ஒன்றாகும் எனக்கூறுவர். இவ்வாலயத்தின் தலவரலாற்றினை இனி நோக்கலாம்.



சூரபத்மன் என்னும் அசுரனால் பெரும் துன்பத்திற்கு ஆளான தேவர்கள், சிவபெருமானிடம் அவனை அழிக்கும்படியாக வேண்டினர். அவர்களது வேண்டுதலை ஏற்ற சிவபெருமான், தமது கண்களில் இருந்து ஆறு பொறிகளை உண்டாக்கினார். அப்பொறிகளில் இருந்து முருகப் பெருமான் தோன்றினார்.

உலகேஸ்வரனான தந்தையின் கட்டளையை ஏற்று, சூரபத்மனை அழிக்க முருகவேள் இவ்விடம் வந்தார். இவ்வேளையில், தேவர்களின் குருவான வியாழபகவான், முருகப் பெருமானின் தரிசனம் வேண்டி, இவ்விடத்தில் தவமிருந்தார். அவருக்கு காட்சி நல்கிய முருகப்பெருமான் அவ்விடத்தில் தங்கினார். அவ்வேளை அவர் மூலமாக அசு ரர்களின் வரலாற்றையும் தெரிந்துகொண்டார். தனது படைத் தளபதியான வீரபாகுவை, சூரபத்மனிடம் தூது அனுப்பினார். ஆனால் சூரபத்மன் எதனையும் கேட்கவில்லை. பின்பு, முருகப்பெருமான் தன் படைகளுடன் சென்று சூரபத்மனை வதம் செய்தார். முருகப்பெருமானோடு போரிட்ட படைவீரர்கள் அய்யனார்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.

வியாழபகவான், முருகனிடம் தனக்குக் காட்சிதந்த இந்த இடத்தில் எழுந்தருளும்படி வேண்டி னார். அதன்படி முருகப்பெருமான் அவ்விடத்தில் தங்கினார். பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வியாழபகவான், விஸ்வ கர்மாவை அழைத்து இங்கு கோவில் எழுப்பினார். திருச்செந்தூர் கோவில் வடிவம், பிரணவ மந்திரமான ஓம் எனும் வடிவில் அமைந்துள்ளது.

பழந்தமிழ் இலக்கியங்களில் சேயோன் எனக் குறிப்பிடப்படுகின்ற முருகப்பெருமான், இங்கு சூரனை வெற்றி கொண்டு ஆட்கொண்டதால், இவர் செயந்திநாதன் என அழைக்கப்பெற்றார். பிற்காலத்தில் செந்தில்நாதர் என இப்பெயர் மருவிற்று. தலமும் திருஜெயந்திபுரம் (ஜெயந்தி வெற்றி) என அழைக்கப்பெற்று, பின்னர் திருச் செந்தூர் என மருவியது.

150 அடி உயரம் கொண்ட இக்கோயிலின் கோபுரம் ஒன்பது தளங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. முருகப் பெருமான் சூரனை ஆட் கொண்ட பின்பு தனது வெற்றிக்கு நன்றி தெரிவிக் கும் விதமாக சிவபூஜை செய்தார். இந்தக் கோலத் திலேயே முருகன் வலது கையில் தாமரை மலருக்கு அருளுகிறார். தலையில் சிவயோகி போல ஜடாம குடமும் தரித்திருக்கிறார். இவருக்கு இடதுபின்புற சுவரில் ஒரு லிங்கம் இருக்கிறது. இவருக்கு முதல் தீபாராதனை காட்டிய பின்னரே முருகனுக்கு தீபாராதனை நடக்கும். சண்முக சந்நிதியிலும் சுவாமிக்குப் பின்புறம் லிங்கம் இருக்கிறது. இவ்விரு லிங்கங்களும் இருளில் உள்ளதால் தீபாராதனை ஒளியில் மட்டுமே காணமுடியும்.

முருகன் சந்நிதிக்கு வலப்புறத்தில் பஞ்சலிங்க சந்நிதியும் இருக்கிறது. இவர்களை மார்கழி மாதத் தில் தேவர்கள் தரிசிக்க வருவதாக ஐதிகம். சிவனுக்குரிய வாகனமாக நந்தியும் முருகனுக்கு எதிரே இந்திர தேவ மயில்களும் மூலஸ்தானம் எதிரே உள்ளன.

வெளியில் இருந்த படியே முருகப் பெருமானைத் தரிசனம் செய்யும்போது சிவலிங்க தரிசனம் செய்ய இயலாது. மூலவர் முருகனின் இடதுபுறம் உள்ள சிறு வாயில் வழியே உள்ளே நுழைந்து சுற்றி வலப்புறம் வந்து பாதாள பஞ்சலிங்க தரிசனம் செய்ய வார நாட்களில் இயலும்.

சந்நிதியின் மேற்குத் திசையில் ராஜ கோபுரம் இருக்கிறது. முருகப் பெருமான் இத்தலத்தில் கடலைப் பார்த்தபடி கிழக்கு நோக்கிக் காட்சி அளிக்கிறார். பிரதான கோபுரம் சுவாமிக்கு எதிரே அதாவது கிழக்குத் திசையில்தான் அமைந்திருக்க வேண்டும். ஆனால் அப்பகுதியில் கடல் இருப்ப தால் மேற்கில் கோபுரம் கட்டப்பட்டுள்ளது.

முருகன் மூலஸ்தானத்தில் பீடத்தை விட



இக்கோபுரவாசல் உயரமாய் இருப்பதால் எப்போ தும் அடைக்கப்பட்டே இருக்கிறது. கந்தஷஷ்டி விழாவில் முருகன் திருக்கல்யாணத்தின் போது ஒருநாள் மட்டும் இவ்வாசல் திறக்கப்படும். அவ்வேளையில் பக்தர்கள் உள்ளே செல்ல அனுமதி கிடையாது.

இங்கு வீரவாகு தேவர் காவல் தெய்வமாக உள் ளார். இதனால் இத்தலத்துக்கு வீரவாகு பட்டினம் என்றொரு பெயர் உண்டு. வீரவாகு தேவருக்கு பூசை நடத்தப்பட்ட பின்பே மூலவரான முருகனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தலத்தில் சண்முகர், ஜெயந்தி நாதர், குமர விடங்கர், அலைவாய் பெருமான் என நான்கு உற்சவர்கள் உள்ளனர். இவர்களில் குமர விடங்கரை மாப்பிள்ளை சுவாமி என அழைக்கிறார்கள்.



பூசை நடத்தப்படுகிறது. இவ்வாலயத் தின் இடது புறத்தில் வள்ளிக்குகையுள்ளது. இந்தக் குகைக்கு முன்னுள்ள சந்தன மலையில் தொட்டில் கட்டினால் குழந்தைப்பாக்கியம் விரைவில் கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

இத்தலத்தில் சண்முகர், ஜெயந்தி நாதர், குமர விடங்கர், அலைவாய் பெருமான் என நான்கு உற்ச வர்கள் உள்ளனர். இவர்களில் குமர விடங்கரை மாப்பிள்ளை சுவாமி என அழைக்கிறார்கள்.

இந்த ஆலயத்துக்குச் செல்லும் வழியில் தூண்டுகை விநாயகர் கோவில் உள்ளது. இந்த விநாயகரை வணங்கிய பின்னர்தான் முருகப் பெருமானை வணங்கிச் செல்ல வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

முருகத்தலங்களில் கந்தசஷ்டி விழா ஆறு நாட் களே நடக்கும். சிலதலங்களில் ஷஷ்டிக்கு மறுநாள், முருகன் திருக்கல்யாணத்துடன் சேர்த்து ஏழு நாட்கள் நடத்துவர். திருச்செந்தூரில் கந்தஷஷ்டி முதல் ஆறு நாட்கள் சஷ்டி விரதம், சூரசம்ஹாரம் ஏழாம் நாளில் முருகன் தெய்வானை திருக்கல் யாணம், அடுத்த 5 நாட்கள் சுவாமி திருக்கல்யாண கோலத்தில் ஊஞ்சல் சேவை என இவ்விழா 12 நாட்கள் கொண்டாடப்படுகிறது.

தமிழ் இலக்கியங்களில் திருச்செந்தூர் ஆலைவாய், சீரலைவாய் என்கின்ற பெயர்களில் போற்றப் பட்டுள்ளது. முருகன் தீம்புனல் அலைவாய் (களவு சூத்.23) எனத் தொல்காப்பியமும். வெண்டலைப் புணரி அலைக்குஞ் செந்தில் நெடுவேல் நிலை இய காமர் வியன்துறை (பாடல் 55) என புறநாநூறும், திருமணி விளக்கினலை வாய்செரு மிகுசே எய் (பாடல் 266) என அகநாநூறும், உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர் அலைவாய் என திருமுருகாற்றுப் படையும், சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும் என சிலப்பதிகாரமும் போற்று கின்றன. இக்கோவில் குறித்தும், முருகப் பெருமான் குறித்தும் அருணகிரிநாதர் பாடிய பாடல் பின் வருமாறு:

**அந்தண் மறை வேள்வி காவற்கார செந்தமிழ்**
**சொல் பாவின் மாலைக்கார அண்டரூபக்**
**கார சேவற்கார முடிமேலே**
**அஞ்சலி செய்வோர்கள் நேயக் காரகுன்றுருவ**
**ஏவும் வேலைக்கார அந்தம் வெகு வான ரூபக்கார**
**எழிலான**
**சிந்துரமின் மேவு போகக் காரவிந்தை குற**
**மாதுவேளைக் கார செஞ்சொலடி யார்கள் வாரக்**
**கார எதிரான**
**செஞ்சமறை மாயு மாயக் காரதுங்கரண**
**சூர சூறைக் கார செந்திநகர் வாழு மாண்மைக் கார**
**பெருமாளே**

திருநாவுக்கரசு நாயனாரின் (அப்பர்) தேவாரப் பாடல் பின்வருமாறு அமைகிறது.

**கள்ளிமுது காட்டில் ஆடிகண்டாய்**
**காலனையும் மகாலாற் கடந்தான் கண்டாய்**
**புள்ளியுறை மானின் தோலான் கண்டாய்**
**புலியுரிசேர் ஆடைப்புனிதன் கண்டாய்**
**வெள்ளி மிளிர் பிறை முடி மேற் சூடி கண்டாய்**
**வெணீற்றான் கண்டாய் நம் செந்தில் மேய**
**வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்**
**மறைக்காட்டுறையும் மணாளன்தானே**

**-ஜெனி-**

[நன்றி இணையம்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE MOST TRUSTED TRANSACTIONS
## நம்பிக்கையான கைமாற்றத்துக்கு

REAL ESTATE

LIVING CITY

THE MOST TRUSTED TRANSACTIONS

வீண் அலைச்சலின்றி உங்கள் இருப்பிடத்திலிருந்தவாறே உங்கள் வசதிக்கு தேவையான வீட்டையும் நிலத்தையும் வர்த்தக நிலையத்தையும் விற்பதற்கு, வாடகைக்கு விடுவதற்கு, வாடகைக்கு பெறுவதற்கு, வாங்குவதற்கு, குத்தகைக்கு கொடுப்பதற்கு / எடுப்பதற்கு இன்றே அழையுங்கள்.

**எமது சேவைக்கான குறைவான கட்டணமே அறவிடப்படும். மேலதிக கட்டணங்கள் எதுவும் அறவிடப்பட மாட்டாது.**

**Hotline: 077 987 59 59 | 075 987 59 59**

| விற்பனைக்கு (SALE) | வாடகைக்கு கொடுக்க / எடுக்க (RENT) | வாங்குவதற்கு (BUY) | குத்தகைக்கு கொடுக்க / எடுக்க (LEASE) |
|---|---|---|---|

**No. A 14, NHS, Thimbirigasyaya Road, Colombo 05.**

**E-mail :** livingcity.srilanka@gmail.com | **Web :** www.livingcity.com

**Facebook :** livingcitysrilanka | **Twitter :** livingcitysrilanka


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உல்லாசப் பயணத்துறையில் பெயர் பெற்ற

# பூகெட்

## தாய்வானின் மிகப்பெரும் தீவு

தாய்வானின் மிகப்பெரும் தீவாக விளங்குவது பூகெட் (PHUKET) ஆகும். சுமார் 48 கிலோமீற்றர் நீளமும் 21 கிலோ மீற்றர் அகலமும் கொண்ட இத்தீவு தெற்கு தாய்வானின் மேற்குத் திசையில் அந்தமான் கடற்கரையைப் பார்த்தவாறு அமைந்திருக்கிறது. இது சிங்கப் பூரின் பரப்பளவைக் கொண்டது எனக் கணிப்பிடப்படுகிறது.

தாய்லாந்தின் இந்து சமுத்திரக் கரையோரத்தின் அந்தமான் கடலில் பாங்ஹொக்கிற்கு தெற்காக 862 கிலோ மீற்றர் தூரத்தில் காணப்படும் பூகெட்தீவு முன்னர் தகரம் மற்றும் இறப்பர் வியாபாரத்தின் மூலம் பெரும் வருமானத்தைப் பெற்று செல்வச்சிறப்புடன் விளங்கியது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான புராதன வர்த்தகப் பாதையில் உள்ள இத்தீவு வெளிநாட்டு வர்த்தகர்களின் கப்பல் குறிப்புக்களில் அனேகமாக குறிப்பிடப்படும் ஒன்றாகவும் விளங்கியுள்ளது.

முன்னர் பூகெட் தாலங் என அழைக்கப்பட்டது. மேற்கத்தைய ஆவணங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறிப்புக்களில் ஜங்சிலோன் அல்லது ஜங்க்சிலோன் என குறிப்பிடப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீவின் மிகப்பெரும் புத்தர்சிலை

சமீபத்தில் சில காலமாக பூகெட்டின் பிரதான வருமானத்திற்குரிய வழியாக உல்லாசப் பயணத் துறை விளங்குவதனால் தாய்லாந்தின் மிகச் செல்வம் கொழிக்கும் மாகாணமாகத் தற்போது விளங்குகின்றது. தாய்லாந்தினையும் விட இங்கு பொருட்களின் விலை சற்று அதிகமாகவே காணப்படுகின்றது.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட சுனாமி காரணமாக இந்தீவு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டபோதும் தற்போது அதன் பாதிப்பின் தடயங்கள் எதுவும் காணப்படவில்லை. ஒரு பிரயாண முக்கியத்துவமான இடமாக பூகெட் பெயர் பெற்றிருக்கின்றது. பெரும்பாலான கடற் கரைகள், மேற்குப்பகுதியில் காணப்படுகின்றன. பூகெட்டின் நகரம் தென் கிழக்கு பகுதியிலும், விமான நிலையம், வடக்கிலும் உள்ளன.

வருடம் முழுவதும் பூகெட் உஷ்ணமும், ஈரப்பதனும் கொண்டதாகக் காணப்படுகின்றது. மார்ச் மாதத்தில் இருந்து மே மாதம் முற்பகுதி வரையான காலப்பகுதி உஷ்ணகாலம் என்றே கருதப்படுகின்றது. மே மாதத்தில் இருந்து ஒக்டோபர் வரையிலான கோடை பருவப் பெயர்ச் சிக்காலத்தில், காலை வேளையிலும், மாலை வேளையிலும் கூட வெய்யிலும் வெளிச்சமுமாக இருப்பினும் மாலை வேளைகளில் மழை பெய்து கீழே நீர் பாய்ந்தோடிவிடுவதாகக் காணப்படும். நவம்பரில் இருந்து பெப்ரவரி வரையிலான காலப்பகுதியை உள்ளூர்வாசிகள் குளிர்மையான காலம் எனக் கருதுகின்றனர். அப்போது காலநிலை சகிக்கக்கூடிய ஒன்றாகத் தோன்றும். உஷ்ணத்திலும் மழைவீழ்ச்சி வேகத்திலும் புளோரிடாவின் கோடைகால சீதோஷ்ணத்துடன் ஒப்பிடக்கூடியதாக இருக்கும். மேற்கு கடற்கரைகளில் நீரலைவினை (Surtina) மேற்கொள்ள முடியும்.

தாய்லாந்தின் உள்ளூர் மக்கள், தாய்சீனர்கள், மலே இனத்தவர்கள், கடல் குறவர்கள் எனப் பலரும் பூகெட்டில் வாழ்கிறார்கள். கிராமப் பகுதிகளில் வாழும் பெரும்பான்மையான மக்கள் முஸ்லிம்களாவர். மாகாண நகரத்திற்கு வெளியில் கிராம மக்கள், தெற்கு மொழியை அதிகம் சார்ந்து பேசுவதினால், தாய் மக்களினாலேயே அதனைப் புரிந்துகொள்வது கஷ்டம் எனக் கூறுவர்.

கடந்த தசாப்தத்தில் மாகாணப் பொருளாதாரம் பெரும் வளர்ச்சியைக் கண்டுள்ளதால், பெரும் பாலான இளையோர் பாங்ஹொக் வாசிகள் போல வாழ்கின்றனர். மொத்தமாகக் கவனிக்கும் போது பூகெட்டின் நகர்ப்புறம் சார்ந்த சீன - தாய் மக்களது வாழ்வியல், அவர்களது பந்துக்களாகிய பாங்ஹொக் மக்களது வாழ்வியலை ஒத்திருக்கின்றது.

பூகெட்டின் பிரதான பாதை 402 இல் இரு வீராங்கனைகளின் உருவச் சிலைகளின் நினைவைக் காட்டும் முத்திரை காணப்படுகிறது. 1785 ஆம் ஆண்டில் ஒன்பது இராணுவப் படைகளின் போர்களின் போது பர்மியர்களின் ஆக்கிரமிப்பில் இருந்து மாகாணத்தைக் காப்பாற்றிய சகோதரிகளான தோ தெப் க்ராசற்றி மற்றும் தோ சி சுன்தோன் ஆகியோரை அம்முத்திரை நினைவு படுத்துகின்றது. 1785 இல் பர்மியத் துருப்புகள் பூகெட்டை தாக்க தயாராகின. அதன் இராணுவ ஆளுநர் அவ்வேளை காலமாகியிருந்ததினால் பூகெட்டைக் கைப்பற்ற அது பொருத்தமான தருணம் என அவர்கள் எண்ணினர்.

ஆனால் இதனை அறிந்து கொண்ட காலஞ்சென்ற ஆளுநரின் மனைவி குன் ஜன் மற்றும் அவளது சகோதரி குன் மூக் ஆகியோர் தீவின் பெண்கள் எல்லோரும் இராணுவ வீரர்கள் போன்று உடையணிந்து தாலங் நகரச் சுவர்கள் அருகில் நிலை கொண்டு தாக்கத் தயாராகுமாறு உத்தர விட்டனர். ஆனால் அத்தீவின் பாதுகாப்பு பலத்தை அறிந்து கொண்ட பர்மியத் துருப்புகள் தாக்குதல் நடத்தாது பின்வாங்கினர். உணவுப் பற்றாக்குறையும் அவர்கள் பின்வாங்க மற்றொரு காரணமாக அமைத்தது அதில் இருந்து அவ்விரு பெண்களும் நாட்டின் வீராங்கனைகளாக மதிக்கப்பட்டனர். அத்துடன் அவர்களுக்கு ரமா அரசிடமிருந்து தோ தெப் காஸற்ரி மற்றும் தோ சி சுன்தோன் என கௌரவப்பட்டங்கள் கிடைத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2000 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குடிசன மதிப் பீட்டின் படி பூகெட்டின் சனத்தொகை 2,49,446 பேராகவும், 2010 ஆம் ஆண்டின் சனத்தொகை 5,25,709 பேராகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்சமயம் இத்தீவில் 6 இலட்சம் பேர் வாழ்கின்றரெனினும் பதிவுசெய்யப்பட்ட தாய் மக்கள் 2012 ஆம் ஆண்டில் 360,905 பேர் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

## பூகெட்டின் பிராந்தியங்கள்

பூகெட் மேற்பகுதி : (பாங் தோ, கமலா, கறொன், கற்றா (kata), லேம் சிவ், மாய் கோ, நய் தொன், நய் யங், பேற்றங் சுறின்) இப்பிராந்தியம் உலகம் எங்கணும் அறிந்த ஒன்றாக உள்ளது. அமைதியான கடற்கரைகள் இப்பிராந்தியத்தில் உள்ளன. சில அமைதியாகத் தோன்ற, சில வருடாந்தம் பல்லாயிரக்கணக்கான உல்லாசப்பயணிகள் வருவதால் பூரணமாகப் பழுதடைந்து தோன்றுகிறது. ஆசியாவில் பகுதி ரீதியான தலைநகரங்களில் பாடொங்கும் (Patong) ஒன்றாகும்.

தென் கிழக்கு பூகெட் (சாலொங் விரிகுடா) பன் வாடோ, நய் ஹங், ரவாய், யா நுய்) பயணத்திற்கு பெறுமதியான கடற்கரைகள் இங்குள்ளன. மிகப்பெரும் நகரமாக விளங்குவது சாலொங் குடா ஆகும். பி பி தீவுக்குப் போகும் வள்ளங் களுக்கு இக்குடா ஒரு துறைமுகமாக விளங்குகிறது.

பூகெட் தீவின் உட்பகுதி அழகான கடற்கரைகள், தெளிந்த தண்ணீர், பவளப் பாறை, காடுகள், முத்துவிளையும் பகுதி, சுண்ணக்கல் செங்குத்துப் பாறை, குகை கள், மீன்பிடிக் கிராமங்கள் மற்றும் தேசியப்பூங்கா ஆகியன இங்குள்ளன.

சாலொங் குடா பூகெட்டின் மிகப் பிரபலமான படகுகள் தரிக்குமிடமாக இருப்பதுடன், இத்தீவுக்கு அப்பால் உள்ள தீவுக்குமான வழியாகவும் உள்ளது.

இத்தீவின் 70 சதவீதமான பகுதி மலைப் பிரதேசங்களாகவே உள்ளன. வடக்கில் இருந்து தெற்காக இம்மலைகள் தொடர்ச்சி யாகக் காணப்படுகின்றன. மிகுதி 30 சத வீதமான பகுதி சமவெளியாகும். இவை மத்திய பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் காணப்படுகின்றன. அங்கு மொத்தமாக ஒன்பது சிறிய நீர்த்தேக்கங்களும், சிற்றருவி களும் காணப்படுகின்றன. பிரதானமான நதி ஏதும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60 சதவீதமான பகுதியில் காடுகளும் இறப்பர், பாம் எண்ணெய் பயிர்ச் செய்கை களும் உள்ளன. மேற்குக்கரையோரப் பகுதியில் சில மணற்பாங்கான கடற்கரைகள் காணப்படுகின்றன. தென் முனைப் பகுதிக்கு அருகே, ஒரு பிரபலமான காட்சிப் பகுதியான பிரம்மாவின் முனை (Brahmas Cape) உள்ளது.

பூகெட்டின் மிகப் பிரபலமான உல்லாச இடப்பகுதி மத்திய மேற்குக் கரையோரமாக உள்ள பட்டொங் (Patong) கடற்கரையாகும். இப் பகுதியில்தான் பூகெட்டின் பெரும் பாலான இரவுநேர கேளிக்கை நிகழ்வுகளும், பொருட்கள் கொள்வனவுகளும் இடம் பெறுகின்றன. அத்துடன் இப்பகுதி மேலும் அபிவிருத்தி கண்டு வருகின்றது.

தாய்மொழியில் பட்டொங் என்றால் வாழை இலைகள் நிறைந்த காடு என்ப தாகும்.







இத்தீவில் சில விழாக் களும் ஆர்வமாகக் கொண்டாடப்படுகின்றன. அதில் ஒன்று பர்மிய ஆக்கிரமிப்பாளர்கள், தீவை ஆக்கிரமிக்கப் போர் தொடுக்க வந்தபோது அவர்களை எதிர்க்கும் வகையில், போர்க்களத்தில் திரட்டிப் போராடத் தயாரான இரு வீராங்கனை களையும் நினைவுகூரும் வகையில் பிரதி வருடமும் மார்ச் 13 ஆம் திகதி நடத்தப் படும் கண்காட்சியாகும்.

அடுத்தது மரக்கறி விழா அல்லது ஒன்பது மன்னர் தெய்வங்களின் விழா. ஒன்ப தாவது சீன சந்திர மாதத்தின் முதல் நாளன்று (செப்டம்பர் முதல் நாள் அல்லது அக்டோபர் முதல் நாள்) இது கொண்டாடப் படுகிறது. பூகெட் வாசிகளான சீன வம்சாவளியினர் ஒன்பது நாள் மரக்கறி உணவை உட்கொண்டு எதிர்வரும் வருடம் பிரச்சினையின்றி விளங்க, தம்மைத் தூய்மைப் படுத்திக்கொள்ள மேற்கொள்ளும் ஒரு நடைமுறை யாகும். இக் கொண்டாட்ட காலத்தில் தீமிதிப்பு, கூரிய வாள்முனை கொண்ட ஏணிப்படிகளில் ஏறுதல் உட்பட சில புனித காரியங்களை மேற் கொள்வர்.

மற்றையது ஆவிகளை சாந்தப்படுத்தும் கொண் டாட்டம். முன்னோரின் ஆவிகளை வழி படும் இக்கொண்டாட்டம் 7 ஆவது சீன சந்திர மாதத்தின் நடு நாளில் நடைபெறுகிறது. மரக்கறி உணவினை குடும்பத்தில் இறந்தவர்களுக்குப் படைப்பது, ஊதுபத்திகளை கொளுத்துவது, உலாவரும் ஆவி களுக்கு உடைகள், தங்கம் மற்றும் பொருட்களை வைப்பது போன்ற நடவடிக்கைகள் இக்கொண்டாட் டத்தின் போது இடம்பெறுகிறது. கண்காட்சிகள், களியாட்டங்கள், படகோட்டும் விழா என்பனவும் இடம்பெறுகின்றன.

[நன்றி இணையம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ்.ஜெயபதி
சிட்னி

# ஆங்கில இலக்கியவாதி லெனாட் வூல்ப் (Leonard Woolf) நினைவுகளும் அவர்தம் யாழ்ப்பாண அனுபவங்களும்

இருபதாம் நூற்றாண்டில், குறிப்பிடக்கூடிய ஆங்கில இலக்கியவாதியாகக் கருதப்படுபவர் லெனாட் வூல்ப். இவர் ஆங்கிலேயரின் நிர்வாக அமைப்பின் ஓர் அங்கமாக, யாழ்ப்பாணத்தில் கடமையாற்ற முதலில் அனுப்பிவைக்கப்பட்டார். அங்கு சுமார் 30 மாதம் சிவில் சேவைப் பயிலுனராக (C.C.S Cadet) கடமையாற்றியுள்ளார். பின் பதவி உயர்வு பெற்று, கண்டியிலும் அம்பாந்தோட்டையிலும் வேலை செய்துள்ளார். இலங்கையில் இவர் கடமையாற்றிய காலம் ஏழு ஆண்டுகளாகும். இவரது எழுத்துகள் ஆங்கிலத்தில் தத்ரூபமாகப் பதிவாகியுள்ளன. அதன் மூலம் நூறு ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் வாழ்ந்த மக்கள் பற்றியும் அன்றைய சமுதாய நிலைமைகள் பற்றியும் நாம் அறிய வாய்ப்புண்டு.

### இளமைக் காலம்

யூத இனத்தைச் சேர்ந்த பிரபல நியாயவாதி சிட்னி வூல்ப் இவரது தந்தையாவார். தாயாரின் பெயர் மாறி என்பதாகும். இவர்களுக்கு எல்லாமாகப் 10 பிள்ளைகள் பிறந்தனர். மூன்றாவது பிள்ளைக்கு லெனாட் என்று பெயரிட்டனர்.

பாடசாலைக் கல்வியின் பின், கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்துத் திருத்துவக் கல்லூரியில், கலைமாணிப் பட்டம் பெற்றார். பின்பு இலங்கைச் சிவில் சேவையில் இணைந்து 1904 இல் கொழும்பு வந்தடைந்தார்.இவர் இலங்கைக்கு வரும்போது, அன்பாக வளர்த்த சாளி (Charlie) என்னும் நாயையும் அழைத்து வந்தார். அத்துடன் பிரெஞ்சு தத்துவ ஞானி வோல்டயர் (Voltaire) அவர்களின் ஆக்கங்களான 90 நூற்தொகுதிகளையும் எடுத்து வந்துள்ளார். இவர் வாழ்ந்த இடங்களுக்குப் பாதுகாப்பாக இவற்றை எடுத்துச் சென்றுள்ளார். ஏழு வருடங்களின் பின் தாயகம் திரும்பும்போது இவற்றை நல்ல நிலையில் திருப்பி எடுத்துச் சென்றுள்ளதாகத் தனது சுயசரிதையில் பதிவு செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *யாழ்ப்பாணம் வருகை*

வூல்ப் ஜனவரி1905 இல் கொழும்பிலிருந்து தனது பிரயாணத்தை யாழ்ப்பாணத்திற்கு மேற்கொண்டார். அந்த நாட்களில் கொழும்பிலிருந்து புகையிரத சேவை அனுராதபுரம் வரைக்கும் நிலவியது. அதே போன்று யாழ்ப்பாணத்திலிருந்து ஆனை யிறவுக்கு மாத்திரமே இச்சேவை நிலவியது. இடைப்பட்ட சுமார் 100 மைல் தூரத்தை, 'மெயில் கோச்' என்றழைக்கப்பட்ட இரட்டை மாட்டு வண்டியில், சுமார் 36 மணி நேரம் செலவு செய்து, பயணிகள் கடக்க வேண்டும். பொதிகள், நாய் சாளி சகிதம் இவர் பிரயாணம் செய்தவேளை 'மெயில் கோச்சில்' சக பிரயாணியாக வேறு ஒருத்தர் மாத்திரமே இருந்தார்.

### *பூனகரி வாடியடி - சங்குப்பிட்டி வீதி அமைத்தல்*

யாழ் அரச அதிபராக இருந்த J.P.லுயிஸ் மேற்படி வீதி அமைக்கும் பொறுப்பை 1906 இல் வூல்ப் அவர்களிடம் ஒப்படைத்தார். இப்பிரதேச மக்களின் நலன் கருதி, சுமார் ஐந்து மைல் கடலூடாகச் செல்லும் வீதியை (Cause Way) அமைக்கும் நடவடிக்கையில், இவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். வேதனமாக இவர்களுக்கு அரிசி வழங்கப்பட்டது.

இப்பணியின் நிமித்தம் மாதமிருமுறை வூல்ப் பூனகரிக்குச் செல்லவேண்டியிருந்தது. ஒருமுறை இப்படிச் சென்றபோது இவர் நெருப்புக் காய்ச்சலுக்கு (Typhoid) ஆளானார். சிகிச்சைக்காக இவர் மானிப்பாயிலுள்ள கிறீன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியசாலையில் அப்போது பயிற்றப்பட்ட தாதியாக ஒரு தமிழ்ப் பெண்மணி மாத்திரமிருந்தார். அப்பெண்தாதி வூல்ப்புக்குக் கிட்ட வரவே வெட்கப்பட்டார். அதனால் தாதி செய்ய வேண்டிய பதிவுகளைத் தானே மேற்கொண்டதாக எழுதியுள்ளார். இவருக்குக் கீழ் வேலை செய்யும், தலைப் பாகை அணிந்த மூன்று விதானைமார் சுகம் விசாரிக்க வைத்தியசாலைக்கு வந்திருந்தனர். வூல்ப் இறக்க இருப்பதாகவும் அதற்கிடையில் தமது இறுதி மரியாதையைச் செலுத்த வந்ததாகவும் இவர்கள் கூறினர் என்று, வூல்ப் நகைச்சுவையாகப் பதிவு செய்துள்ளார். இவர் சுகமாகிச் சில நாட்கள் மலை நாட்டில் கழித்த பின் மீண்டும் தனது கடமையில் ஈடுபட்டார்.

### *யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் எழுப்பிய முறைப்பாடு*

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், லெனாட் வூல்ப்பை வேலை நீக்கம் செய்யக் கோரி, தேசாதிபதிக்கு இரண்டு தரம் முறைப்பாடு செய்திருந்தது. கச்சேரி விறாந்தையில்துப்புவது தடைசெய்யப்பட்டிருந்தது. அதனை மீறி இலிகிதர் ஒருவர் அங்கு துப்பிவிட்டார். கட்டாயப்படுத்தித் துப்பியவரைக் கொண்டு, அவ்விடத்தை வூல்ப் சுத்தம் செய்வித்தார். இத் தண்டனையைக் கடுமையானதாக சங்கத்தினர் கருதினர்.

யாழ்ப்பாணத்தில் அக்காலத்தில் பெரிதும் மதிக்கப்பட்ட வழக்கறிஞர் திரு.ஹரி சந்திரசேகரா. இவர் குதிரை வண்டியில் வரும்போது எதிர்ப் புறமாகக் குதிரைமேல் சவாரி செய்த வூல்ப், வேண்டுமென்று திரு.சந்திரசேகராவின் முகத்தில் குதிரைச் சவுக்கால் அடித்துவிட்டுப் போனார் என்று பாரதூரமான குற்றச்சாட்டொன்று சுமத்தப்பட்டது.

தனது குதிரை வெருண்டதாகவும், அதை அடக்கி ஆளும்போது சவுக்கை உபயோகித்ததாகவும், அவ் வேளை தான் திரு. சந்திரசேகராவின் வருகையைக் காணவில்லை என்றும், எழுத்து மூலம் வூல்ப் தேசாதிபதிக்கு விளக்கம் கொடுத்தார். வூல்ப்பின் விளக்கத்தை அன்றைய தேசாதிபதி ஏற்றுக் கொண்டார். ஆனால் யாழ் தமிழ்ச் சங்கம் இவரது விளக்கத்தை ஏற்றதாகத் தெரியவில்லை.

### *எழுத்துத்துறைப் பிரவேசம்*


அம்பாந்தோட்டை உதவி அரச அதிபராகச் சுமார் மூன்று ஆண்டுகள் (1908 -1911) கடமையாற்றிய பின், வூல்ப் விடுமுறையில் இங்கிலாந்து சென்றார். 20 ஆம் நூற்றாண்டு நடுப்பகுதியில் சிறப்பான ஆங்கில இலக்கியவாதியாகக் கருதப்பட்ட வேஜீனியா ஸ்டீபன் (Virgenia Stephen) என்பவரை 1912 இல் திருமணம் செய்துகொண்டார். இதனை அடுத்துத் தனது வேலையை இராஜினாமா செய்தார்.

1913 இல் இவரது முதல் நாவலான 'The Village in the Jungle' வெளியானது. இந்த நாவல் அம்பாந்தோட்டையில் கஷ்டங்கள் மத்தியில் வாழும் வறிய வேடுவர்களின் கதை. கவரக்கூடிய எளிய ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இந்த நூல், சில காலம் இலங்கைப் பாடசாலைகளில் பாடநூலாக இருந்தது.

பிரபல்யமான காலம்சென்ற இலங்கை இயக்குனர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், 1980 இல் 'பத்தேகம' என்று பெயர் சூட்டி இக்கதையைச் சிங்கள மொழியில் படமாக்கியுள்ளார். அன்றைய பிரபல சிங்கள நடிகர்கள் இப்படத்தில் நடித்துள்ளனர். இலங்கையில் நீண்டகாலம் வாழ்ந்த எழுத்தாளர் ஆதர்.சீ.கிளாக் வெள்ளை நீதிபதியாக இப்படத்தில் நடித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவில் சேவை நிர்வாகியாகக் கடமைபுரிந்த லெனாட் வூல்ப் ஒரு சமயம் நெருப்புக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு மானிப்பாய் கிறீன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அப்போது அங்கு பயிற்றப்பட்ட தாதியாக ஒரு தமிழ்ப் பெண் மாத்திரமே இருந்தார். அந்தத் தாதி வூல்ப்புக்குக் கிட்ட வரவே வெட்கப்பட்டாராம். எனவே, தாதி செய்ய வேண்டிய பதிவுகளைத் தானே செய்ததாக வூல்ப் தனது சுயசரிதையில் குறிப்பிட்டிருந்தார்.




### ஏகாதிபத்திய எதிர்ப்பு

இலங்கையிலிருந்து திரும்பிய வூல்ப் மனைவி வேஜீனியா மற்றும் பிரபல்யமான ஆங்கில எழுத்துத்துறையைச் சேர்ந்தவர்கள் ஒன்று கூடி புளூம்ஸ்பெரி அணி (Bloomsberry Group) என்ற அமைப்பை ஏற்படுத்தினர். இவர்கள் பல புது விதமான ஆங்கில இலக்கியங்களை வெளியிட்டதாக அறியமுடிகிறது. இக்காலப் பகுதியில் வூல்ப் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்ததாகத் தோன்றுகிறது. முதல் நாவலைத் தொடர்ந்து வூல்ப் அரசியல், தத்துவம், வரலாறு அடங்கலாக இலக்கிய நயம் பொதிந்த 15 நூல்களுக்கு மேல் எழுதியுள்ளார். அவற்றை விட, பல சிறுகதைகள், பத்திரிகை விமர்சனங்கள், 'கோட்ட' என்றொருநாடகம் ஆகியவற்றையும் ஆக்கியுள்ளார். உலக நாடுகள் ஒன்று சேர்ந்து ஐக்கிய நாடுகள் சபையை 1945 இல் உருவாக்கினார்கள். இதற்கு முன்னர் 1920 இல் 'The League of Nations' என்ற பன்னாட்டுச் சபை இருந்தது. இச்சபை உருவாவதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்னரே, வூல்ப் இத்தகைய சபையின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். இவரது தீர்க்க தரிசனம் போற்றப்பட வேண்டியதாகும்.

### வேஜீனியாவின் மறைவு

திருமணமாகி 30 ஆண்டுகளுக்குள் கடும் மனநோயினால் பாதிக்கப்பட்ட இவரது மனைவி வேஜீனியா, ஒரு கடிதத்தை எழுதி வைத்துவிட்டு ஆற்றில் மூழ்கித் தற்கொலை செய்து கொண்டார். 1941 இல் நிகழ்ந்த வேஜீனியாவின் மறைவினால் கணவன் வூல்ப்பும் ஆங்கில இலக்கிய வட்டத்தினரும் பெரும் இழப்பைச் சந்தித்தனர்.

மனைவியின் மறைவுக்குப் பின் வூல்ப் மீண்டும் திருமணம் செய்யவில்லை. ஆனால் வேறு ஒரு திருமணமாகிய ஆங்கிலப் பெண்ணுடன் மிக நெருக்கமாக இருந்துள்ளார் என்ற தகவல்களுண்டு.

அக்காலத்தில் உதவி அரசாங்க அதிபர்களாக (AGA) கடமை ஆற்றும் அதிகாரிகள் எல்லோரும், ஒவ்வொரு நாள் நிகழ்வுகளையும் தமது நாட் குறிப்பில் (Diary) பதிவு செய்யவேண்டிய நியதியிருந்தது. இத்தகைய அதிகாரிகளின் நாட் குறிப்புகள் ஆயிரக்கணக்கில் கட்டுக்கட்டாக இலங்கைக் காப்பகங்களில் (Archives) இருக்கின்றன. அப்படியிருந்தும் லெனாட் வூல்ப் அவர்களின் நாட் குறிப்புகள் மாத்திரமே அச்சுவாகனமேறி யுள்ளது என்பது நோக்கத்தக்கது.

### அரை நூற்றாண்டின் பின் இலங்கை வருகை

வூல்ப் 53 வருடங்களின் பின் 1960 இல் மீண்டும் இலங்கைக்கு வருகை தந்தார். இவரது வருகைக்கு நான்கு மாதத்திற்கு முன் அன்றைய பிரதமர் S.W.R.D.பண்டாரநாயக்கா கொலை செய்யப்பட்டிருந்தார். வந்தவர் காபந்து பிரதமர் டபிள்யு. தகநாயக்காவைச் சந்தித்தார். இவரது சுயசரிதை ஐந்து பகுதிகளாக வெளி வந்துள்ளன. இலங்கையில் வாழ்ந்த காலப்பகுதிக்கு 'வளருதல்' (Growing) என்று பெயரிட்டுள்ளார். இப்பகுதி 1961 இல் வெளியானது. அந்த நூலில் தேசாதிபதி சேர் ஒலிவர் குணத்திலக்காவுக்கும் உள்நாட்டுச் செயலாளருக்கும் நன்றி கூறியுள்ளார்.

இலங்கை வருகையின்போது, வூல்ப் மன்னாருக்குப் போகும் வழியில், அனுராதபுரம் வாடிவீட்டில் சேர். கந்தையா வைத்தியநாதனைச் சந்திக்க நேர்ந்தது. புனருத்தாரணம் செய்யப்படும் திருக்கேதீச்சர ஆலயத்தை வந்து காணுமாறு சேர் வைத்தியநாதன் அழைப்பு விட்டார். அங்கு சென்ற வேளை தான் யாழ்ப்பாணத்தில் முன்பு அறிந்திராத திருவிழாக்களின் மகிமைகளையும், கோயிலில் காணப்பட்ட குறியீடுகள் (Symbolism) பற்றியும் திரு. வைத்தியநாதன் தனக்கு விரிவாக விளங்கப் படுத்தினாராம்.

80 வயதான லெனாட் வூல்ப், தாயகம் திரும்புமுன் இலங்கையில் தான் இளமையில் கடமையாற்றிய வேளையிலிருந்த எவரையும் நேரில் சந்திக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டைரக்டர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் லெனாட் வூல்ப்பின் ''காட்டில் ஒரு கிராமம்'' என்ற நாவலை 1980 இல் ''பத்தேகம'' என்ற பெயரில் திரைப்படமாக்கினார். அதில் இடம்பெற்ற ஒரு காட்சி...




இயலும் என்றெண்ணி இருக்கவில்லை. இவர் தாயகம் திரும்பிய தினத்திற்கு முதல் நாள், சற்றும் எதிர்பாராத ஒருவர் இவரிடம் வந்து, 50 வருடங்களுக்கு முன்பு தான் அம்பாந்தோட்டை மாஹம் பற்று முதலியாராக (ஆராய்ச்சியாக) இவருக்குக் கீழ் வேலை செய்ததை நினைவு படுத்தினார். அந்த நாட்களில் நடந்த ஒரு சம்பவத்தை ஞாபகப்படுத்தினார். அப்போது தனக்கு அளவுக்கதிகமான தண்டனை வூல்ப்பினால் கொடுக்கப்பட்டதாம். அதனால் தனக்கு முறையான நீதி வழங்கப்படவில்லை என்று, தனது 50 வருட மனக்குறையை வெளிப்படுத்தினார்.

## கௌரவங்கள்

1964 இல் வூல்ப் அவர்களுக்கு சசெக்ஸ் (Sussex) பல்கலைக்கழகம் கௌரவ முனைவர் (கலாநிதி) பட்டம் வழங்கியுள்ளது. அடுத்த ஆண்டு இவருக்கு 'Fellow of the Royal Society of Literature' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. 1966 ஆம் ஆண்டு மகாராணியால் வழங்கப்பட்ட 'Companion of Honour' என்ற பட்டத்தை இவர் ஏற்க மறுத்துவிட்டார்.

## இறுதிக்காலம்

1969 ஏப்பிரல் 14 ஆம் திகதி பக்கவாத நோயினால் (Stroke) பாதிக்கப்பட்ட இவர் காலமானார். அப்போது இவருக்கு 88 வயது. இவரது அஸ்தி சசெக்ஸ் என்னுமிடத்தில், மனைவி வேஜீனியா வூல்ப் அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்திற்கு அருகில் வைக்கப்பட்டது. இவரது மார்பளவு உருவச்சிலையை அங்கு இன்று காணக்கூடியதாக உள்ளது.

## முடிவுரை

மழை விட்டும் தூவானம் போகாமலிருப்பது போல இவர் இறந்த பின்பும், இரண்டு வழக்குகள் நடைபெற்றன. ஒன்று இவரது மரணசாசனத்தைத் தட்டச்சு செய்தவர், ஒரு சுழியத்தை (Zero) கூடுதலாகப் பதிந்ததால் வந்த வினை.

இரண்டாவது, இவரது கடிதங்களை வைத்திருந்தவர் அக்கடிதங்களை, உரியவர்களின் சம்மதமின்றி சட்டத்திற்கும் நடைமுறைக்கும் விரோதமாக விற்ற காரணத்தினால் ஏற்பட்ட வழக்கு.

இன்று வூல்ப்பின் ஆக்கங்கள் பல சசெக்ஸ் பல்கலைக்கழகத்தின் வசமுள்ளன. லெனாட் வூல்ப் இலங்கை மக்களின் மனதிலும், ஆங்கில இலக்கிய வாதிகள் மத்தியிலும் ஏற்படுத்திய தாக்கம், பல காலம் நீடிக்குமென்பது உறுதி.

## உதவிய நூல்களும் கட்டுரைகளும்

1. Leonard Woolf, Growing, An Autography of the years 1904 to 1911.
   The Hogarth Press, London, 1977.
2. Wikipedia
3. Leonard Woolf Diaries in Ceylon 1908 – 1911.The Ceylon Historical Journal, Nos 1 - 4
   July 1959 to April 1960
4. Reading Woolf between the lines
   Reviewed by: Sriskanthadas Bhagavadas (Australia)
   The Nation Eye, Sunday February 25, 2007; Sri-Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருஸ்ரீ கலையகம் வழங்கிய

# "அஹிம்சா"

காந்திஜியின் 150 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு டாக்டர் அருந்ததி ஸ்ரீ ரங்கநாதனை பணிப்பாளராகக் கொண்ட அருஸ்ரீ கலையகம் கொழும்பு, இந்திய உயர் ஸ்தானிகராலயத்துடன் இணைந்து எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) பிரைவேட் லிமிடெட்டின் ஆதரவுடன் கொழும்பு பிஷப் கல்லூரி கேட்போர் கூடத்தில் "அஹிம்சா " எனும் பரதநாட்டிய நிகழ்ச்சியை மார்ச் 22 ஆம் திகதி சிறப்பாக நடத்தியது. இதில் பிரபல நர்த்தகி திருமதி. ரமா வைத்தியநாதன் விசேட அதிதிக் கலைஞராகக் கலந்து நடன விருந்தளித்தார். அதில் இடம்பெற்ற நடன நிகழ்ச்சிகள் சிலவற்றைப் படங்களில் காணலாம்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Divine Path

**T.Sivapragasam**

What is divine path? It is an open unlimited path to make human nature divine. What do we mean by divine nature? It is the reflection of divine qualities while moving and interacting with others. What are divine qualities? They are divine virtues and values, the most decorative ornaments that make the human nature divine. Once, I met a retired senior teacher who lost her husband and said that he is divine for her. What does this mean? This is for our reflection. In another incident, 22 years ago, a senior citizen, catholic by religion stopped me while returning from meditation class and asked what is going on in your meditation centre. I said they teach about divinity. The senior citizen who seemed so happy said, as a catholic would like to learn more on divinity. Just saying the magical word 'Divinity' starts the healing process within. Divinity is sacred, holy or purity. It is interesting some of us believe divinity is something godly and beyond our reach. Divinity is within our reach when we can become part of divine qualities. Philosophy says that we are divine beings but are we? Divinity is a subtle power inherent in every human. Just imagine how blessed we can be if we can become truly divine. Nothing is impossible with spiritual approach. So become divine and make others divine.

Inner transformation occurs when virtues are in action. If we unfold the map of the world, we can see more and more devilish activities taking place across the globe. Divine activities can control devilish. Divine should reveal royal manners.Whether can live divine life now or not, preparation to reach such stage benefits all at least by means of divine vibrations.

Peace, love, mercy, kindness and happiness



*Nothing is impossible with spiritual approach.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*Bringing benefit to others is the greatest charity of all.*

are some of the natural qualities of humans. However, the acquired qualities such as lust, ego, anger, greed and arrogance have deep-seated within and generate vices like jealousy, hatred, violent and so on. This is the curse and cause of today's suffering. When you think, speak and do along the same line, there is purity. This therefore, plays a significant role in the process of inner development. Purity will exist when relationship and connection are transparent and the vision pure. Relationship is not limited with people alone, but the relationship with God the Absolute power is the most significant.

Today, human relationships are such that we are unable to relate to each other. We have become unable to understand the feelings of others, unable to accept and accommodate one another; unable to help in the time of need; unable to share and celebrate. This is because hearts have become heavy. The river of feelings has reduced itself to a mere well of feelings. Even this well is becoming dried up because of our own disorders. As a result, minds are set far apart. Who is responsible for such a state? We are the cause. Purity in any relationship enables a connection to be made, with feelings of loving, caring and sharing. Hence 'as is the relationship so is the connection'. It is purity that holds the relationships and connections.

Become holy and make others holy. When I think of the word 'holy', my thoughts travel back to my days as a student. When I was ten years old, I used to pass a leading convent known as 'Holy Family Convent' on my way to school. What is interesting here is that the word 'holy' made me think that members of this convent must be somewhat better than-others. Holiness is greatness.




Remembering is the link between God and us. If the link is firm and constant, it enables us to draw power from the Divine, the Source of Power, just as we draw electrical power from power stations. We are able to think and remember human beings easily but not God the Father, Benefactor and Liberator, as we are drawn towards mundane things. Apart from remembering, heart to heart conversation is the purest and easiest form of meeting the Highest on High Father. We cannot exist without Divine Power. This is the Power that activates the divine within and in this process; our presence alone can do wonders more than words or action. Bringing benefit to others is the greatest charity of all.

Reflecting on the difference between what I should do and what I am doing is good for self-progress. However, the gap is widening between these two. Am I able to discern between right and wrong? Good and bad, real and unreal, virtuous and vicious, righteous and unrighteous. Spiritual principles and values open the path to differentiate and do what is good and right.

We can easily identify the loss of divinity is the curse and cause of all problems. It is a matter of deep concern where people turn to

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



*Let us make the inner beauty shine over the physical beauty.*

devilish. Maybe, we distance ourselves from the Divine but God never distant himself from us. Can the creator create distance between Him and His creations?

Some may question how divinity is possible in a world of sound, turmoil, conflicts and with many disorders are the order of the day. The 'divine form' absorbs all forms of opposition in life harmoniously to bring effective transformation. The positive vibrations of such divine sources negate the intensity or ill effects of negativity. Divinity holds further deterioration. We need not break our heads thinking whether divinity is possible or not, instead of such an attitude, let us do something good and beneficial for us and others by giving a gentle smile to us. Above all, if liberation is in a second and enlightenment is now, this moment, as said by Buddha to a seeker, "why can't divinity in a second". In spiritual, sense everything in a second.

What is the solution? Love you to donate love; be merciful to have mercy on others; experience peace to donate peace; be happy to share happiness; be positive to make others feel the same. Sweetness or kindness in words, gentleness in approach, essence in expression and above all a refined character are some to reflect the divine stage. Hence, let us make the inner beauty shine over the physical beauty.

One dayI was walking along the highway and I observed the words 'Divine meals' written on a wooden board hanging outside an eating house. Out of curiosity, I asked about such meals from the manager who said that the word "divine" attracts many customers. It is interesting how divinity also plays a role in the world of advertising.What is worse is that we are prepared to do anything to achieve what we want, regardless of morals. Looking at the world today, the phrase 'anything can happen at any time'seems appropriate.

Human history shows us that divinity is nothing new. We lived a divine life here at a point in time in the course of human history. The period is known as the "Satya yug" (Golden Age). The civilized inhabitants then lived a virtuous life with total happiness.

Nevertheless, sow the seeds of divinity now to bring a transformation in the world`s disorder. Just as a seed planted now offer its fruits later, the seeds of divinity planted now will yield its benefits now and in the future. Hell and Heaven are here. All our spiritual exercises are to move from Hell to Heaven means, from devilish to Divine. We need not carry the world but those of us who are spiritually awakened and in constant spiritual awareness, surely can continue to sow seeds of divinity to see a better world. Divinization is a process.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பண்டிகைக் காலத்தை முன்னிட்டு இறக்குமதி செய்யப்பட்ட தரமான பேரீச்சம்பழங்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் மிக மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.




**DELIGHTING THE WORLD WITH DATES**

## எம்மிடம் உள்ள வகைகள்

- Safawi Dates
- Ajwa Premium
- Ajwa No.1
- Mabroon Dates
- Algerian Dates
- Maryam Dates
- Sagai Dates
- Medjool Dates
- Sukkari Dates
- Barari Algerian Dates
- Date Syrup
- Kimia Dates

இன்னும் பலவகையான ஈச்சம்பழங்கள்

**நாடு பூராகவும் விநியோகஸ்தர்கள் தேவை**

**ஈச்சம்பழத்தை தினமும் உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்தி உங்கள் வாழ்க்கையின் ஆரோக்கியத்தை அனுபவியுங்கள்.**

## Best Food Marketing (Pvt) Ltd.

No.32/A, Old Moor Street, Colombo - 12. | Tel : 011 2441277 | Fax: 011 2441979
E-mail: bestfoodmarketing@yahoo.com | datecrownsrilanka/
datecrownsl?utm_source=ig_profile_share&igshid=ea8lzodinlio

**போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்! தரமான ஈச்சம் பழங்களை பார்த்து வாங்குங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Right Place for Right Choice

சரிட்டா டெக்ஸ்டோரியம் (பிரைவேட்) லிமிடட்

இல.99, மெயின் வீதி, கொழும்பு - 11. தொ.பே: 2446023 | பெக்ஸ்: 2435364

இணையத்தளம்: www.saritatex.com www.facebook.com/saritatextorium

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

PRINTED AND PUBLISHED BY EXPRESS NEWSPAPERS (CEY) PVT, LTD. NO - 267, RAJA MAWATHA, EKALA - JA - ELA